



# IBC தமிழ்
## பத்திரிகை


NIORRA
Textiles & Jewellery GmbH
FRANKFURT & DORTMUND


15/08/2017 | திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 30 | இதழ் 006 | பிரசுரம் : ஐரோப்பா | இலவசப்பிரதி


கேவிலார் : அருள் நிறைந்த மரியே..



பக்கம் 21...

# தீவிரமடையும் முரண்பாடுகள்

## 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தமும்: நல்லாட்சி அரசும்



ஸ்ரீலங்காவில் ஆட்சிக்காலம் முடிவடையும் மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்காது உடனடியாக நடத்துமாறு அழுத்தங்கள் தீவிரமடைந்து வருகின்றன.

ஸ்ரீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினர் மாத்திரமன்றி, மைத்ரி – ரணில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இரு பிரதான அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களே மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்காது உரிய காலத்தில் நடத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே தினத்தில் நடத்தும் வகையில் ஸ்ரீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்டுள்ள 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்படும் வரை ஆட்சிக்காலம் முடிவடையவுள்ள மாகாண சபைகளின் ஆட்சி அதிகாரத்தை நாடாளுமன்றம் பொறுப்பேற்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் கடந்த முதலாம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம்

தொடர்ச்சி 06 ஆம் பக்கம்...



p09 மரணஎச்சரிக்கை | p12 மோதிப்பாரு | p17 உறவுப்பாலம் | p24 சந்திப்பு | p34 திறனாளிகள்


SHELVAZUG GmbH
CREDIT + INSURANCE + REAL ESTATE
SONNMATT 19, 6343 ROTKREUZ
Tel: 041 790 64 63, Tel: 041 790 63 66
Fax: 041 790 64 68, Nat: 079 514 64 28
Email: shelvazuggmbh@bluewin.ch
Web: www.shelvazug.com

CARLTON LEISURE
Worldwide Travel & Tours
020 8100 0000
www.carltonleisure.com

TAMIL FOOD THAYA
Sri Lankan & Indian Food
Delivery in Belgium & The Netherlands
Teilingerstraat 67A
3032 AT Rotterdam
The Netherlands
010 46 60498
068 62 03203








SEP 9 2017
THE sse ARENA
DOORS OPEN @5PM
Vijay Yesudas
Santosh Hariharan
Jithin Raj
Anthony Daasan
Sunitha Sarathy
Vaikom Vijayalakshmi
Vandana srinivasan
Pooja Vaidyanath
Maalavika
Vectone mobile
MUSIC BOSS D IMMAN
LIVE IN LONDON
Lebara play
subara
FOR TICKETS : 07387160338 / 07474046257 / 07438362263 / 07957122065
07496410996 / 07989225518 / 07867911591
PARTNERS
IBC தமிழ்
MIKA EVENTS
DD
MIA
TICKETING PARTNER
bluefeather STUDIOS
axs.com

# றுவண்டாவிடம் இனப்படுகொலைக்குப் பின்னரான நல்லிணக்கப் பாடம் கற்றுக்கொள்ளும் படையினர்

தமிழ் மக்களுக்கு எதிராக இனப் படுகொடுலைகளை கட்டவிழ்த்துவிட்ட குற்றச்சாட்டுக்களுக்கு முகம்கொடுத்துள்ள ஶ்ரீலங்கா அரச படைகளின் உயர் அதிகாரிகள் குழுவொன்று, றுவண்டாவில் இலட்சக் கணக்கான டுட்சி இன மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட நல்லிணக்கம் தொடர்பில் கற்றுக்கொள்வதற்காக அங்கு சென்றுள்ளது.

ஶ்ரீலங்காவும் றுவண்டாவைப் போன்ற கொடூரத்திற்கு முகம்கொடுத்ததாகத் தெரிவித்துள்ள ஶ்ரீலங்கா படை அதிகாரிகளின்தூதுக் குழுவிற்கு தலைமை தாங்கி சென்றுள்ள கேர்ணல் கித்சிறி ஏக்கநாயக்க, இனப்படுகொலைக்குப் பின்னர் றுவாண்டாவில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட்டது தொடர்பில் கற்றுக்கொள்வதற்காக தாம் றுவண்டா வந்துள்ளதாக றுவண்டா ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஶ்ரீலங்கா படைகளின் கட்டளை அதிகாரிகளுக்கான உயர் கற்கைகளுக்கான கல்லூரியின் தலைமை இணைப்பு அதிகாரியான கேர்ணல் கித்சிறி ஏக்கநாயக்க தலைமையிலான ஶ்ரீலங்கா இராணுவம், கடற்படை, வான் படை ஆகிய முப்படையின் உயர் நிலை அதிகாரிகள் பத்து பேர் அடங்கிய குழுவொன்றே றுவண்டாவிடம் இனப்படுகொலைக்குப் பின்னரான கற்றுக்கொண்ட பாடங்கள் தொடர்பில் கற்றுக்கொள்வதற்காக சென்றிருக்கின்றது.

றுவண்டாவில் வாழும் இனங்களில் சிறுபான்மையின சமூகமான டுட்சி இனத்தவர்கள் 1994 ஆம் ஆண்டு நூறு தினங்களுக்கும் குறைவான காலப்பகுதிக்குள் உட்டு இனத்தைச் சேர்ந்த இனவாதிகளால் இனப்படுகொலை செய்யப்பட்டனர்.

எந்தவொரு இனத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் டுட்சி இன அழிப்பை எதிர்த்த அனைத்துத் தரப்பினரும் உட்டு இனவாதிகளால் கொன்று குவிக்கப்பட்டனர்.



இந்த இனப்படுகொலையின் போது படுகொலை செய்யப்பட்ட இரண்டரை இலட்சத்திற்கும் அதிகமான டுட்சி இனத்தவர்கள் சார்பில் றுவண்டாவின் தலைநகர் கிகாலியில் அமைக்கப்பட்டுள்ள இனப்படுகொலை நினைவிடத்திற்கு சென்ற ஶ்ரீலங்கா படைகளின் உயர் நிலை அதிகாரிகள் குழுவினர் அங்கு மலர் வலையங்களை வைத்து இனப்படுகொலைக்கு உள்ளானவர்களுக்கு மரியாதை செலுத்தினர்.

இந்த இனப்படுகொலை நினைவுத் தூபிக்கு சென்றிருந்த ஶ்ரீலங்கா படை அதிகாரிகளின் தூதுக் குழுவின் தலைமை அதிகாரி கேர்ணல் ஏக்கநாயக்க உலகில் எந்த இடத்திலும் இனப்படுகொலைகள் இடம்பெறாது இருப்பதை சர்வதேச சமூகம் உறுதிப்படுத்த வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

அனைவரும் மனிதர்கள் என்ற வகையில் தமக்கு இவ்வாறான கொடூரங்கள் நிகழ்ந்த இடங்களை பார்க்கும் போது தாங்கிக்கொள்ள முடியாதிருப்பதாக கேர்ணல் ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

அதனால் இவ்வாறான இனப்படுகொலைகள் எந்தவொரு இனத்திற்கும் எதிராக இடம்பெறுவதைத் தடுப்பதற்காக தாம் போரிடுவது

தொடர்ச்சி 38 ஆம் பக்கம்...

# மகிந்த சுதந்திரத்தினைப் பறித்த புலம்பெயர் தமிழர்கள்



"புலம்பெயர் தமிழ் மக்களால் எனது சுதந்திரம் பறிபோய்விட்டது" என ஶ்ரீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தமிழ் வினைச்சொற்களை விவரித்தல் என்ற புத்தக வெளியீட்டில் மேலும் பேசுகையில் " மூன்று வருடங்களிற்குள் போரை நிறைவுக்கு கொண்டுவந்தோம். இன்று அதன் பிரதிபலனாக சுதந்திரமாக சுற்றித்திரியும் சந்தர்ப்பம் எல்லோருக்கும் ஏற்பட்டுள்ளது. எனக்கு அவ்வாறு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்குலக நாடுகளுக்கு நான் சென்றால் வெவ்வேறு விடயங்களுக்காக என்னை நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்ல முயற்சிக்கின்றனர். நான் அரச தலைவராக இருந்தகாலத்தில் பொதுநலவாய மாநாட்டுக்குச் சென்றபோது ஆஸ்திரேலியாவில் தங்களது உறவுகளை இழந்தவர்கள் இணைந்து எனக்கெதிராக முறைப்பாடு செய்து கைது செய்வதற்கு முயற்சித்தனர். நான் பிரிட்டன் சென்றபோது எனது அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய முயற்சிக்கப்பட்டது. நான் அமெரிக்காவுக்கு சென்றபோது எனக்கெதிராக நீதிமன்றம் சென்றார்கள். இதுகுறித்து நாங்கள் அப்போது பெரிதாக பேசவில்லை" எனத் தெரிவித்தார்.

செய்திகளை உடனுக்கு உடன் அறிந்திட
www.ibctamil.com







Lebara play

SUPPORT ANTI-PIRACY

100% LEGAL

HD/SD QUALITY

# 3 மாதங்கள் இலவசம்

புதிதாக இணைந்து அல்லது புதுப்பித்து மேலதிகமாக 3 மாத சந்தா இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்*



**New STB**
**€129**

**Renewal**
**€ 99**




Over 1000+ movies...



Your favourite TV channels

and many more ....

## Quality Service

34, bis, Boulevard Ornano
93200 Saint-Denis, France

01 40 33 0101

விற்பனையின் பின்னரும் சேவை வழங்கப்படும்

IBC தமிழ்
பத்திரிகை

## கண்கட்டு வித்தை!

இருப்பதை இல்லாததாகவும், இல்லாததை இருப்பதாகவும், நடந்ததை நடக்காததாகவும், நடாக்காததை நடந்ததாகவும், தெரிந்ததை மறைந்ததாகவும், மறைந்ததை தெரிவதாகவும் செய்வது கண்கட்டு வித்தையாகும்.

கணகட்டு வித்தைக்காரர்கள் பார்வையாளர்களின் கவனத்தினை அவர்கள் அறியாமலேயே திசை திருப்பி அவர்கள் கண்முன்னே தங்கள் கைங்கரியத்தினை சாதுரியமாய செய்துமுடிப்பர். அந்தவகையில் ஸ்ரீலங்காவின் "நல்லாட்சி" அரசு, அனைத்துலகின் முன் பல கண்கட்டி வித்தைகளை அரங்கேற்றி வருகின்றது.

அரச படைகளால், அரசுசார் கூலிப்படைகளாலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இனி உயிருடன் இருக்க சாத்தியம் இல்லை என ஸ்ரீலங்காவின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கும் நிலையில், காணாமல் போனோர் அலுவலகம் உருவாக்குவதற்கு ஸ்ரீலங்காவின் நாடாளுமன்றத்தில் 2016அம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட கொள்கையினை, போர் முடிந்து 8 ஆண்டுகளின் பின்னர் ஸ்ரீலங்காவின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 2017 ஆம் ஆண்டு கையொப்பமிட்டுள்ளார். இதனை ஐநா உட்பட பல நாடுகள், அமைப்புக்கள் வரவேற்றுள்ளன.

கையொப்பமிடப்பட்ட இந்த அலுவலகம் அமைக்கப்படுவதற்கு எத்தனை வருடங்கள் இனிச்செல்லுமோ என்கிற கேள்விக்கு அப்பால், இதுவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவரையேனும் உயிருடன் பெற இவ்வலுவலகம் உதவிபுரிய வாய்ப்புக்கள் உள்ளதா, அல்லது உண்மையான குற்றவாளிகளைக் கூண்டில் ஏற்றுமா?

இது ஒருபுறமிருக்க, நடத்தும் - நடைபெறும் அனைத்து குற்றங்களையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் மீது பழிசுமத்துவதும், அதன் மூலம் மீண்டும் விடுதலைப் புலிகள் செயற்படுவதற்கு முயற்சிகள் செய்கிறார்கள் எனக் கருத்து வெளியிடுவதிலும் ஸ்ரீலங்கா அரசு தீவிரம் காட்டி வருகின்றது.

ஆக தமிழரின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு சர்வதேசம் எதிரிபார்த்ததுபோல் தாங்கள் நடவடிக்கைகள் எடுத்துவருவதாகவும், இருப்பினும் முன்னாள் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் தொடர்ச்சியாக வன்முறைகளில் ஈடுபட்டு வருவதாகவும், தமிழர்கள் பகுதியில் ஏற்படும் சீரற்ற நிலையினைத் தடுக்க முப்படைகளையும் அங்கு குவிக்கவேண்டிய நிலைக்கு ஸ்ரீலங்கா அரசு தள்ளப்பட்டுள்ளதாகவும் ஒரு மாயையினை ஸ்ரீலங்கா அரசு ஏற்படுத்த முயற்சிசெய்து வருகின்றது. அதற்கு தமிழர்கள் சிலரும் உதவி புரிகின்றனர்.

இதன் மூலம் சர்வதேச அரங்கில் தொடர்ச்சியாக தமிழர்கள் பிரச்சினைக்கான தீர்வு கோரும் குரல்கள் குறையும், அதேவேளை தொடர்ச்சியாக தமிழர் நிலங்கள் முப்படைகளாலும் ஆக்கிரமிக்கப்பட்டு, அடக்கப்பட்ட இனமாக தமிழர் தொடர்ச்சியாக இருப்பர்.

இந்தக் கண்கட்டு வித்தையினை, பேதங்கள் மறந்து ஒன்றுபட்ட இனமாக செயல்பட்டு, விரைவாக உடைத்தெறியவேண்டிய கட்டாயத்தில் உலகெங்கும் படர்ந்திருக்கும் தமிழர்கள் உள்ளனர்.

உங்கள் தொடர்புகட்கு

மின்னஞ்சல் : paththirikai@ibctamil.com

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரித்தானியா | சிறீ | +44 7832 769522 | இத்தாலி | ரஞ்சன் | +39 331 8595851 |
| பிரான்ஸ் | கலையகம் | +33 7558 55555 | நோர்வே | விக்கி | +47 998 95 050 |
| யேர்மனி | சுமித்திரன் | +49 151 27990990 | டென்மார்க் | கி.செ.துரை | +45 266 58809 |
| சுவிஸ் | சரவணன் | +41 76 450 3032 | பெல்ஜியம் | ரூபன் | +32 4888 38808 |
| நெதர்லாந்து | நாதன் | +31 6 1418 0532 | கனடா | கிருபா | +1 647 202 4636 |
| சிங்கப்பூர் | கோபி | +65 9829 1944 | யாழ்ப்பாணம் | கலையகம் | +94 766 644 495 |
| இந்தியா | கலையகம் | +91 444 850 7219 | கொழும்பு | கலையகம் | +94 112 361 077 |

பிரசுரம்
London Tamil Media Ltd.
Unit 1 10 Stonefield Way, Ruislip, Middlesex,HA4 0JS, United Kingdom.
Tel: +44 203 794 4000 Email : info@ibctamil.com

# தமிழருக்கு எதிர்க்கட்சித்தலைவர்?

"இந்த நாடு என்றும் பிளவுபடவும் கூடாது. எமது பிரச்சினைகளையும் இலகுவாக தீர்த்துக்கொள்ள முடியும். எனவே அதனை புரிந்துக்கொண்டு முன்னாள் ஜனாதிபதியும் நானும் இணைந்து ஆட்சிபுரிய வேண்டும் என்று விரும்புகின்றேன்" என தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சி தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அத்தோடு " இந்த நாடு பிரிபடக்கூடாது. இந்த நாடு ஒருமித்த ஒற்றுமையான ஒரே நாடாக எப்பொழுதும் இருக்க வேண்டும். இந்த நாட்டிற்கு எவ்விதமான குந்தகமும் ஏற்படவும்கூடாது. இதனைப் பிரிப்பதற்கு நாங்கள் எல்லோருமே எதிர்ப்புதான். அதனால் பிரிவினை வாதம் ஏற்படுவதை நாங்கள் எதிர்கின்றோம். நாம் ஒற்றுமையாக ஒருமித்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்" எனவும் தெரிவித்துள்ளார்

தமிழ் வினைச்சொற்களை விவரித்தல் என்ற தலைப்பில் ஜூலம்பிட்டியே மங்கள தேரரினால் எழுதப்பட்ட புத்தக வெளியீட்டுவிழாவில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

மேலும் உரையாற்றுகையில் "வடக்கு கிழக்கில் பல அழிந்த பௌத்த விகாரைகளில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஒரு கால, கட்டத்தில் தமிழ் பௌத்தர்கள் இருந்தார்கள். எனவே பௌத்தம் இருவருக்கும் பொதுவானது. அப்படியிருந்தால் எம்மத்தியில் ஏற்பட்டுள்ள குரோதங்களை இலகுவாக நாம் நீக்கிகொள்ள முடியும். நாம் அனைவரும் ஒரே நாட்டு மக்கள். இந்த நாட்டின் எதிர்காலம் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது" எனவும் தெரிவித்தார்

இதேவேளை "ஒற்றையாட்சி எனும் சொல்லோ அல்லது சமஷ்டி எனும் சொல்லோ இல்லாமல் அதி கூடிய உறுதியான மத்திய அரசினால் மீளப்பெறப்பட முடியாத அதிகார பகிர்வு புதிய அரசியல் சாசனத்தின் மூலம் கொண்டுவரப்படுமானால் அதனை நாங்கள் பரிசீலிப்போம்" என கடந்த ஜூலை 12 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பின் போது இரா.சம்பந்தன் கூறியிருந்தார்.

அத்தோடு புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள அரசியலமைப்பில் ஒற்றையாட்சிக்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இணக்கம் தெரிவித்துள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. எல்லோரையும் சேர்த்து என்னும் பொருள்படும் "ஏக்கியறட்ட" என்ற சிங்களச் சொல்லினை அரசியலமைப்பில் பயன்படுத்துவதற்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் எதிர்ப்புத் தெரிவித்த நிலையில் "ஏக்கியறட்ட" என்ற சொற் பிரயோகத்தினால் பாதிப்பில்லையெனத் தெரிவித்திருந்தார்.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாயகம், சுயநிர்ணயம், இறைமை, சமஸ்டி போன்றவிடயங்களை முன்னிறுத்தி, அதன் அடிப்படையில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று, நாடாளுமன்ற ஆசனங்களை பெற்றதும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள், வாக்களித்த தமிழ் மக்களை, மறந்த நிலையில் தேர்தல் விஞ்ஞாபனத்தை எல்லாம் மறந்து ஒற்றையாட்சிக்கு இணக்கம் தெரிவித்ததுடன் பௌத்த மதத்தை முன்னுரிமைப்படுத்துவது இழிவான செயல் என அரசியல் அவதானிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.




இதேவேளை "எமது தேர்தல் விஞ்ஞாபனத்தைச் சுமந்திரனும் சம்பந்தனும்தான் தயாரித்தார்கள். அந்த விஞ்ஞாபனத்தில்தான் நான் தேர்தலில் போட்டியிட்டேன்.

தொடர்ச்சி 32 ஆம் பக்கம்...

குறள் பால்: **பொருட்பால்** குறள் இயல்: **அரசியல்** அதிகாரம்: **குற்றங்கடிதல்** குறள்: **435**

## வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
## வைத்தூறு போலக் கெடும்



முன்கூட்டியே எச்சரிக்கையாக இருந்து ஒரு தவறான செயலைத் தவிர்த்துக் கொள்ளாதவருடைய வாழ்க்கையானது நெருப்பின் முன்னால் உள்ள வைக்கோல் போர் போலக் கருகிவிடும்.

பத்திரிகையில் வெளியாகும் செய்தி, விபரங்கள் அனைத்தும் தவறுகள் இல்லாது பிரசுரிக்க, ஐபிசி தமிழ் பத்திரிகையானது அதன் வரையறையுள், தன்னால் முடிந்தளவு பிரயாசிக்கும். அதனையும் மீறி தவறான விபரம் பிரசுரிக்கப்படும் பட்சத்தில் - இதழ், பக்கம், தவறான விபரம் என்பனவற்றினை எமது மின்னஞ்சலுக்கு அனுப்பிவையுங்கள்.


புதிய மெருகோடு
புதிய நிகழ்ச்சிகளோடு
உங்கள் இல்லம் நாடி வருகிறது
IBC தமிழ்
செய்மதியில் IBC தமிழைக்
கண்டு களிக்க
புதிய அலைவரிசை
Satellite :
Euro Bird (Eutelsat 9B)
Frequency 11919 Vertical
S/R 27500 | FEC 3/4

# தமிழ் அரசியலில் ஆதிக்கம் செலுத்தும்
# மேட்டிமை



அரசியல்



கோபி இரத்தினம்

ஆங்கிலத்தில் *elitism* என்ற சொல்லுக்கு நிகராக இங்கு மேட்டிமை என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. இது சரியான தமிழாக்கமா என்பதில் எனக்கு ஐயம் இருந்தாலும், இக்கட்டுரை சொல்லவரும் விடயத்தை இச்சொல்லால் விளக்கமுடியும் என்று நம்புகிறேன்.

சமூகத்தில் அதிகாரம் கொண்ட தரப்பாக இருப்பவர்கள் எனத் தங்களைக் கருதிக் கொள்பவர்கள் அச்சமூகத்திற்கு தலைமை தாங்கவும், அச்சமூகத்தின் சார்பில் முடிவெடுப்பவர்களாகவும் இருப்பதனை மேட்டிமை என்ற சொல்லால் அழைக்க விழைகிறேன். இவர்களை அரசியல் வர்க்கத்தினர் *(politcal class)* என்றும் அடையாளப் படுத்தப்படுகிறது.

மேற்கத்தைய பல்கலைக்கழகங்கள் இவ்வாறான வர்க்கத்தினரை உருவாக்குகின்றன என்கிறபோதிலும், மேட்டிமை என்று குறிப்பிடும்போது, சமூகத்தில் உள்ள அறிவாளிகள், துறைசார் வல்லுனர்கள் என்று அர்த்தம்கொள்ள முடியாது. மாறாக மேற்கத்தைய தாராண்மைவாத சனநாயக *(liberal democracy)* அடிப்படையில் செயற்படுவதாக கூறும் இவர்கள் இவ்வல்லாதிக்கங்களின் நலன்களிற்கு ஏற்ப செயற்படும் தன்மையைக் கொண்டிருக்கின்றனர்.

இவ்விடயத்தைப் பற்றி பேசுவதற்கு முன்னர் அண்மையில் நடந்த ஒரு சம்பவத்தைப் பார்ப்போம்.

வெள்ளப்பெருக்கினால் பாதிக்கப்பட்ட ஸ்ரீலங்காவின் தென்பகுதி மாவட்டங்களான களுத்துறை, மாத்தறை பிரதேசங்களில் புலம்பெயர்ந்த நாடுகளிலிருந்து சென்ற ஒரு குழு மருத்துவ முகாங்களை நடாத்தியிருக்கிறது.

இக்குழுவில் ஜீரேப் என்ற அமைப்புடன் தொடர்புடைய பதினேழுபேர் இடம்பெற்றிருந்தாக ஸ்ரீலங்கா வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றிலிருந்து தெரியவருகிறது. மேற்படி பயணத்திற்கான நிதியுதவியினை சுவிற்சலாந்து, நோர்வே அரசாங்கங்கள் வழங்கியிருக்கின்றன. மேலோட்டமாகப் பார்க்கின்றபோது, இத்தகைய மனிதாபிமான நடவடிக்கைகள் எதுவித தயக்கமுமின்றி வரவேற்கப்படவேண்டியவை என்றே கூறமுடியும்.

'இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் கடல்கடந்து வாழும் தமிழ் மருத்துவர்களின் இம்முயற்சி பாராட்டும் வகையில் அமைந்திருப்பதாக கொழும்பிலிருக்கும் அமெரிக்கத் தூதர் அதுல் கெசாப் ருவிற்றர் குறுஞ்செய்தியினூடக கருத்து வெளியிட்டுள்ளார். (டயஸ்போரா என்ற சொல்லை அவர் இங்கு பாவிக்கவில்லை என்பது தற்செயலானது அல்ல என்பதனைக் கவனிக்கவும்).

ருவிற்றரில் இதற்கு பதிலளித்திருக்கும் மனிதவுரிமைச் செயற்பாட்டாளர் பிரான்ஸஸ் ஹரிசன், 'வரலாறு மீளத்திருப்பியிருக்கிறது. நோர்வேயின் அனுசரணையில் நடந்த பேச்சுவார்த்தைக் காலத்திலும் இதுபோன்று வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தென்பகுதி மக்களுக்கு விடுதலைப் புலிகள் நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள். அது எங்கு சென்று முடிந்தது? ஆகவே இதனையிட்டு குதூகலிப்பது கடினமாக உள்ளது' எனத் தெரிவித்திருக்கிறார்.

மேற்குறித்த மருத்துவர் குழுவில் இடம்பெற்ற சிலர் சமாதான காலத்தில் வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளுக்கு மருத்துவ முகாம் நடாத்தியவர்கள் எனத் தெரியவருகிறது. ஆகவே இவர்களுக்கு பிரான்ஸஸ் ஹரிசன் என்ன கூறுகிறார் என்பதனை விளங்கிக் கொள்வதில் சிக்கலிருக்காது. ஆனால் 'இந்த மடம் இல்லாட்டி சந்தை மடம்' என்பதுபோன்று செயற்படுகிற இந்நபர்களிடம் இவற்றை கவனத்திற் கொள்ளும் பக்குவம் இருக்கிறதா என்பது தெரியவில்லை.

இங்கு சிங்கள மக்களுக்கு மருத்துவ முகாம் நடாத்தியது அல்ல பிரச்சனை. வெளிச்சக்திகள் நிகழ்ச்சி நிரலில் நின்று செயற்படுவதே விமர்சனத்திற்கு உள்ளாக்கப்படுகிறது. தவிரவும், மேற்குறித்த மருத்துவர் குழுவினர் வெறுமனே மனிதாபிமான ரீதியில் இவ்வுதவியினைச் செய்யவில்லை என கடந்த காலங்களில் இவர்களுடன் நெருங்கிச் செயற்பட்டவர்கள் மூலமாக அறிய முடிகிறது.

பின் முள்ளிவாய்க்கால் காலத்தில், இலங்கைத் தீவின் அரசியலில் அதிகம் அடிபடுகிற சொல் 'நல்லிணக்கம்' என்பதாகவே இருக்கும். இருப்பினும் அர்த்தபூர்வமான நல்லிணக்க முயற்சிகள் இதுவரை நடைபெறவில்லை. வெளிநாட்டு நிதியுதவியில் இயங்கும் உள்ளூர் மற்றும் அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் ஆங்காங்கே நல்லிணக்கம் எனப் படங் காட்டிவந்தாலும், காணமற்போன உறவுகளுக்காகவும், இராணுவ ஆக்கிரமிப்பிலிருக்கும் தமது நிலங்களைமீட்கவும்போராடும்மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை நல்லிணக்க முயற்சிகள் தொடக்க நிலையைக் கூட எட்டப்போவதில்லை என்பதே யதார்த்தமாக உள்ளது.

தமிழ், சிங்கள தேசிய இனங்களிலுள்ள கலைஞர்கள், இலக்கியவாதிகள். ஊடகவியலாளர்கள். கல்வியாளர்கள், வெகுமக்கள் எனச் சமூகத்தின் பல மட்டங்களிலுள்ளவர்களுக்கு மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தும் முயற்சிகளை விடுத்து இருதரப்பிலும் உள்ளமேட்டிமை சக்திகளை வளர்த்துவிடுவதிலேயே வெளிச்சக்திகள் குறியாக இருக்கின்றன.

பிரித்தானிய காலனித்துவ ஆதிக்க காலத்தில், 1833இல் முதன்முறையாக உருவாக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபைக்கு தமிழர்கள் சார்பில் பிரித்தானியர்களால் நியமிக்கப்பட்டவர் ஆறுமுகநாதபிள்ளை குமாரசாமி. அவர் மேட்டுக்குடியிலிருந்து தெரிவு செய்யப்பட்டதுமில்லாமல் தொடர்ந்துவந்த காலங்களிலும் அவரது உறவினர்களே அரசியல் நிர்ணய சபைக்கு நியமிக்கப்பட்டனர். அரசியல் என்பது ஒரு வர்க்கத்தினருக்கு உரியதாக மட்டுப்படுத்தப்பட்டது.

காலனித்துவ காலத்திற்கு பின்னர் கூட தமிழரசியலில் தலைமைப் பாகத்தை வகித்த ஜீ.ஜீ. பொன்னம்பலம், சா.ஜே.வே. செல்வநாயகம் போன்றவர்கள் மட்டுமல்ல, தமிழ் இடதுசாரித்தலைவர்களும் மேட்டுக் குடிகளிலிருந்து வந்தவர்களே. தமிழரசுக்கட்சி இந்நிலையில் ஓரளவு மாற்றத்தை ஏற்படுத்தி அமிர்தலிங்கம், இராசதுரை போன்ற உள்ளூர் தலைவர்களை வளர்த்தெடுத்த போதிலும். கொழும்பில் ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் தொடர்பாடல்களை மு.திருச்செல்வம், பின்னர் அவரது மகன் நீலன் திருச்செல்வம், ஏ.ஜே.வில்சன் போன்றவர்களே மேற்கொண்டனர்.

ஆயுதப்போராட்டம் முனைப்படைந்து ஒரு நிகழ்வுபூர்வமான அரசு அமைக்கப்படும் நிலைவந்தபோதுதான் தமிழ் அரசியல் பரந்துபட்ட தமிழ்ச்சமூகத்தின் கையிற் சென்றது. முன்னர் அரசியல் வர்க்கத்தினர் எனக் கருதப்பட்டவர்களிடமிருந்து அதிகாரம் பறித்தெடுக்கப்பட்டது. ஆயுதப்போராட்ட நடைமுறைகளில் சனநாயகம் கடைப்பிடிக்கப் படவில்லை என்ற குற்றச்சாட்டுகள் இருப்பினும், அக்காலத்திலேயே வெகுமக்களிலிருந்து உருவாகிய தலைவர்கள் அரசியலில் முடிவெடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தனர்.

பின் முள்ளிவாய்க்கால் காலத்தில், அரசியல்அதிகாரம் மீளமேட்டிமையிடம் சென்றிருக்கிறது. வெளிச்சக்திகளினால் வளர்த்தெடுக்கப்படும் இத்தலைமையை ஆதரிக்க வேண்டிய புறச் சூழலை ஏற்படுத்துவதில் சிங்கள மேட்டிமை இவர்களுடன் கைகோர்த்து நிற்கிறது.

தாயகத்திலும், புலம்பெயர்நாடுகளிலும் தமிழ் அரசியலில் நடைபெறும் சம்பவங்களையும், செயற்பாடுகளையும் இக்கண்ணோட்டத்தில் அணுகினால், அவை ஏன் இவ்வாறு நடைபெறுகின்றன என ஆச்சரியப்படவேண்டிய அவசியமிருக்காது. இந்நிலையில் மாற்றத்தை உருவாக்காமல் தமிழ் அரசியல் முன்னோக்கி ஒரு அடிகூட வைக்கப்போவதில்லை என்பதனை தமிழ் மக்கள் உணர்வார்களா?

Jegan S
Creative Photographer
DESTELLO
PHOTOGRAPHY & VIDEO
Fr 0031652315349, 0033751012978
De 004915171010116
jekan2003@yahoo.com
destellofotography


The price of your coffee doesn't change everyday
Why does the exchange rate?
Like it? Lock it.
Mon
Tues
Wed
Thurs
Take control of your money transfers to Sri Lanka.
Lock a rate today and use it up to 30 days later.
Get £15 off
plus zero fees when your first transfer is £100 or more
Lebara money transfer
money.lebara.com/ibc
Lebara Money Zero Fee offer is valid for all 'Send now' money transfers to Sri Lanka through the Lebara Money Transfer (website & Android app) until midnight 31/08/2017. Money transfers with a locked rate and delayed execution date are excluded from this Zero fee promotion. Transactions are monitored and subject to fraud checks which may disqualify some customers. Lebara Money Ltd. is an authorised payment institution and is regulated by the FCA under the Payment Services Regulations 2009. Firm Reference 746677


Dortmund
Samira Travels
Sep, Oct, Nov மாதங்களில்
ab 589€
Frankfurt - Colombo
உலகின் எப்பாகத்திற்கும்
நிதான விலையில்
Airline Tickets
S
Westerbleich Str.77-
44147 Dortmund
Tel:01741925169

# மரண எச்சரிக்கை

இலங்கைத்தீவின் தமிழர் தாயகப்பகுதிகளில் நாளாந்தம் இடம்பெறும் வாகன விபத்துக்களினால் ஏற்பட்டு வரும் உயிரிழப்புக்கள் குறித்து பலரும் கவலை கொண்டுள்ளனர்.

வன்னிப்பெருநிலப்பரப்பினை ஊடறுத்து வட பகுதிக்குச் செல்லும் ஏ9 பிரதான நெடுஞ்சாலையிலேயே அதிக விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

இலங்கை முழுவதும் ஏற்படுகின்ற வாகன விபத்துக்களினால் வருடாந்தம் 3000 பேர் வரை உயிரிழப்பதோடு 8000 பேர் வரை காயப்படுவததாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் புள்ளிவிபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

இதில் 1000க்கும் மேற்பட்டவை மோட்டார் சைக்கிள் விபத்துக்களினால் ஏற்படுகின்ற உயிரிழப்புகள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக 600பேர் தலைக்கவசம் அணியாததன் காரணமாக உயிரிழந்துள்ளனர்.

அண்ணளவாக 62 இலட்சம் வாகனங்கள் இலங்கையில் பாவனையில் உள்ளதெனத் தெரிவித்துள்ள இப்புள்ளிவிபரம், 6 இலட்சத்துக்கும் மேற்பட்டவை பதிவு செய்யப்படாதவை எனக் குறிப்பிடுகின்றது. மொத்த தொகையில், 36 லட்சம் மோட்டார் சைக்கிள்களாக உள்ளன. இந்நிலையில் இலங்கைத்தீவின் தமிழர் தாயகப்பகுதிகளில் ஏற்பட்டு வரும் கோர விபத்துக்களினால் ஏற்படும் சாவுகள் குறித்து பலரும் கவலை கொண்டுள்ளனர்.

கோடைகால விடுமுறைக்கு ஐரோப்பாவிலும் கனடாவிலும் இருந்து தாயகம் சென்றுள்ள தமிழர்கள் பலரும் விபத்துக்களில் சிக்குண்டு உயிரைமாய்த்து வருகின்றனர். வட பகுதியினை ஊடறுக்கின்ற ஏ9 வீதியில் மட்டுமல்ல கிழக்கினை ஊடறுக்கின்ற ஏ15 வீதியிலும் விபத்துக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இலங்கையில் சாதாரணமாக நாள் ஒன்றிற்கு 150 விபத்துக்கள் இடம்பெறுகின்றன. அதில் 5 இருந்து 7 மரணங்கள் பதிவு செய்யப்படுவதுடன் 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைகின்றனர் என ஸ்ரீலங்காவின் வீதிப் போக்குவரத்துக்குப் பொறுப்பான காவல்துறைத் தலைமையகம் தெரிவிக்கின்றது.

இக்கோர விபத்துக்களைப் பொறுத்தவரை 75 சதவீதமான விபத்துக்கள் மனித கவனயீனத்தாலும் அலட்சியத்தாலுமே ஏற்படுகின்றன என இவ்விபத்துக்கள் தொடர்பிலான ஆய்வறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

அதிகரித்த வேகம், ஓய்வின்மை, பாதை ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமை போன்ற காரணத்தால் அதிகமாக வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

**1.வீதி ஒழுங்குகளை கடைப்பிடிக்காமை:**

சாரதிகளாயினும்சரி பாதசாரிகளாயினும் சரி வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமை விபத்துக்கள் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாக அமைகின்றது. கவனயீனத்தினாலும்ஏதோ ஒருவித அவசர நிலையாலும் மஞ்சள் கோடு, சமிக்ஞை விளக்குகள் எதையும் பொருட்படுத்தாது பயணிப்பதை அவதானிக்க முடிகிறது.

தற்போது அதிகரித்துள்ள போக்குவரத்து நெரிசல்களை இலகுபடுத்த அரசாங்கம் மேம்பாலங்கள், சுரங்க வழிப்பாதை என்பவற்றை அமைத்திருப்பினும் கூட இவற்றில் எதனையும் பயன்படுத்தாது ஒருவித அலட்சியப் போக்குடன் பயணிப்பவர்களே விபத்தில் சிக்கிக் கொள்கின்றனர்.

**02. கட்டுப்படுத்த முடியாத வேகம்:**

வீதி விபத்துக்களின் முக்கிய காரணிகளுள் ஒன்று அதிகரித்த வேகமாகும். பாதை ஒழுங்கை மீறி முந்திச் செல்ல எத்தனிக்கும் வாகனங்கள் மூலமே 75 சதவீதமான விபத்துக்கள் பதிவு செய்யப்படுகின்றன.

தற்போது அபிவிருத்தியடைந்து செல்லும் வீதிகளின் விளைவாக வாகனங்களை செலுத்துவதில் சாரதிகள் ஒருவித ஈடுபாட்டை அதிகம் காட்டுகின்றனர். மற்றைய வாகனத்தை முந்திச் செல்ல வேண்டும். விரைவாக இடத்தை அடைய வேண்டும் போன்ற காரணங்களால் அதிகளவான வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன.

வாகனத்தை செலுத்தும் அதிவேக வேகக் கட்டுப்பாட்டு முறைகளை நகரப் பகுதிகளில் போக்குவரத்துப் பொலிஸார் பொருத்தியிருந்தாலும் கூட பெரும்பாலான சாரதிகள் அவற்றைக் கவனத்தில் எடுப்பது இல்லை.

**03. வாகன அதிகரிப்பு-நெரிசல்:**

இலங்கையில் அண்மைக் காலமாக நடைமுறைப்படுத்தப்படும் திறந்த பொருளாதாரக் கொள்கையானது கட்டுப்பாடற்ற வாகன இறக்குமதிக்கு வழி செய்துள்ளது.

இதனால் அதிகரித்த வாகனப் பாவனை மற்றும் வீதிகளில் நீண்ட நேர நெரிசலையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்துகின்றது.

சீரான வீதிப் பாவனை வழிமுறைகள் நடைமுறையில் இல்லாத இலங்கை போன்ற நாடொன்றில் இவ்வாறான அதிகரித்த வாகனப் பாவனையானது இன்று வீதி விபத்துக்களையும் போக்குவரத்து நெரிசல்களையும் ஏற்படுத்தும் ஒன்றாக மாறியுள்ளது.

**04. ஓய்வின்மை - மதுபோதை:**

நீண்ட தூரப் பயணங்களில் வாகனத்தைச்செலுத்தும்சாரதிகள்ஓய்வு, உறக்கமின்மை போன்ற காரணங்களால் வாகனத்தைச் செலுத்தும் போதும் விபத்துக்கள் ஏற்படுகின்றது. அதேபோல் மதுபோதையுடன் செலுத்துவதாலும் விபத்துக்கள் ஏற்பட்டு மரணங்கள் சம்பவிக்கின்றன.

**05. சாரதி அனுமதிப்பத்திரம்:**

முறையான சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு பதிலாக முறைகேடான வழிகளில் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளும் முறை இலங்கையில் நடைமுறையில் உள்ளது.

வீதி ஒழுங்குகள் எதனையும் பற்றிய போதிய அறிவில்லாத ஒரு சாரதியாக வாகனத்தை செலுத்துவதன் மூலம் விபத்துக்கள் அதிகளவாக இடம்பெறுகின்றன.

அதுமட்டுமின்றி கைத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டு வாகனம் செலுத்தல், தலைக்கவசம் அணியாது பயணித்தல் போன்ற காரணங்களாலும் மரணங்கள் ஏற்படுகின்றன. இவை அன்றாடம் பாதசாரிகளாலும் சாரதிகளாலும் ஏற்படக்கூடிய பிழைகளாகும் என அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கின்றது.

புலம்பெயர் தேசங்களில் இருந்து தமிழர் தாயகம் செல்லும் தமிழர்கள் இவ்விவகாரத்தில் விழிப்பாக இருப்பது மட்டுமன்றி, தாயக உறவுகள் இடத்திலும் இது தொடர்பிலான விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும். போரினால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள், வலிகள் இன்னும் தமிழர் நெஞ்சங்களில் உள்ள நிலையில், அன்றாட இந்த வீதி விபத்துக்களினால் ஏற்படும் உயிரழப்புக்கள் குறித்து பலரும் கவலை கொள்கின்றனர்.

– சுதன் குருநாதன்










1 ஆம் பக்கத் தொடர்ச்சி:

## தீவிரமடையும் முரண்பாடுகள்

தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியானதை அடுத்து ஸ்ரீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினரும் ஜனநாயகத்திற்காக குரல்கொடுத்துவரும் பொது அமைப்புக்களும் தமிழர் தரப்பும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

ஏற்கனவே 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களை முழுமையாக வழங்காது வடக்கு கிழக்கு மாகாணங்களின் அதிகாரங்களை கையகப்படுத்தி வைத்திருக்கும் ஸ்ரீலங்காவின் மத்திய அரசு 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் ஊடாக மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தும் வரை வடக்கு கிழக்கு மாகாண சபைகளை நாடாளுமன்றத்தின் கீழ் கையகப்படுத்தி தனக்குத் தேவையானதை செய்ய திட்டமிட்டுள்ளதாக தமிழர் தரப்பிலிருந்து குற்றம்சாட்டப்படுகின்றது.

ஆனால் மஹிந்த தரப்போ தங்களுக்கு இருக்கும் மக்கள் செல்வாக்கை அறிந்துகொள்ள இருக்கும் வாய்ப்பையும், மைத்ரி – ரணில் தலைமையிலான ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் மீதான தமது நெருக்குவாரங்களை திணிப்பதற்கும் இருக்கும் வாய்ப்புக்கள் இல்லாது போய்விடும் என்று அஞ்சுவதால் தேர்தலை ஒத்திவைப்பதற்கு கடும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் ஸ்ரீலங்காவின் தற்போதைய தேசிய அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சிகளான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரும் மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்காது உடனடியாக நடத்த வேண்டும் என வலியுறுத்த ஆரம்பித்துள்ளன.

இந்த கருத்தை தமது கட்சியின் தலைவர்களான பிரதமர் ரணில் மற்றும் ஜனாதிபதி மைத்ரி ஆகியோரிடமும் இரு கட்சிகளினதும் முக்கியஸ்தர்கள் நேரடியாகவும் தெரியப்படுத்தியுள்ளதுடன் அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கான தமது விருப்பமின்மையையும் தெரியப்படுத்தியுள்ளனர்.

சப்பிரகமுவ மாகாண சபையின் ஆட்சிக்காலம் எதிர்வரும் செப்டெம்பர் 26 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

அதேபோல் கிழக்கு மாகாண சபையின் ஆட்சிக்காலம் செப்டெம்பர் 30 ஆம் திகதி முடிவடைகின்றது. வட மத்திய மாகாண சபையின் ஆட்சிக்காலம் ஒக்டோபர் முதலாம் திகதி முடிவடையவுள்ளது.

இந்த நிலையிலேயே தேர்தலை உடனடியாக நடத்தாது அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்தும் வகையில் 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தை நிறைவேற்றும் வரை குறித்த மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்க கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு கடந்தவாரம் கூடிய போது மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்காது உடனடியாக நடத்த வேண்டும் என்ற அழுத்தத்தை அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர். மறு முனையில்





பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியுள்ளனர்.

இதனால் தற்போதைய தேசிய அரசாங்கத்தில் தொடர்ந்தும் அங்கம் வகிப்பதா இல்லையா என்பது குறித்து தீர்மானிக்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழுத்தம் கொடுத்துவரும் அந்தக் கட்சியின் முக்கியஸ்தர்கள் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தினால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு மக்கள் மத்தியில் இருக்கும் மக்கள் செல்வாக்கை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு தெரியப்படுத்தலாம் என நம்புகின்றனர்.

இதனாலேயே மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்காது நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியினர் வலியுறுத்தி வருவதாக அந்தக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர் ஐ.பி.சி தமிழுக்குத் தெரிவித்தார்.

இதுவேளை 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டமூலத்திற்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்து அதன் ஊடாக மைத்ரி – ரணில் தலைமையிலான தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக எழுந்துவரும் எதிர்ப்பலைகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள மஹிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிரணியினர் திட்டமிட்டு வருகின்றனர்.

சர்ச்சைக்குறிய 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டமூலம் எதிர்வரும் ஓகஸ்ட் 22 ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்க ஸ்ரீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார். இதற்கமைய பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டதும் உச்ச நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்படும் என கூட்டு எதிர்கட்சியின் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் என தேர்தல் ஆணையகத்தின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவும் ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்குகடிதம்எழுதியுள்ளதாகவும் ஐ.பி.சி தமிழுக்கு தகவல் கிடைத்துள்ளது. மாகாண சபைகளுக்கான தேர்தலை உரிய காலத்தில் நடத்தாது ஒத்திவைப்பது அரசியல் யாப்பை மீறும் செயல் என்றும் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசாப்பிரிய தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் கடந்த ஓகஸ்ட் முதலாம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது 20 ஆவது அரசியல் யாப்புத்திருத்தச் சட்டமூலத்திற்கு வழங்கிய அனுமதியை மீளப்பெற்றுக்கொள்ளவும் தீர்மானித்திருக்கின்றனர்.

இதற்கமைய இந்தத் தீர்மானம் இந்த பத்திரிகை அச்சுக்கு செல்லும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாக அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் உறுதிப்படுத்தினர். இதனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 20 ஆவது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டமூலம் மீளப் பெற்றுக்கொள்ளக் வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகவும் பெயரைக் குறிப்பிட விரும்பாத முக்கிய அமைச்சர் ஒருவர் ஐ.பி.சி தமிழுக்குத் தெரிவித்தார்.

இதற்கமைய ஆட்சிக் காலம் முடிவடையும் கிழக்கு, வட மத்திய மற்றும் சப்பிரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் திகதி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் மூன்றாம் திகதி அறிவிக்கப்பட்டு நவம்பர் மாதம் நடத்தப்படும் என நம்பப்படுகின்றது.

எவ்வாறாயினும் மாகாண சபைகளுக்கரன தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவதற்கு ஸ்ரீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நான்கு முக்கிய காரணிகளை முன்வைத்திருந்தார். எவ்வாறாயினும் ஸ்ரீலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த முயற்சிக்கு சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்களான அநுர பிரிதர்சன யாப்பா, சுசில் பிரேமஜயந்த் மற்றும் ஜோன் செனவிரத்ன ஆகிய அமைச்சர்கள் மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைப்பதற்கு பகிரங்கமாகவே தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். தமது கோரிக்கைக்கு செவி சாய்க்காவிட்டால் 20 ஆவது அரசியல் யாப்பிற்கு எதிராக நாடாளுமன்றில் வாக்களிக்கப்போவதாகவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.




1971 → 1972 → 1973 → 1974 → 1975 → 1976 → 1977 → 1978 → 1979 → 1980 → 1981 → 1982 → **1983**

# வன்முறை மீது காதல் கொண்ட மனநோயாளிகள் அல்ல

தமிழின அழிப்பின் வரலாற்றுத்தொடர் | பாகம் 6

'நாம் வன்முறை மீது காதல் கொண்ட மனநோயாளிகள் அல்ல'. இவ்வாறு சொன்னவர் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முக்கிய தலைவர்களுள் ஒருவராக இருந்த தங்கத்துரை அவர்கள். தமிழர்கள் வன்முறை மீது காதல்கொண்டு ஆயுதம் தூக்கவில்லை. வாழ்வின் மீது காதல்கொண்டு ஆயுதம் தூக்கினர். இதனைத்தான் கடந்த இதழில் மாவோ சே துங்கின் வரிகளில். 'நாம் எந்த ஆயுதத்தைத் தூக்க வேண்டும் என்பதை எதிரியே தீர்மானிக்கின்றான்' எனக் கூறினேன். அகிம்சை வழிமுறைகள் ஆயுதங்கள் கொண்டு அடக்கப்பட்டதன் விளைவு தமிழர்களை ஆயுதப் போராட்டம் நோக்கி 1970 களில் தள்ளியது பற்றி முன்னர் பார்த்தோம்.

ஆயுதப் போராட்டம் வீறுகொண்ட காலம் என 1983ஆம் ஆண்டைக் குறிப்பிடலாம். இதற்கு இரண்டு பிரதான சம்பவங்கள் காரணியாகின. முதலாவது தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாரிய இனவழிப்பு நடவடிக்கை.



மற்றையது சிறைக்குள்கூட தமிழர்களின் உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லையென நிரூபித்த வெலிக்கடைப் படுகொலை. ஆனாலும் இதற்கு முன்னரே நாடாளுமன்ற மிதவாத அரசியலை நிராகரித்து தமிழ்த் தேசிய அரசியலை நோக்கி தமிழ் மக்கள் நகரத்தொடங்கி விட்டனர் என்பதற்கு 1983ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் நாள் நடைபெற்ற வட மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல் நிராகரிப்பு எடுத்துக்காட்டாகின்றது.

தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்திற்குப் பின்னால் அணிதிரளத் தொடங்குகின்றனர் என்ற செய்தி ஆட்சியாளர்களுக்கு இந்தக் காலகட்டத்திலும், எந்தக் காலகட்டத்திலும் பிடித்ததான ஒன்றல்ல. எனவே தமிழர்களை அடித்து அச்சமூட்டும் நடவடிக்கைகளுக்கான காத்திருப்பு தொடங்கிற்று.

கறுப்பு ஜூலை என அழைக்கப்படும் தமிழர் வரலாற்றின் உச்சக்கட்ட இனவழிப்புச் சம்பவங்களில் ஒன்றாக விளங்கும் கரிநாட்களின் இருண்ட வரலாற்றைப் பற்றிப் பார்க்க முன்னர் அதன் பின்னணியில் இருக்கும் சம்பவங்களை உற்று நோக்குவது இந்த இனவழிப்பை அறிந்துகொள்வதற்கு இலகுவாக இருக்கும். இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்தது என்று சொல்லப்பட்ட காலம் முதல் தமிழ் மக்கள் மீது இன, மொழி, கலாசாரம், பண்பாடு ரீதியான தாக்குதல்கள் இடம்பெற்று வந்திருக்கின்றன. இவ்வாறு வளர்ந்த குரோதத்தின் உச்ச வெளிப்பாடுகளில் ஒன்றாகவும் இந்த இனவழிப்புக்கள் இருந்தது பற்றி முன்னர் விரிவாகப் பார்த்திருக்கின்றோம். ஆட்சியாளர்கள் அந்தத் தீவில் தமிழர்களை எப்படி நோக்கினர், இன அழிப்பின்போது எவ்வாறு அலட்சியமாக நடந்துகொண்டனர் என்பதற்கு தக்க உதாரணமாக 1983ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜூலை இன அழிப்பு திகழ்கின்றது.

ஸ்ரீலங்காவின் முன்னாள் அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்தில் 1981இல் இடம்பெற்ற தேர்தல், அதனையொட்டிய படுகொலைச் சம்பவங்கள், கலாசார இன அழிப்பின் உச்ச நடவடிக்கையாக அதே ஆண்டில் இடம்பெற்ற யாழ் நூலக எரிப்பு என்பவற்றின் தொடர்ச்சியாக சிங்கள ஆட்சியாளர்கள், காடையர்கள் மத்தியில் கனன்றுகொண்டிருந்த பொறியின் பெருநெருப்பாக 1983ஆம் ஆண்டு ஜூலை இன அழிப்பைப் பார்க்கலாம்.



இதே ஆண்டில் மே 18ஆம் நாள் வட மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலைப் புறக்கணிக்குமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்த வேண்டுகோளை ஏற்ற தமிழ் மக்கள் அந்தத் தேர்தலை 98 வீதம் புறக்கணித்தமை ஜே.ஆர் அரசுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. இதற்குப் பழிவாங்கி தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கையாக யாழ் கந்தர்மடம் பகுதியில் இருந்த வீடுகளை ஸ்ரீலங்கா படைகள் கொழுத்தியதுடன், பொதுமக்களையும் தாக்கி, அவர்களின் சொத்துக்களையும் சூறையாடத் தொடங்கினர்.

யாழ்ப்பாணத்தில் தோன்றிய பதற்றமான சூழல் வவுனியாவில் கடையெரிப்பு என்றும், திருகோணமலையில் தமிழர்கள் வெட்டிப் படுகொலை என விரிவாக்கம் பெற்றன. ஜூன் மாதம் திருகோணமலையில் தமிழ் கிராமங்களுக்குள் நுழைந்து சிங்களக் காடையர்கள் தமிழ் மக்களைப் படுகொலை செய்யும் சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருந்தன.

திருகோணமலைப் படுகொலைக்கு எதிராக தமிழீழ விடுதலை அணி, யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு உள்ளிட்ட ஆறு அமைப்புக்களால் ஜூலை முதலாம் நாள் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட கடையடைப்பும் வெற்றி பெற்றதால், அதனை ஒழுங்கு செய்தவர்கள் கைது செய்யப்பட்டனர். மருத்துவக் கலாநிதி எஸ்.ஏ.தர்மலிங்கம், சுதந்திரன் நாளேட்டின் ஆசிரியர் கோவை மகேசன் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டு கொழும்பிற்குக் கொண்டு செல்லப்பட்டு வெலிக்கடைச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர்.

கடையடைப்பு நடைபெற்றபோது கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற யாழ்தேவி தொடரூந்து கோண்டாவிலில் வைத்து ஆத்திரம்கொண்ட இளையோர்கள் சிலரால் தீமூட்டப்பட்டதே இந்தக் கைதுக்கான காரணமாகக் கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான சுதந்திரன் தமிழ் பத்திரிகை, மற்றும் சற்றடே றிவியூ ஆங்கில நாளேடும் ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் தடை செய்யப்பட்டன. அவற்றின் அச்சகங்களும் இழுத்து மூடப்பட்டன.

தமிழர் தாயகம் எங்கும் பதற்றமான சூழலே காணப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் ஜூலை 15ஆம் நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதற் கட்டளைத் தளபதியும், தமிழீழத் தேசியத் தலைவரின் நேசத்திற்கும் உரிய லெப்ரினன்ட் சீலன் என அழைக்கப்பட்ட சார்ள்ஸ் அன்ரனி அவர்கள் ஸ்ரீலங்கா படைகளால் மீசாலையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்குப் பதிலடியாகவும், படையினரால் கடத்திச் செல்லப்பட்ட மாணவிகள் பாலியல் வன் தாக்குதலுக்கு உள்ளான சம்பவத்திற்கு எதிர்புத் தெரிவிக்கும் வகையிலும் விடுதலைப் புலிகளால் தாக்குதல் ஒன்று திட்டமிடப்பட்டது.

ஜூலை 23ஆம் நாள் இரவு யாழ் திருநெல்வேலிப் பகுதியில் வீதிச்சுற்று நடவடிக்கையில் ஈடுபட்ட ஸ்ரீலங்கா படையினரது ஊர்தி மீது தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் படையினர் 13பேர் கொல்லப்பட்டனர். இதனைச் சாதமாகப் பயன்படுத்திய ஸ்ரீலங்கா அரசாங்கம், ஊடகங்கள் வாயிலாக தமிழ் புலிகள் தமது படையினரைக் கொன்றுவிட்டனர் எனப்பரப்புரைசெய்தனர்.

கொல்லப்பட்ட படையினரது உடலங்களை வழமைக்கு மாறாக அவர்களது ஊர்களுக்கு எடுத்துச் செல்லாது யாழ்ப்பாணத்தில் படை மரியாதையுடன் அடக்கம் செய்ய படையினர் ஒரு பகுதியினர் விரும்பியபோதும் படைத்தளபதி திஸ்ஸ வீரதுங்கவும், அரச அதிபர் ஜே.ஆரும் அதனை விரும்பவில்லை. அந்த உடலங்களை கொழும்புக்குக் கொண்டு சென்று அரசியலாக்கும் செயற்பாட்டில் ஜே.ஆர் இறங்கினார். இவ்வாறான நடவடிக்கை சிங்கள மக்கள் மத்தியில் வன்முறையைத் தூண்டும் என பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ கூறிய போதிலும், அரச அதிபர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன அதனை ஏற்கவில்லை.


**முள்ளிவாய்க்கால் முடிவல்ல...**

பரா பிரபா



கொழும்பு பொறளை கனத்தை பொது மயானத்தில் படையினரது உடலங்கள் 24ஆம் நாள் அடக்கம் செய்யப்படும்

தொடர்ச்சி 32 ஆம் பக்கம்...



# நான் அடிச்சா தாங்க மாட்ட
# மோதிப்பாரு வீடு

கொரியத் தீபகற்பத்தில் மீண்டும் ஒருமுறை போர் மூழுமா என்ற கேள்வி தற்போது எழுந்துள்ளது. வட கொரியா - தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு இடையிலான கொரிய தீபகற்ப போர்ப் பதற்றம், தற்போது வட கொரியா - அமெரிக்கப் பதற்றமாக உருவெடுத்துள்ளது.

இப்பந்தியினை எழுதிக் கொண்டிருக்கும் வேளை, பசுபிக் பகுதியில் உள்ள அமெரிக்காவின் குவாம் தீவினைத் தாக்க தாம் தயாராகி வருவதான வட கொரியாவின் அறிவிப்பு இப்பதற்றத்தினை உச்சம் அடையச் செய்துள்ளது.



வடகொரியா அமெரிக்காவை அச்சுறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் இருப்பது அவர்களுக்கு நல்லது எனத் தெரிவித்துள்ள அமெரிக்கா, இல்லை என்றால் அவர்கள் இதுவரை இந்த உலகம் காணாத விளைவை சந்திப்பார்கள் என எச்சரித்துள்ளது. இரண்டாம் உலகப் போரின் போது, பசுபிக் கடற்பரப்பில் ஹவாய்த்தீவுப் பகுதியின் பேர்ல் காபரில் நிலை கொண்டிருந்த அமெரிக்கப் படையினர் மீது ஜப்பான் நடாத்திய அதிரடித்தாக்குதல், ஜப்பான மீதான அமெரிக்காவின் அணுகுண்டுத் தாக்குதலில் போய் முடிந்தது.

அதனையே பசுபிக் குவாம் தீவின் மீதான வட கொரியாவின் தாக்குதல் எச்சரிக்கை, ஹவாய்த்தீவின் பேர்ல் காபரை ஞாபகப்படுத்துகின்றது. காரணம் இத்தீவில் அமெரிக்கா, ஆசிய பசுபிக் மூலோபாய மையமாக தனது ஒரு தொகுதி இராணுவத்தினை நிலை கொள்ள வைத்துள்ளது.

இந்நிலையில் வட கொரியாவின் எச்சரிக்கையும் முன்னகர்வும் அணுவாயுதப் போர் ஒன்றுக்கு வித்திட்டுவிடுமோ என்ற அச்சத்தினை அனைத்துலக மட்டத்தில் ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும் மீண்டுமொருமுறை அணுவாயுத யுத்தத்தை இந்த உலகம் சந்திக்க விரும்புமா என்ற கேள்விகளும் எழாமல் இல்லை.

அமெரிக்காவின் முன்னாள் அரசுத்தலைவர் பராக் ஒபாமா, அணுஆயுத பரவலைக் குறைப்பதில் தனது ஆட்சிக்காலத்தில் பல்வேறு முன்னெடுப்புக்களை எடுத்திருந்தார்.

50க்கும் மேற்பட்ட நாடுகள் பங்கெடுத்திருந்த உச்சி மாநாடு ஒன்றினையும் வொஷிங்டனில் ஒபாமா நடாத்தியிருந்தார்.

அதில், அணு குண்டுகளோ அல்லது அணுஆயுத தளபாடங்களோ பைத்தியக்காரர்களின் கைகளில் கிடைத்தால் அவர்கள் சாத்தியமான அளவிற்கு அப்பாவி மக்களை கொல்ல பிரயோகிப்பார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை என்று ஒபாமா அம்மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

குறிப்பாக அம்மாநாட்டில் கொரிய தீபகற்பத்தை அணுஆயுதமில்லா பகுதியாக்குவதற்கு சீனாவும் அமெரிக்காவும் ஒப்புக் கொண்டிருந்த போதிலும் இவ்விடயத்தில் இரு நாடுகளுக்கும் இடையில், ஓடும் புளியம்பழமுமான நிலையே இருந்தது.

காரணம், வட கொரியாவின் அணுவாயுத முனைப்புக்களையும் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகளையும் காரணங்காட்டி தென் கொரியாவிலும் ஜப்பானிலும் அமெரிக்கா நிறுவ முனைந்த கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை எதிர்ப்பு தளங்கள் தன்னை ஆழம்பார்கின்ற ஓர் முயற்சியாகவே சீனா கருதியது. இதே பார்வையினைத்தான் இவ்விவகாரத்தில் அமெரிக்கா மீது ரஸ்யாவும் கொண்டிருந்தது.

இருப்பினும் ஒருவரை ஒருவர் சந்தேகித்தவாறே அணுவாயுத பரவல் தடுப்புக் கொள்கையில் இவ் வல்லரசு நாடுகள் ஒன்றாகின.

தற்போது வட கொரியாவின் முறை !

முன்னராக ஈரான் அணுவாயுத



# - நாலு மாசம் தூங்க மாட்ட
# போய் சேர மாட்ட!



விவகாரத்தில் மேற்குலகுடன் முரண்டுபட்டு கொண்டிருந்தது. ஈரானின் அணுவாயுத முனைப்புகள் ஒவ்வொன்றும் அதன் பேரம் பேசும் சக்தியாக வலுவாக்கியது. இறுதியில் மேற்குலகத்துடனான உடன்பாட்டுடன் ஈரான் விவகாரம் ஒய்வுக்கு வந்தது.

தற்போது வட கொரியாவுடனான அமெரிக்காவின் முரண்பாடு என்பது அதன் நீண்ட தூர ஏவுகணைகளில் இருந்தே தொடங்குகின்றது.

அணுவாயுத முனைப்புகள் ஒருபுறமிருக்க, அணுவாயுதத்தினை காவிச்செல்லும் வட கொரியாவின் ஏவுகணை எல்லை, அமெரிக்காவின் கலிபோர்னியா வரை எட்டியுள்ளது என்பதே அமெரிக்காவின் கோபத்துக்கும் காரணம். இது அமெரிக்கா எதிர்கொண்டுள்ள நேரடி அச்சுறுத்தலாக அமெரிக்கா கருதுகின்றது.

இந்நிலையில்தான் வட கொரியாவினை கட்டுக்குள் வைத்திருக்க அமெரிக்கா தற்போது பலதளங்களிலும் முனைகின்றது.

வட கொரியாவுடன் நல்லுறவினை கொண்டுள்ள சீனா ஊடாக, வட கொரியாவினை கட்டுப்படுத்த அமெரிக்கா நினைக்கின்றது. கொரிய தீபகற்பத்தில் போர் ஒன்று மூழும்பட்சத்தில் ஒரு கொரியாவாக அது மாறும் நிலையில், தனக்கு அருகிலேயே அமெரிக்கா வந்துவிடும் என்ற அச்சம் மட்டுமல்ல பல மில்லியன் வட கொரிய அகதிகளுக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விடும் என்ற அச்சம் சீனாவுக்கு இருப்பதாக கூறப்படுகின்றது.

இதனாலேயே வட கொரிய - அமெரிக்க முரண்பாடுகளை தணிப்பதில் சீனா ஆர்வம் காட்டுகின்றது.

மேலும் சீனாவினைக் கட்டுப்படுத்தும் மூலோபாயத்தின் ஓர் அங்கமாக தென் கொரியாவில் தனது படைத்தளத்தினை அமெரிக்கா நிறுவியுள்ள நிலையில், வட கொரியாவுடன் நிலை கொள்ள வேண்டிய மூலோபாயத் தேவை அமெரிக்காவுக்கு இல்லை எனவும் கூறப்படுகின்றது.

இப்புறநிலையில் அமெரிக்காவை ஆத்திர மூட்டும் வட கொரியாவின் நடவடிக்கைகள் போர் ஒன்றுக்கான





**சர்வதேசத் செய்திகள்**
**சுதன்ராஜ்**

திகதியைத் தீர்மானித்து விடுமோ என்ற அச்ச மேகங்கள் கொரிய தீபகற்பத்தில் தற்போது ஏற்பட்டுள்ளது.

சர்வதேச சட்டதிட்டங்கள், ஒப்பந்தங்கள், ஐ.நா.வின் விதிகள் எல்லாவற்றையும் மீறிய வட கொரியாவின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த அதன் மீது கடுமையான பொருளாதார தடையை விதிக்கும் வகையில் புதியதொரு தீர்மானம் ஒன்றினை ஐ.நா.வில் அமெரிக்கா கடந்த வாரம் கொண்டு வந்திருந்தது. இத் தீர்மானத்துக்கு ஐ.நா. பாதுகாப்பு சபையில் உள்ள 15 நாடுகளும் ஒருமனதாக ஒப்புதல் வழங்கியிருந்தன.

இதற்கு பதிலடியாகவே பசுபிக் பகுதியில் உள்ள அமெரிக்காவின் குவாம் தீவின் மீது தாக்குதல் நடத்துவோம் என வட கொரியா கொக்கரித்துள்ளது.

ஜப்பான் மீதான அமெரிக்காவின் அணுகுண்டுத் தாக்குதலுக்கு ஹவாய்த்தீவின் பேர்ல் காபர் மீதான தாக்குதல் அமைந்தது போல், வட கொரிய மீதான அமெரிக்காவின் அணுகுண்டுத் தாக்குதலுக்கு குவாம் தீவு அமைந்துவிடுமா?

பரபரப்பான வரும் வாரங்கள் இதற்கு பதில் சொல்லும்



# கேவிலார் திருத்தலம் : வருடாந்த பூசை – ஜேர்மனி











# செஞ்சோலையில் உதிர்ந்த மலர்களின் நினைவாக.

என்
விழியோரம் மழை
மேகக் கூட்டம்
செய்தி கொண்டு வந்த
கந்தக காற்றின்
திசை அறிய ஓடுகிறது
எங்கள் தேசம்

தகவலின் உண்மை
சிதறிய குருதி
உரைத்த போது கரங்கள்
பலமிழந்து போனது

கால்கள் நகர மறுத்தன
எங்கள் பார்வையின் தூரமெங்கும்
உடல்களின் சிதறல்கள்

அன்று வள்ளிபுனம்
சிதைந்து போய்
பள்ளி பிள்ளைகளின்
இரத்த குளியலில்
சிவந்து கிடந்தது

பாடும் குயில்களாய்
நர்த்தன மயில்களாய்
மகர யாழிசையாய்
கோதையர் மொழியோசை
வான் வெளியில்
அவலமாய் பரவிய
கொடூர நிமிடத்தை
தாங்கி நின்றது வள்ளிபுனம்

வெள்ளையுடை உடுத்தி
புள்ளி மான்களாய்
துள்ளி திரிந்த
மாந்தர் அணி
மருத்துவமும்
தலைமைத்துவமும்
கற்க என்று தானே
கூடி இருந்தார்...?

கூட்டி அள்ளிய தசை
துண்டங்களின் மேல் நின்று
ஆடிய சிங்களத்தின்
தாண்டவ கூத்து
வள்ளபுனத்தை தின்று
ஏப்பம் விட்டது

பாட்டும் கூத்தும்
பயில்தலும் என
சந்தோசத்தின் உச்சத்தை
கழுத்தறுத்து போட்டது

வள்ளிபுன வானம்
முழுதும் சிவந்த
குருதி தோய்ந்த
தமிழின் காற்றால்
சிவந்து கிடந்தது

கொன்று குவித்து
பள்ளியில் சுடுகாட்டை
உருவாக்கி மகிழ்ந்தான் மகிந்த
இரத்தம் என்றால்
சுவை பிரியன்
அதனால் தான்
தமிழ் இரத்தம் தோய்ந்த
துண்டை கழுத்தில்
கொண்டலைகிறான்

வானில் இருந்து வந்த
அந்த கரிய முகில் கீற்று
சிங்களத்தின் இரத்த அபாயம்
சொல்லி நின்றது

ஆனாலும் யார் அறிவர்
சிவந்த துண்டை கழுத்து
மாலையாக்கிய கயவன்
அன்றே முள்ளிவாய்க்காலுக்கு
முகவுரை எழுதப்போகிறான்
என்பதை

தாய் நினைவு மறந்து
தந்தையின் அருகாமை துறந்து
கற்க வந்தவரை
புலியாய் பெயரிட்டு
கயவன் கருவறுக்க
கந்தகம் சுமந்து கழுகாக
வருவான் என்று யார் அறிந்தோம்

அன்று அதிகாலை
வானமே அதிர்ந்தது
வையகம் இருண்டது
தேசமே மௌனித்து
நிசப்தம் கண்டது
நிமிர்ந்தெழுந்த கரிய புகை
வானத்தில் இருந்து எங்கள்
குழந்தைகள் உடல்
சிதறிய கதை சொல்லி நின்றது

வானமேறி வந்து
சிங்களனின் ஏவல்
இரும்பு பறவை
இட்டு சென்ற
கந்தக முட்டை .
அந்த வனத்தை
எரித்து சுடுகாடாக்கியது

திரும்பும் இடமெங்கும்
தசை துண்டுகள்
தொட்ட இடமெங்கும்
இரத்தத்தின் சிதறல்கள்
பிய்த்தெறிந்த உடல்
துண்டுகளின் விதைப்பு
மரத்தில் தொங்கிய
மனித எச்சங்கள் என
நெஞ்சம் வெடித்து இரத்தம் கசிந்து
காட்டாறாய் குருதி பாய்ந்தோடி
கிடந்தது வள்ளிபுன கிராமம்

நான் கண்டேன்;
என் சகோதரியின் உடல்
துண்டுகள் ஊர் முழுக்க
சிதறிக்கிடக்க கண்டேன்
வாடி ஓடுவம் என்றிழுத்தபடி
செத்துக் கிடந்தவளை கண்டேன்

கனவுகளை சுமந்த
கண்கள் திறந்தபடி
மூச்சு நின்றுவிட்ட
இளையவளை கண்டேன்
தேநீர் குவளை கையை
விட்டகலாது வாயில்
சிந்திய துளிகளோடு
செத்து போன
தங்கையை கண்டேன்

வள்ளிபுனம் சிதைந்த போது
வங்கம் முழுக்க
மகிழ்ந்ததையும் நான் கண்டேன்

இப்போதும் காண்கிறேன்
சிதைந்து கிடந்த
வள்ளிபுனத்தின்
புலராத இரவுகளை
மடியில் சுமக்கும்
தாய்களின் வேதனையை
என் கண்முன்னே....

- பரிமைந்தன்

# செங்கொடி

கொடிகாக்கத் – தன்னைக்
கொளுத்திக் கொண்ட உயிருண்டு
உயிர்காக்கத் தன்னைக் –
கொளுத்திக் கொண்ட கொடியுண்டா?
உண்டு: அதன்பேர் செங்கொடி:
இனிமேல் – அதுதான் என் கொடி!

தொன்மைத் தமிழரெலாம் – ஒரு
தொப்புள் எழுந்த கொடி: இவள்
தொப்புள் எழுந்த கொடிகளைக் காக்க –
வெப்புள் விழுந்த கொடி!
இதுதான் – எனது –
வணக்கத்திற்குரிய கொடி! இதை
வணங்காது வேறெதற்கு முடி?

மூவுயிர் விடு! ஈடாக என் –
பூ வுயிர் எடு! என்று
எமனிடம் தந்தாள் தன்னை
செங்கொடி கன்னியாயினும் – மூன்று
சேய்களைக் காத்த அன்னை!
ஆம் அந்தக் –
கன்னி தீயானாள்: தீயாகி –
கன்னித் தாயானாள்!

பெருவாரியான நாடுகள்
பெரும்பிழை புரிந்தோரையும் –
சிறையில் வைக்க முயலுமேயன்றி –
சிதையில் வைக்க முயாலாது
ஏன் எனில் –
சிதையில் வைத்தது தவறென்றால்
சீவனை வழங்க இயலாது!

மரண தண்டனைக்குதான்
மரண தண்டனை தர வேண்டும்
மானுடற்கு மரணம் – கயிறு வழி யல்ல
காலன் வழிதான் வர வேண்டும்!

விழிநிறையக் கனாக்களுமாய்
விடை தெரியா வினாக்களுமாய்
இருபது ஆண்டுகள் இறந்து போனபின்...
இம் மூவர்க்கு இன்னமும் மீதமாய் –
இருக்கும் வாழ்வையும் –
கயிறு சுருக்கும் என்றால் .... அது –
அரக்கம் இருக்க வேண்டாமா – இரக்கம்?

"கண்ணுக்குக் கண்! எனும்
கருத்தை ஏற்காதவர்
காந்தி தபால் தலையில் மட்டுமல்ல
நம் நடக்க வேண்டாமா –
நம் எண்ணத்திலும் தேசப்பிதாவை ஏந்தி?

செங்கொடியே என் செல்ல மகளே!
சேவிக்கத் தகுந்ததுன் சேவடி துகளே!
ஒன்றுரைப்பேன் உன் தியாகத்திற்கில்லை
ஒப்பு என்றாலும் – அதை ஏற்பதற்கில்லை: அது தப்பு!

– வாலி





Adchaya International
ADCHAYA INTERNATIONAL
AYVIN
THE PERFECT CHOICE
உங்கள் சமையலறைக்கு தேவையான தரமான BRANDED
சமையலறை சாதனங்களை அள்ளிச் செல்லுங்கள்...!
200 €க்கு மேற்பட்டகொள்வனவிற்கு
அழகிய தரமான AYWIN RICE COOKER , அல்லது
CHAPATHY MAKER, அல்லது 2 in 1 PUTTU MAKER
முற்றிலும் இலவசம்...!
100 €க்கு மேற்பட்ட கொள்வனவிற்கு
அழகிய தரமான 15 € பெறுமதியான
Premier PUTTU MAKER
முற்றிலும் இலவசம்...!
இத்துடன் ஐரோப்பா எங்கும்
FREE DELIVERY..!
DTH
DIRECT TO HOME
தயாரிப்பாளரிடமிருந்து
பெறப்பட்ட பொருட்கள்
இடைத்தரகர்கள் இல்லாத
நேரடி விற்பனை
100% QUALITY
ஐரோப்பா முழுவதும்
FREE DELIVERY
விரைவில்..Onlnine Shopping... www.anjaara.com
FREE SHIPPING
Vidiem
Premier
AYVIN
ANJARA
SREERAM
ULTRA
SKY
Damini
MOKSH
AGARBATTI

**போரில் இறந்தவர்களுக்கு மாத்திரமே போர் முடிவாக அமைந்துவிட்டிருக்கலாம். ஆனால் போரின் வடுக்களைச் சுமந்து கொண்டிருப்பவர்களுக்கு வாழ்க்கை நித்தம் நித்தம் போராட்டமாகவே இருக்கிறது.**

**உடமைகளை, உறவுகளை, அவயங்களை, தன்மானத்தினை இழந்து வாழ்வாதாரத்திற்கு அல்லல்படும் தமிழின உறவுகளின் அன்றாட வாழ்க்கை, இல்லை ... ஒவ்வொரு மூச்சும் போராட்டமாகவே இருக்கிறது. அன்று எமது, எமக்கு என்று பன்மைக்காக யாகம் செய்தவர்கள் இன்று தயவுகள் இன்றி தனிமையில். அன்னைத்தமிழுக்காக வாழ்க்கைகளை அர்ப்பணித்தவர்களின் கண்ணீரில் குண்டுதுளைத்த வலியினைவிட மறக்கப்பட்டோமே என்கிற வலி அதிகம்.**



**பல தசாப்தங்களாக நடாத்தபட்ட திட்டமிட்ட இன அழிப்பில் தமது வாழ்வாதாரங்களை, உறவுகளை, அவயங்களை இழந்து அன்னலுறும் உறவுகளின் குரலாக ஐபிசி தமிழ் பத்திரிகை புலம்பெயர்ந்து வாழ் உறவுகளுடன் உறவுப்பாலமமைக்கின்றது.**

**புலம்பெயர் தேசத்தில் உங்களின் கடின உழைப்புடன் உங்கள் வாழ்க்கை ஓட்டத்தில் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் உறவுகளே, உங்களிடம் இவர்கள் எவரும் யாசகம் செய்யவரவில்லை, உரிமையுடன் உறவுகள் உங்களை நாடியுள்ளார்கள். உங்களால் இயன்றளவு அவர்களுடன் நேரடியாகப்பகிருங்கள். எமக்காக வடுக்களைச் சுமந்து கிறுக்கல்களான இவர்களின் வாழ்க்கை உங்கள் உதவியால் மேம்படட்டும்.**

# உறவுப்பாலம்

தமிழ் மக்களின் நிம்மதியான சுபீட்சமான வாழ்வுக்காக அன்று ஆயுதமேந்தி போராடி, தமது அங்க அவயவங்களை இழந்து, தமது எதிர்கால வாழ்வை பற்றி என்றும் சிந்திக்காது, தமிழ் மக்களுக்கான விடிவே தமது இலக்காக கொண்டு போராடிய முன்னாள் போராளிகள், இன்று தமது வாழ்வை கொண்டுநடத்த படுகின்ற வேதனைகள் சொல்லிலடங்காதவை.

அதேபோன்று போராட்டத்தில் இணைத்துக்கொண்டு களத்திலே சமராடி மாவீரரானவர்களின் உறவுகள் படும் வேதனைகள் அதைவிட அதிகமாக காணப்படுகிறது. எமது உறவுகள் அவர்களை சமூகத்தில் இன்று பார்க்கும் விதம் மிகவும் வேதனை அளிக்கிறது.



அன்று போராளி குடும்பம்; மாவீரர் குடும்பம் என்ற உயரிய கௌரவத்தை கொண்டு வாழ்ந்தவர்கள்; இன்று எம்மத்தியில் மதிக்கப்படாமல் இருப்பது வேதனையளிக்கிறது. அந்த வகையில் தனது இரண்டு பிள்ளைகளை நாட்டின்விடுதலைக்காக மாவீரர்களாக ஆக்கி, தனது கணவனையும் இழந்து, இன்னொரு மகனையும் யுத்தத்தில் இழந்து வேதனையில் வாடும் தாயின் சோகக் கதையிது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளிய-வளை 3 ஆம் வட்டாரத்தில் போரின் பாதிப்பிலிருந்து மீள முயன்று கொண்டிருக்கும் பலரின் மத்தியில் இன்னும் எதுவித உதவிகளும் அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருபவர் முத்தையா இராஜேஸ்வரி.

விசகடி மருத்துவர் கதிரித்தம்பி முத்தையா. ஒருகாலத்தில்... பெரிய குடும்பம். இவரின்குடும்பம் ஆரம்ப காலம் முதல் விடுதலைப்போருக்காக பல்வேறு உதவிகளை வழங்கி வந்தது.

மூத்த ஆண் மகனான தர்மகுலசிங்கம் விடுதலைப்புலிகளின் தொடக்க காலத்தில் அவர்களுடன் இணைந்து நாட்டிற்காக சேவை செய்து கால் ஒன்றினை இழந்த நிலையில் பல்வேறு உடற் காயற்களுடன் தற்போது ஒரு குடும்பமாக வாழ்ந்து வருகின்றார்.

*1996* ஆம் ஆண்டு ஜெசிக்குறு படை நடவடிக்கை காலகட்டத்தில், இவரது மூத்த மகள் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் சோதியா படையணியில் இணைந்தார். லெப்ரினன் மேதினி அல்லது வீரத்தேவி, *1998.03.05* அன்று ஜெயசிக்குறு படை நடவடிக்கையில் வீரச்சாவடைந்தார்.

இதன் பின்னான போரின் இறுக்கமான காலகட்டங்களில் தனது இறுதி மகனான தமிழ்றூபனை எல்லைப்படைக்காக அனுப்பிவைத்தனர். எல்லைப்படைக்காக நெடுங்கேணி தாக்குதல், கட்டைக்காடு தாக்குதல் என பல தாக்குதல்களில் பங்கெடுத்து தனங்கிளப்பு பகுதியில் *2000.01.02* அன்று வீரச்சாவடைந்தார்.

வறுமையின் மத்தியிலும் தனது குடும்பத்தை வழிநடத்திச் சென்ற தந்தையான முத்தையா தனது இறுதி மகனின் வீரச்சாவின் துயரத்தில் படுத்த படுக்கையாகி, *2000.05.17* திகதி சாவடைந்தார்.

இவர்களின் குடும்ப நிலையினைக் கருத்தில் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் மாதம் தோறும் *5* ஆயிரம் ரூபா படிக் கொடுப்பனவு கொடுத்தனர். குடும்பத்தலைவனை இழந்த நிலையில், தனது குடும்பத்தை வறுமையில் விவசாயம் செய்து, வயல் விதைத்து, கச்சான் செய்கை செய்து,





பல்வேறு வேலைகளை செய்து தனது குடும்பத்தை காத்துக்கொண்டுவந்த தாயார் முத்தையா இராஜேஸ்வரி, கடந்த *2007* ஆம் ஆண்டு முள்ளியவளையில் இருந்து இடம் பெயர்ந்தார்.

போரின் இறுதி நாட்களில் *2009.05.15* ஆம் திகதி இலங்கை படையினரின் எறிகணையில் இன்னொரு மகனான கண்டன் எனப்படும் தனயாகநாதன் சிக்குண்டு உயிரிழக்கின்றார். இவரது உடலைக் கூட முழுமையாக அடக்கம் செய்யமுடியாத தாயாக கடைசி ஒரு பிள்ளையுடன் இலங்கைப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் சென்று, செட்டிகுளம் முகாமில் பல்வேறு இன்னல்கள் துன்பங்களைச் சுமந்து, *2012* ஆம் ஆண்டு எதுவுமே அற்ற நிலையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டார்.

நிவாரணம் கொடுக்கும் அரச இயந்திரங்களின் பாகுபாடு, விடுதலைப்புலிகளின் காலத்தில் அவர்களின் உதவியை பெற்ற உங்களுக்கு இப்ப என்ன உதவி என்ற கேட்கும் அரச அதிகாரிகள், வீட்டுதிட்டத்தில் புறக்கணிப்பு என வாழ்வாதார உதவிகளில் புறக்கணிக்கப்பட்டு

மாவீரர்களின் தாயான முத்தையா இராஜேஸ்வரி அவர்கள் தொடர்ச்சியாக அனுபவித்துவரும் அவலங்கள் சொல்லிலடங்கா. உதவிகள் ஏதும் அற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாக தாயார் முத்தையா இராஜேஸ்வரி கண்ணீருடன் தெரிவித்தார்.

தனது வாழ்வாதாரத்திற்காக கிடுகு இழைத்து, கச்சான் உடைத்துகொடுத்து தனது வாழ்க்கையினை பல துன்பங்களின் மத்தியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் தாயாருக்கு உதவிசெய்வதற்கு உற்றார் உறவினர்கள் எவரும் பொருளாதார நிறைவுடன் இல்லை.

தமிழினத்தின் விடுதலைக்காக தனது குடும்பத்தினை அர்ப்பணித்த மாவீரர்களின் தாயாரான முத்தையா இராஜேஸ்வரி, தனது வயது முதிர்ந்த காலத்தில் துன்பங்கள் சிறிது நீங்க புலம்பெயர் உறவுகள் கரம் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையில் ஐபிசிதமிழ் பத்திரிகை மாவீரர்களின் தாயாருக்கும், புலம்பெயர்உறவுகளுக்கும் உறவுப்பாலமமைக்கின்றது.

**தாயாரின் நேரடித் தொடர்பு :**

# 0094771223292

உறவுப்பாலத்தில் தரப்படும் விபரம் ஐபிசி தமிழின் தாயக செய்திப் பிரிவினரால் சம்பந்தப்பட்டவர்களிடம் நேரடியாகப் பெறப்பட்டது. இவ் அறிவிப்பினைத் தவிர உங்களால் மேற்கொள்ளப்படும் அனைத்து தொடர்புகளும், உங்கள் உதவிகளும் சம்பந்தப்பட்டவர்களுடன் நேரடியானதாக இருக்கும்.


OPAL Residencies
தலைநகரில்
முதலீட்டின் சிறந்த பலனாக
அழகிய மனை
OPAL
YD Construction
Email: info@ydapartment.com
Web: www.ydapartment.com
City Sun Holdings
We bring out the best
Email: info@citysunholdings.com
Web: www.citysunholdings.com
26A, FRAZER AVENUE, DEHIWALA, SRI LANKA.
TEL: 011 2 733 891 / 077 7 322 168 / 071 9 999 901 / 071 9 999 902

## வெறும் கற்பனையாக மாத்திரம் இருந்துவிடாதோ என்று ஏங்கவைக்கும் அவலத்தின் குறிப்புகள்.

# குருதிக்குள் ஒரு பயணம்

சுவடு - 3

## தமிழின அழிப்பின் நினைவலைகள்

இரத்தினம் கவிமகன்



**பயணம் தொடர்கிறது...**



நடத்தி முடிக்கப்பட்ட அன்புத்தம்பியின் சாவினை மனசு ஏற்க மறுத்தாலும், தொடர்ந்து அதை நினைத்து கொண்டு வாழ முடியாது என்ற உண்மை நிலையோடு நான் அடுத்த பணிக்காக தயாராகினேன். அவனது இறுதி நிகழ்வுகள் முடிந்த போது காயப்பட்டிருந்த இளையவன் உடல் தேறி இருந்தான். ஆனால் அவனது கையை மட்டும் மருத்துவர்களால் காப்பாற்ற முடியவில்லை. அவன் ஒரு கரம் இல்லாதே இன்றும் வாழ்கிறான்.

என்ன செய்வது? திரும்பும் இடமெங்கும் மகிழ்ச்சியும் சந்தோசமும் பொங்கித்திரிந்த எமது தேசம் அடிக்கடி சிங்கள தேசத்து வன்பறிப்பாளர்களின் கோரத்தனமான தாக்குதல்களால் புண் பட்டுக்கொண்டிருந்தது. வெடிச்சத்தங்களுக்கு ஒய்வு கிடைக்கவில்லை. ஓரிடத்தில் நிலையாக தங்கி இருக்க முடியவில்லை. ஒற்றைத் தறப்பாள் கொட்டிலை ஐந்து அல்லது பத்து நாட்களுக்கு மேல் ஓரிடத்தில் போட்டுக்கொண்டு வாழ முடியவில்லை. எம் மக்கள் மாறி மாறி நடந்து கொண்டே இருந்தார்கள். மன்னாரில் இருந்து பாரவூர்தியில் ஏற்றி வந்த உடைமைகள் ஒற்றை துவிச்சக்கர வண்டியில் கொண்டு செல்லும் அளவுக்கு குறைந்திருந்தது. மக்கள் நடைப்பிணமாகவே வாழத்தொடங்கி இருந்தார்கள்.

இவ்வாறான ஒரு நாளில் தான் நித்திரையின் உச்சத்தில் இருந்த போது வான் தாக்குதலுக்காக வானூர்திகள் வந்து கொண்டிருப்பதை வான் பாதுகாப்பு கண்காணிப்பு பிரிவு உறுதிப்படுத்துகிறது. எமக்கும் அதற்கான சமிக்ஞை கிடைக்கிறது. ஆனால் நித்திரை இன்மையால் சிவந்து கிடந்த கண்கள் எம்மை பாதுகாப்பு நிலைக்கு செல்ல விடவில்லை. மறுபக்கம் திரும்பி படுத்து கொண்டோம்.

திடீர் என்று ஒருவன் வந்து எம்மை எழுப்புகிறான். களமுனையில் இருந்து பின்தள வேலைக்காக வந்திருந்தான் அவன். அவனை கண்டதும் கொஞ்சம் மகிழ்ச்சி நித்திரையை விட்டு எழுந்தோம். என்ன மச்சான் லைன்ல நடக்குது ? அவன் களமுனை தகவல்களை எம்மோடு பரிமாறிக் கொள்கிறான். " மச்சான் எங்களுக்கு செல் சப்போர்ட் காணாம இருக்கு மச்சான்." தீச்சுவாலை சண்டைக்கு நாம் அடிச்ச செல்லின் பத்துவீதம் கூட இப்ப அடிக்கிறதில்லை. அதே மாதிரி கொஞ்சம் என்றாலும் மணியண்ணை ஆக்கள் தந்தால் ஆமி கிட்டயும் வரமாட்டன்.

"உண்மை தான்டா எங்கட செல் பவர் அவன விட அதிகமா இருந்த காலத்தில் எம்மை எதிர்கொள்ள எதிரி பயந்து கிடந்தான்"...

சண்டை வலுவின் உச்சத்தில் நாம் இருந்தபோது எம்மீது பயம் இருந்தது. அனைத்து வளங்களாலும் முன்னிலை பெற்ற விடுதலை அமைப்பாக, சிறந்த நிர்வாக கட்டமைப்புக்களை சர்வதேச நிலைக்கு உருவாக்கி இருந்ததை சர்வதேசமும் பார்த்து கொண்டிருக்க முடியாது தவித்தது. அதனால் தான் சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் கொண்டுவரப்பட்டு "சமாதானம்" என்ற போலி எம் மீது திணிக்கப்பட்டது. இதுவே எமது படை பலத்தை அளவிடவும் இன்றைய நிலைக்கு எம்மை தள்ளவும் சாதகமாக இருந்தது.

"உண்மை தான், மச்சான் ஆனால் ஒரு உண்மையை ஒத்துக் கொள்ளவேணும். எங்களுக்கு மூலப்பொருட்கள் இருந்தால் நாம் பலமுள்ளவர்கள் என்பது நிஜம். நேற்று நடந்த சம்பவம் அறிஞ்சனியா? எங்களிடம் எதிரியை திணறடிக்கும் வெடி பொருட்கள் இல்லை என்பது எவ்வளவு நிஜமோ அவ்வளவு நிஜம் எம் வெடிபொருளாக்க பகுதியால் தயாரிக்கப்பட்ட வெடிபொருட்கள் அவனை திணறடிப்பது. நேற்று இரவு எங்கட ஆக்கள் புத்துவெட்டுவான் பக்கத்தில இருந்து கொக்காவில் நோக்கி வர முயன்ற ஆமிக்கு நல்லா குடுத்தவங்கள். அந்த சண்டையில செல் கேட்ட போது எங்கட ஆக்கள் சண்டியனை தான் அனுப்பினவங்கள்" (சண்டியன் என்பது விடுதலைப்புலிகளின் வெடிபொருளாக்கல் பகுதியால் உருவாக்கப்பட்ட அதீத ஒலியை உருவாக்கும் பொறிமுறை கொண்ட எறிகணை)

"அனுப்பின இரண்டு சண்டியன் வெடிக்கவில்லை. வெடிக்காத செல்லுக்கு கிட்டவா கொஞ்ச ஆமி கூடி இருந்தாங்கள். எங்கட ஆக்கள் அந்த இலக்குக்கு அடுத்த சண்டியனை அனுப்ப அது சரியான இலக்கில் சென்று வெடிச்சது. இதுல கொடுமை என்ன என்றால் ஏற்கனவே வெடிக்காமல் கிடந்த இரண்டும் செல்லும் இந்த வெடிப்பின் அதிர்வில் ஒன்றாக வெடித்தது. இந்த வெடிப்பு கூடி இருந்த ஆமிக்கு செவிப்பறையை வெடிக்க வைத்தது. அதிலேயே பத்து பதினைஞ்சு ஆமி காதுக்கால இரத்தம் வந்த நிலையில் முடிஞ்சிட்டான். அந்த செல்லுக்கு பிறகு அவன் கொஞ்சம் பின்னுக்கு போயிட்டானடா. இப்ப திரும்ப முட்டுப்படுகிறான். பார்ப்பம் எங்கள் உயிர் உள்ளவரை போராடுவம்..."

அவன் சண்டை களத்தை பற்றி கதைத்து கொண்டிருந்த போது அதிகாலை 7.30 மணி இருக்கும் திடீர் என்று வானம் அதிர்ந்தது. "

"மச்சான் கிபிர்... எழும்புடா பங்கருக்க போவம். படுக்கையை விட்டு எழுந்து வெளியில் வருகிறோம். எம் தலைக்கு மேலால் பதிந்து வந்து குண்டை வீசிய போது பரந்தன் பக்கத்தில் இருந்து குண்டு வெடிப்பின் அதிர்வு எழுந்தது. மச்சான் எங்கடா இது ? அருகில் இருந்தவனை வினவுகிறேன். பரந்தன் பக்கம் போல இருக்கு. அதுக்க எங்கட ஆக்கள் நிறைய இடத்தில இருக்கிறாங்கள் யாருக்கு அடிச்சானோ தெரியல்ல...? "

மனம் பதட்டமடைய தொடங்கியது. அவன் தனது வோக்கியை ஓடவிட்டு பார்க்கிறான் இது தொடர்பான செய்திகள் பரிமாறப்படுகின்றனவா என்று. நாங்கள் வானத்தையே வெறித்து பார்த்தபடி நிற்கிறோம். எதுவும் செய்ய முடியாத நிலை வெறுப்பின் உச்சத்தில் அருகில் நின்ற தேக்கம் மரத்தில் ஓங்கி குத்துகிறான் நண்பன். சீ என்ன வாழ்க்கையடா...? எங்கட இடத்துக்க வந்து இப்பிடி செய்திட்டு போறான் எங்களால எதுவுமே செய்ய முடியாதா? வினாவை கேட்டு பதிலையும் தானே சொல்கிறான்.


"அண்ண விடமாட்டார். இவனுக்கு ஏதாவது செய்வார். செய்ய வேணும் செய்வம்..."

சிறிது நேர தாண்டவத்தின் பின் வானூர்திகள் சென்றுவிட நாங்கள் பரந்தனை நோக்கி செல்கின்றோம். எம்மை நோக்கி பல வாகனங்கள் அவசர ஒலியை எழுப்பியபடி வருகிறது. மச்சான் காயங்கள் வருகுது வேகமா போடா என்கிறான் நண்பன். நானும் என்னால் முடிந்தளவு வேகத்தில் பரந்தனுக்கு செல்கிறேன். பரந்தன் சந்தியில் இருந்து பூநகரி நோக்கிய பிரதான வீதியில் இருந்து மக்கள் ஓடி வந்ததை கண்டு அதற்குள் தான் தாக்குதல் நடந்தது என்பதை உறுதிப்படுத்தி கொண்டு சென்ற போது ஆரம்ப பாடசாலை ஒன்றின் மீதே அந்த தாக்குதல் நடந்திருந்ததை காண முடிந்தது. பள்ளி பிள்ளைகளின் அவல ஓலம் அந்த இடத்தை அழவைக்கிறது.

அருகில் நின்ற ஒரு அரசியல்துறை போராளியிடம் " என்ன ஆச்சு அண்ண?

பள்ளிக்கூடத்துக்கு அடிச்சிட்டான-டாப்பா பாவங்கள் சின்ன பிள்ளையள் கனக்க காயம். ஏழெட்டு பேர் சாவு

தொடர்ச்சி 32 ஆம் பக்கம்...



# கலை

## கல்யாணமாம் கல்யாணம் - பார்வதி கல்யாணம்



ஈழத்தின் பிரசித்தி பெற்ற வானம்பாடி யோகராஜ் அவர்களின் மகன் யோகா தினேஷ் தலைமையில் வானம்பாடிகள் வில்லிசைக்குழு மீண்டும் வேல்ஸில். தமிழர்களின் அடையாளமான கலைவடிவங்களில் வில்லிசைக்குத் தனி இடம் இருக்கிறது. அந்த வில்லிசையினை ஐரோப்பிய நாடுகளில் இசைக்கும் யோகா தினேஷ் அவர்களுக்கு கலையுலகின் வாழ்த்துக்கள்.

## பத்தல பத்தல



பாரிஸ் வாழ் இளம் இசைக் கலைஞர்களின் கூட்டு முயற்சியில் வெளிவந்துள்ளது "பத்தல". கிறிஸ் இசையில் சுகு, ரத்தி ஆதித்தன், வினோ, மைஸ்ட்ரோ ஆகியோரின் குரலில் வெளிவந்த பாடலினை ப்ரீச் ராஜா காணொளிப்படுத்தி இருகின்றார். சமீப காலமாக இளம் திறனாளிகள் இணைந்து தரமான தயாரிப்புக்களை தயாரித்து வழங்கிவருவது புலம்பெயர் கலைவெளிக்கு நன்று பயிர்க்கும் செயலாக அமைந்துள்ளது. அந்தவகையில் இப்படியான தரமான தயாரிப்புக்கள் இன்னும் பத்தல பத்தல..

## பாரிசில் வளர்ந்து வரும் நம்மவர் நீள்படங்கள்

புலம்பெயர் ஈழத்து திரை முயற்சிகளில் தலைநகர் பாரிஸ் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருந்து வருகின்றது. பல்வேறு விருதுகளைப் பெற்ற பல குறும்படங்களை உருவாக்கிய கலைஞர் கூட்டத்தினை பாரிஸ் மண் தாங்கி இருக்கின்றது.

அதன்வரிசையில் தற்போது மூன்று படங்கள் படப்பிடிப்பில் உள்ளது

*1 - ஏணை : முள்ளந்தண்டுகள், கல்லுச்சாறி ஆகிய குறும்படங்களை இயக்கியிருந்த அஜந்தன் இப்படத்தினை இயக்குகின்றார்.*

*2 - ஆறாவது நிலம்: நானாக நான் ,பிரதி போன்ற குறும்படத்தினை இயக்கியிருந்த அகீபன் இப்படத்தினை இயக்குகின்றார்.*

*3 - நாம்பன்- இசையமைப்பாளர் ஈஸ்வர் குமார் மற்றும் ஒளிப்பதிவாளர் பொன் கேதாரன் ஆகியோர் கூட்டாக இப்படத்தினை இயக்குகின்றனர்.*




# "நான் ராவணன் 

## இசைப்புயல் ரசித்த வீணை

தமிழகமே ஓவியா ஓவியா எனக் குரல்கொடுத்துகொண்டிருந்த நேரம், ஒஸ்கார் நாயகன் இசைப்புயல் AR ரஹ்மான், தனது வழமைக்கு மாறுதலாக ஒலிவியா என்னும் ஜேர்மன் வாழ் கலைஞரை தனது சமூகவலைத்தளங்கள் மூலம் அவரது 40+ மில்லியன் ரசிகர்களிடம் பகிர்ந்தார்.



முகம் முழுவதும் சிரிப்பாக மகிழ்ச்சியின் உச்சத்தில் இருந்தார் ஒலிவியா. " AR ரஹ்மான் அவர்களின் இசையில் சிறுவயது முதல் எனக்கு மிகவும் ஆர்வம், எனது வாழ்க்கையின் பின்னணி இசையே AR ரஹ்மான் அவர்களின் பாடல்கள் என்று சொல்லலாம். அப்படியிருக்கும் போது எனது ஆக்கம் அவருக்கு பிடித்திருப்பது என்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி" என்றார் மிகவும் குதூகலமாக.

சமீபத்தில் வெளிவந்த AR ரஹ்மானின் "சரட்டு வண்டில" என்னும் பாடலை வீணைமூலம் இசைத்து வெளியிட்ட ஒலிவியாவின் காணொளியினை, தனது சமூக வலைத்தளங்களில் AR ரஹ்மான் பகிர்ந்திருந்தார். இப்படியான, இசைக்கருவியால் மீளாக்கம் செய்யப்பட்ட அவரது பாடலை தனது அபிமானிகளிடம் பகிர்வது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

"இசையாக இருக்கட்டும், அல்லது மற்றைய கலை



அம்சங்களாக இருக்கட்டும், நீங்கள் பெரியவராக நினைக்கும் ஒருவர் அதனைப் பாராட்டும் போது, அதனைப் பயில வருடக்கணக்காக கடந்துவந்த சிரமங்கள் எல்லாம் ஒரு நொடியில் மறைந்துவிடும்" என்றார் உற்சாகமாக.

ஜேர்மன் நாட்டில் பிறந்த
வீணை, பரதநாட்டியம், சங்
" உண்மையில் இந்த கல
தமிழ் கலாச்சாரம், எமது
மேலும் அறிய உதவியாக இ
ஆவலும் கூடியது. தாயகத்
அழிக்கப்பட்டு வரும் இ
எமது பாரம்பரிய கலைகள
காக்க வேண்டும். ஒ
புலம்பெயர் நாடுகளில் இரு
பாரம்பரிய கலைகளை தாய
வேண்டிய சூழ்நிலை எழுந்த
விசனத்துடன்.

புலம்பெயர் தேசங்கள்
பாரம்பரியக் கலைகளை
தொடர்ச்சியாக அக்
தமிழர்கள் மத்தியிலும், பிற
மத்தியிலும் மேடையேற்
சில இரண்டாவது புலம்பெ



ஒருவர். " வெளிநாடு
பயில முன்வருகிறா
கற்கைநெறிகளுடன்
சிரமம் கொள்கின்றா
கண்டதும் கலையி
தொடர்ச்சியாக நான்
உற்சாகமும் கலை
முக்கிய காரணம்.

கலைத்துறையில்
வினவியதற்கு "நா
என்னால் முடிந்த
அத்துடன் இனிவரும்
ஆர்வம் கொள்ள தூண
கலைவடிவங்களை பிற இ
என்னால் முடிந்தவற்றினை
கலையுலகின் வாழ்த்துக்கள்.

# ...யலகு

- தினா

## ...வம்சம்"
## ...ணை வித்தகி



...ல் பிறந்த ஒலிவியா.T சிறுவயது முதல் ...டியம், சங்கீதம் முறையாகப் பயின்றவர். ... இந்த கலைகள் மூலம் நான் தமிழ், ...ம், எமது வரலாறு போன்றவற்றினை ...தவியாக இருந்ததுடன், அவற்றின் மீது ...ு. தாயகத்தில் எமது அடையாளங்கள் ...வரும் இப்போதைய சூழ்நிலையில் ... கலைகளை நாம் நிச்சயம் பேணிக் ...ம். ஒருவேளை எதிர்காலத்தில் ...களில் இருந்து தாயகம் சென்று எமது ...களை தாயகத்தில் சொல்லிக்கொடுக்க ...லை எழுந்தாலும் எழும்" என்றார் சற்று

... தேசங்களில் தமிழ் ... கலைகளை கற்று, ... அக்கலைகளை ...ிலும், பிற இனத்தவர் ...மடையேற்றும் ஒரு ... புலம்பெயர் தமிழ்



... சந்ததியருள் ஒலிவியாவும் ... வெளிநாடுகளில் பலர் ஆர்வமாக கலைகளை ...ன்வருகிறார்கள், அதில் சிலர் பாடசாலைக் ...றிகளுடன் கலைகளையும் இணைத்துக் கற்க ...காள்கின்றார்கள். அதிலும் சிலர் அரங்கேற்றம் ... கலையினை நிறுத்திவிடுகிறார்கள். ஆனால் ...சியாக நான் கலையில் ஈடுபட, என் குடும்பத்தின் ...ும் கலைமேல் எனக்கு உள்ள ஆர்வமும் தான் ...காரணம்.

...துறையில் உங்கள் இலக்கு என்னவென ...பதற்கு "நான் பயின்ற மூன்று கலைகளிலும் ...ல் முடிந்த அளவு தேர்ச்சி பெறவேண்டும், ...னிவரும் எமது சந்ததியினர் இக்கலைகள் மீது ...ாள்ள தூண்டுவதுடன், தொடர்ச்சியாக எமது ...ள பிற இனத்தவருக்கும் எடுத்துரைப்பதற்கும் ...வற்றினைச் செய்வேன் என்ற ஒலிவியாவிற்கு, ...ழ்த்துக்கள்.








WIN 10 FREE TICKETS !

எதிர்வரும் Sep 9, இசையமைப்பாளர் D.இமான் அவர்களின் இசைக்கச்சேரியில் தென்னிந்திய திரைப்படப்பாடகர்களுடன் ஈழத்துப் பாடகர்களும் இணைந்து பாடுவதை கண்டுகளிக்க இலவசமாக 10 டிக்கெட்களை வெல்ல வேண்டுமா?

D.இமான் இசையில் பாடி மிகவும் வரவேற்பைப் பெற்ற கனேடிய நாட்டில் வசிக்கும் ஈழத்துப் பாடகி யார்? சரியான விடையினை paththirikai@ibctamil.com என்னும் முகவரிக்கு 31/08/2017 முதல் அனுப்புங்கள்.

# Discover the Ultimate Locations that Embraces the Extraordinary from

## Sri Lanka's Largest Condominium Developer

Real Estate • Construction • Facilities Management

**Blue Ocean™ GROUP OF COMPANIES**



### First Class Condos @

- No. 45, Alfred House Gardens, Col 03
- No. 06, 19th Lane, Colombo 03
- No. 121, Inner Flower Road, Colombo 03
- No. 15A, Layard's Road, Colombo 04
- No. 20, Vajira Road, Colombo 04
- No. 73, Gergory's Road, Colombo 07
- No. 02, Glenfall Road, Nuwara Eliya



### Business Class Condos @

- No. 25, Frankfurt Place, Colombo 04
- No. 502, Havelock Road, Colombo 05
- No. 08, Jayasinghe Road, Colombo 05
- No. 30, Hotel Road, Mount Lavinia
- No. 06, De Alwis Avenue, Mount Lavinia
- No. 34/2, De Serem Road, Mount Lavinia
- No. 216/A, George E De Silva Mw, Kandy



### Economy Class Condos @

- No. 23, Moor's Road, Colombo 06
- No. 31, De Alwis Place, Dehiwala
- No. 05, Railway Avenue, Nugegoda
- No. 37/2, Beach Road, Mount Lavinia
- No. 15, Lillian Avenue, Mount Lavinia
- No. 19, Barnes Avenue, Mount Lavinia




Your Investment Guaranteed with Minimum 40% Appreciation



S.Thumilan Group Chairman
ACA, ACCA, ACMA (UK), CGMA, CPA (AUS), MCSI (UK), FMAAT (SL), ACS

We help you enhance your Smart and Guaranteed Investment with
**DUAL CITIZENSHIP & RESIDENCE / INVESTOR VISA**
including other Investment Facilities

CALL US ON +94 777 546 546
to find out more Informative Advices




Easy Interest Free Installment Scheme or Local & International Bank Loan can be obtained. (*Conditions Apply)

HNB | BOC | Sampath Bank | Standard Chartered | Cargills Bank | Commercial Bank

Scan our QR BAR CODE for more exciting infos

10+ Located Cities | 30+ Condo Projects | 1100+ Condo Units

| Blue Ocean Group Head Office - Sri Lanka | Blue Ocean Europe Ltd United Kingdom | Blue Ocean Realty Canada Inc. Canada | Blue Ocean Real-estate LLC. United Arab Emirates | Blue Ocean Aussie (Pty) Ltd Australia |
|---|---|---|---|---|
| #32, 1st & 2nd Floors, Galle Road, Dehiwala, Sri Lanka | # 53 Clarendon Road, Watford, WD171LA, United Kingdom | #1 Helicon Gate, Toronto, Ontario, M1G3R7, Canada | Office 1403, Al Manara Tower, Burj Khalifa District, Business Bay, UAE | # 02 City View Road, Pennant Hills, NSW 2120, Austraila |
| ceo@blueocean.lk | uk@blueocean.lk | canada@blueocean.lk | dubai@blueocean.lk | aussie@blueocean.lk |

+44 79 6096 9684 (UK) | +94 777 546 546 (SL) | +1 (416) 904 0022 (CA) | www.blueocean.lk

# எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

## தாயக இளையோரின் எதிர்காலத்தினை மேம்படுத்தும் கல்விக்கான ஓட்டம்

பொதுவாகவே பாடசாலை நண்பர்கள் ஒன்றிணைந்தால், இளமைக்காலக் குறும்புகள் பற்றிப் பேசிவிட்டு கலைந்துவிடுவதுதான் வழக்கம்.

இந்த வழமையில் இருந்து சற்று மாறுபாடாக, மற்றவர்களுடைய இளமைக்காலமும், அவர்களது எதிர்காலமும் சிறக்க எப்படி நன்மைகள் செய்யலாம் என்று சில ஒரே வகுப்பில் கல்விகற்ற சில மாணவர்கள் மேற்கொண்ட முயற்சி உண்மையிலேயே புலம்பெயர் பழைய மாணவர்களுக்கு சிறந்ததொரு உதாரணம்.

யாழ் இந்துக் கல்லூரியில் 1992ம் ஆண்டு உயர்தரப் பரீட்சை எடுத்த மாணவ நண்பர்கள்தான் இந்த சாதனையின் சொந்தக்காரர்கள்.

வடக்கு, கிழக்கு, மலையகம் மற்றும் வடமத்திய மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் மொழி மூல க.பொ.த சாதாரன தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கணித பாட தேர்ச்சியை உயர்த்தும் நோக்குடன் இந்தப் பழைய மாணவர்கள் மேற்கொண்டு வருகின்ற செயற்பாடுகள், புலம்பெயர் மக்கள் மத்தியில் மிகுந்த பாராட்டுக்களைப் பெற்றுவருகின்றது.

வெளிக் கிளம்பியுள்ளதை நாம் அனைவரும் அறிந்துள்ளோம். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்ற ஆழ்ந்த பொருட் கோடலில், தமிழ் பேசும் மாணவர்களின் கல்வி நிலை உன்னதமான நிலையை அடைய வேண்டும் என்ற சமூகப் பிரக்ஞையின் வெளிப்பாடாக, யாழ் இந்து கல்லூரி பழைய மாணவர்கள் ஒன்றினைந்து, *'Race for Education'* என்ற பெயரிலான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றினை உருவாக்கி உள்ளார்கள்.

கடந்த 2016 க.பொ.த சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளின்படி இலங்கையிலுள்ள 98 கல்வி வலையங்களில் க.பொ.த உயர் தரத்தில் கற்க தகுதி பெற்ற மாணவர்களின் வலையமட்டத் தரப்படுத்தலில் இறுதி நிலையில் பல தமிழ்க் கல்வி வலையங்களே காணப்படுகின்றமை மிகவும் கவலை தரும் விடயமாக தொடர்ந்தும் உள்ளது. இதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பது கணித பாடத்



உயர் தரம் கற்கும் வாய்ப்பில் கணித பாடச் சித்தியின் முக்கியத்துவம், உயர் தரத்தில் கணித, விஞ்ஞானத் துறைகளில் மாணவர்களில் பங்கேற்றலை அதிகரித்தல் என்பன இலங்கையின் கல்வி வரலாற்றில் எழு வினாக்களாக துறையின் வீழ்ச்சியே ஆகும். இந்த வகையில் 2016 க.பொ.த சாதாரண தர கணித பாட பெறுபேறுகளின் படி இச் செயற்றிட்டத்தின் இலக்குக் குழுவான சித்திக்கு இடர்ப்பட்ட மாணவர்களில் வடக்கில் 1667 பேரில் 765 பேரும் (46%), கிழக்கில் 3699 பேரில் 1831 பேரும் (49%), மத்தியில் 2801 பேரில் 1567 பேரும் (56%) சித்தி அடைந்துள்ளனர். அதாவது க.பொ.த உயர்தரத்துக்கு கணித பாடச் சித்தியுடன் செல்வதற்கு ஐயத்துடன் இருந்த மாணவர்களில் இத்திட்டம் ஏறத்தாழ 50% ஆனோரை கரை சேர்த்திருக்கிறது.

மற்றும் 2016ம் ஆண்டுகளில், கல்விக்கான ஓட்டம் என்ற நிகழ்ச்சித்



திட்டத்தின் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் சிலர் மேற்கொண்ட முயற்சியின் பயனாக, 10000 இலகு கணித பாட கற்றற் செயலேடுகள் ('ஏணி') அச்சிடப்பட்டு வடக்கு, கிழக்கு, வடமத்திய, மலையக மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. மாணவர்களை இச் செயலேடுகள் மூலம் வழிப்படுத்திக் கற்பிப்பதற்காக வளவாளர்களுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. இவற்றால் உள்வாங்கப்பட்ட கல்விப் பிரதேசங்களில் கணித பாட அடைவுகள் உவப்பான நிலைமையில் பேணப்பட்டன.

2015 ம் ஆண்டு தரம் 10 இல் தவணை 3இல் கணித பாடத்தில் 11- 40 வரையான புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் இலக்குக் குழுவாக இனங்காணப்பட்டு, வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த 128 பாடசாலைகளைச் சேர்ந்த 1660 மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வகுப்புக்களை நடாத்துவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஏனைய கிழக்கின் மட்டக்களப்பு, மட்டக்களப்பு மேற்கு, கல்குடா, பட்டிருப்பு, மூதூர் கல்வி வலயங்களைச் சேர்ந்த மற்றும் காரைதீவு, மன்னம்பிட்டி, நீர்கொழும்பு போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் பேசும் மாணவர்களுக்கு 'இந்து விழி' எனும் பெயரில் 2 கையேடுகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டன. இதில் முதலாவது நூல் அடிப்படை கணித எண்ணக்கருக்களை துரித மீட்டல் செய்வதற்கும் இரண்டாவது நூல் மாதிரி வினாத்தாள்களை உள்ளடக்கியதாகவும் வடிவமைக்கப்பட்டு இருந்தது. இதனைவிட மாதிரிப் பரீட்சைகள், வழிகாட்டல் வகுப்புக்கள், நடாத்தப்பட்டன. அத்தோடு கல்விப்புல ஆளணியினருடன் இணைந்து கண்காணிப்பும் மேற்கொள்ளப்பட்டது.

கிழக்கு மாகாணத்தின் 4 கல்வி பாராட்டுக்களைச் சேர்ந்த வழிகாட்டல் வகுப்புக்களைச் செய்த வளவாளர்களுக்கு ஊக்குவிப்பு பணம் வழங்கப்பட்டது. மத்திய மாகாண வளவாளர்களுக்கு விருதுகள், சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

முன்னய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்ட அனுபங்களினடிப்படையிலும், கல்விப் புலம் சார்ந்தோரின் பாராட்டுதல்களுடனான பாரிய ஆதரவுடனும் இவ்வருடமும் (2017) முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்துகின்றோம்.



# சந்திப்பு

27 வருடங்களை கடந்து பயணிக்கிறது ஜேர்மனிய த்மிழாலயங்கள். இதில் பல நூறு செயற்பாட்டாளர்கள் இயங்கி கொண்டிருக்கிறார்கள் பல ஆயிரம் மாணவர்கள் தங்கள் தாய் மொழியை கற்று கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் நீண்ட காலங்கள் தமிழ்வளர்ப்பு செயற்பாட்டில் ஈடுபட்டு வருபவரும், ஜேர்மனிய தமிழ் கல்விக்கழக வடமாநிலத்துக்கான பிரதான செயற்பாட்டாளருமான திருமதி சுபத்திரா யோகநாதன் அவர்களை ஐபிசி தமிழ் பத்திரிகை சார்பில் கவிமகன் சந்தித்த போது:

**கவி: வணக்கம் சகோதரி திருமதி சுபத்திரா**

சுபத்திரா: வணக்கம் கவி.

**கவி: தமிழ் கல்விக்கழகம் மற்றும் தமிழாலயங்கள் பற்றி என்ன சொல்ல நினைக்கிறீங்கள்?**

சுபா: புலம்பெயர் நாடுகளில் தலைமுறை பரம்பல் நீண்ட காலங்களாக இருந்து வரும் நிலையில் வாழும் நாட்டின் பிரத்தியேக தாய் மொழி மற்றும் கலாச்சாரங்களோடு வளரும் அல்லது வாழும் தமிழர்களிடையே வளர்ந்து வரும் தமிழ் மீதான பற்றுதலின்மையை தடுத்து தமிழின் இருப்பை தக்கவைத்துக் கொள்ள வேண்டிய தேவை எமக்கு இருக்கிறது. இதை உணர்ந்தவர்களாகவே தமிழ் கல்விக்கழகம் மற்றும் தமிழாலயங்கள் உருவாக்கப்பட்டு தமிழ் மொழி கல்வி மற்றும் தமிழரின் கலைகலாச்சார கல்விகள் மாணவர்களுக்கு போதிக்கப்படுகிறது. இந்த போதனையானது எதிர்கால சிற்பிகளாக உருவாக இருக்கும் எங்கள் இளையவர்களிடையே தன் தாய் மொழி மீதான பற்றுதலையும் எங்கள் வரலாற்று விழுமியங்களையும் நிச்சயமாக மேம்படுத்தும் என்றே நான் கருதுகிறேன். இதற்காக உருவாக்கப்பட்ட இரண்டு அமைப்புக்களே இவை.

**கவி: ஜேர்மனியில் தமிழ் பணி செய்யவென பணியாற்றி கொண்டிருக்கும் தமிழாலயங்களின் செயற்பாட்டு வளர்ச்சி பற்றி குறிப்பிடுங்கள்.**

சுபா: உண்மையில் ஜேர்மனியின் மத்திய மாநில நகரம் ஒன்றில் குறைந்தது 10 மாணவர்களுடன் மாமனிதர் நாகலிங்கம் ஆசிரியரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த பணி இப்போது சராசரியாக ஜேர்மனியின் நகரங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தமிழாலயம் என்ற வைகையில் இருக்க கூடிய வகையில் 120க்கு மேற்பட்ட தமிழாலயங்கள் இப்போது பணியில் செயற்பாட்டு பரப்பை விரிவாக்கி உள்ளதை பெருமையோடு கூறலாம்.

**கவி: உங்கள் பார்வையில் எமது இளையவர்களின் தமிழ் மீதான பற்றுதல் அல்லது கற்றலுக்கான ஆர்வம் எத்தகையதாக காணப்படுகிறது?**

சுபா: என்னைப் பொறுத்தவரையில் வடமாநில செயற்பாட்டாளர் என்ற நிலையில் இருந்து அவதானித்ததை வைத்து குறிப்பிடுகிறேன். இளையவர்களுக்கு தமிழ் மீதான பற்றுதலும் கற்க வேண்டும் என்ற ஆர்வமும் இருக்கிறது. ஆனாலும் அந்த ஆர்வத்தை நாங்கள் 100 வீதமாக கணிக்க முடியாது. பெரும்பாலான இளையவர்கள் ஆர்வம் காட்டுகிறார்கள். அதனால் தான் இப்போது தமிழாலயங்களில் கற்று தேர்ந்து அத்தமிழாலய ஆசிரியர்களாக எங்கள் இளையவர்களே பணியில் இருக்கின்ற மகிழ்வான நிகழ்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

**கவி : நான் அறிந்த வகையில் இங்கே பல பெற்றவர்கள் தங்கள் பிள்ளைகளை கட்டாயப்படுத்தி தமிழை கற்பிப்பதாகவும் இளையவர்களில் பெரும்பாலானவர்கள் விருப்பமற்று பெற்றவரின் கட்டளைகளுக்காக பள்ளி வருவதாகவும் கூறப்படுகிறதே...?**

சுபா: அப்பிடி கூறுவது . விகிதாசார அடிப்படையில் குறைவு. என் அனுபவத்தில் 95வீதமான மாணவர்கள் தாமாகவே விருப்பத்தோடு வருகிறார்கள் ஏனைய 5% மாணவர்களே இப்பிடியான சந்தர்ப்பத்தை உருவாக்குகிறார்கள் அதிலும் வயதில் சிறியவர்களே இப்பிடி சிக்கல்களை தருகிறார்கள்.

**கவி: புரிகிறது. நீங்கள் குறிப்பிட்டது போல இருப்பதற்கு சாத்தியங்கள் இருக்கிறது. சரி இந்த நேரத்தில், நாங்கள் புலம்பெயர் தேசங்களில் குறிப்பாக ஜேர்மனை பொறுத்தவரை தமிழாலய ரீதியாக கணக்கெடுக்கும் போது, சராசரி 6500 மாணவர்கள் இப்போது தமிழாலயத்தில் கற்றலை தொடர்கிறார்கள். ஆனால் ஜேர்மனிய ஈழத்தமிழர்களின் வாழ்க்கை தொகையில் இது குறிப்பிட்டளவு குறைந்த அளவு தானே? ஏனையவர்கள் ஏன் தமிழாலயத்துக்குள் உள்வாங்கப்படவில்லை? அல்லது அதற்கான விழிப்புணர்வு செயற்பாட்டில் நீங்கள் ஈடுபடவில்லையா?**

சுபா: விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்சி நிரலின்படி இங்கே இருக்கும் அனைவருக்கும் தமிழ் மொழி கற்றலின் முக்கியத்துவத்தை நாமும் ஒவ்வொரு நகர தமிழாலயங்களும் செய்து கொண்டுதான் இருக்கின்றோம். ஆனால் பல பெற்றவர்களின் கேள்வி " நாங்கள் வாழ்வது டொச்லாந்தில் எதுக்கு தமிழ்? தமிழை கற்று என்ன பயன்? இந்த எண்ணங்களே அவர்களை கற்பிக்க மறுக்கிறது. வெளிப்படையாக சொன்னால் வெளிநாட்டு வாழ்க்கையின் கலாச்சாரத்துக்குள் மூழ்கி அவர்கள் தாயை மறந்து கிடக்கிறார்கள். வேறு எதுவும் இல்லை.

**கவி: நீங்கள் இப்போது குறிப்பிட்ட் விடயம் வெளிநாட்டு வாழ்க்கை முறைக்குள் மூழ்கி தமிழின் சிறப்பை மறந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதாகவே இருக்கிறது. இந்த நிலையில், இங்கே வாழ்கிற இளையவர்கள் இன்று பல பெறுமதி மிக்கவர்களாக உருவாகி வருகிறார்கள் அதாவது, மருத்துவராக, கணனியியலாளராக சட்டவல்லுனராக ஏன்... வான்வெளி ஆய்வாளராக கூட உருவாகி உள்ளார்கள். இப்படியான இந்த இளையவர்கள் வாழும் நாட்டை பொறுத்தவரை இரட்டை வாழ்க்கை முறை வாழ்வதாக கூறப்படுகிறதே அதை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

சுபா: நீங்கள் கேட்கும் இரட்டை வாழ்க்கை முறை என்பது வீட்டில் தமிழ் கலாச்சாரமும், கற்கும் ஜேர்மனிய பள்ளியில் ஜேர்மனிய கலாச்சாரமும் என்று இரு வேறுபட்ட வாழ்க்கை முறைக்குள் அவர்கள் வாழ்வது நிஜம். ஆனால் அந்த வாழ்க்கை முறையை பெரும்பாலான இளையவர்கள் வாழ கற்று கொண்டுள்ளார்கள். அது அவர்களுக்கு சுமையானதாக இல்லை. சில பிள்ளைகளே இந்த வாழ்க்கை முறையில் தங்களை ஈடுபடுத்த முடியாது துன்பப்படுகிறார்கள்.

**கவி: ஆனால் இத்தகைய வாழ்க்கை வாழும் போது இளையவர்களால் தங்களது இலக்கை சீரான வேகத்தில் சென்றடைய முடியுமா?**

சுபா: அதில் என்ன சந்தேகம்? அவர்கள் கட்டாயமாக சென்றடைவார்கள். எனக்கும் பிள்ளைகள் இருக்கிறார்கள் அவர்களும் இந்த இரட்டை வாழ்க்கை முறையிலே வாழ்கிறார்கள். என்னைப் பொறுத்த வரை எந்த வாழ்க்கை முறைமைக்குள் வாழ்ந்தாலும் தாய் மொழியையும் தாய்க்கலாச்சாரத்தையும் பின்பற்றும் ஒரு குழந்தை வாழ்வில் மேலே போவது இலகு. குறிப்பாக 18 வயதாகிய ஒரு இளையவனுக்கு இங்கே சட்டரீதியான பல அனுமதிகள் உண்டு. மது அருந்துவது தனியாக வாழ்வது என்று அது நீளும் ஆனால் எங்கள் குழந்தைகள் பெரும்பாலானவர்கள் இதுகளில் இருந்து விலகி திருமணமாகி போகும் வரை பெற்றவரோடு வாழ்வதை காணக்கூடியதாக இருக்கும். இவை எல்லாம் தமிழாலயங்கள் மற்றும் பெற்றவர்களின் விழிப்புணர்வாலே உருவாக்கப்படுகிறது.

**கவி: நிச்சயமாக நீங்கள் குறிப்பிடுவது 100 வீதம் இல்லாமல் இருந்தாலும் இவை பெறுமதியான பெறுபேறுகளே. சரி இந்த இடத்தில் முக்கியமான வினா ஒன்று. இப்போது உலகமயமாக்கப்பட்ட கல்வித்திட்டங்களை ஒப்பிடுகையில் இலத்திரனியல் மயமாக்கப்பட்ட அல்லது காட்சிப்படுத்தல் கல்வித்திட்டங்களே அதிகம். இவை போன்ற கல்வி செயற்பாடுகளில் நீங்கள் ஈடுபடுகிறீர்களா?**

சுபா: ஓம், அதற்கான முன்னெடுப்புக்கள் இருக்கின்றது. சாதாரணமாக காட்சிப்படுத்தல் கல்வி முறைமை எங்களிடம் இருக்கிறது இப்போது இலத்திரணியல் மயமாக்கப்பட்ட கல்வி முறைமை கொஞ்சம் கொஞ்சமாக புகுத்தப்பட்டு கொண்டு வருகிறது. இதை மறுக்க முடியாது.

**கவி: நல்லது சகோதரி. தங்களின் கல்வித்திட்டம் அதாவது தமிழ் கல்விக்கழகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்வித்திட்டமானது தமிழ் வரலாற்றை அடுத்த தலைமுறை கற்றுக் கொள்ள அனுமதிக்கிறதா?**

சுபா: கட்டாயமாக, இங்கே வரலாறு மட்டுமல்லாது தமிழ் மொழியை அதன் வரலாற்று சிறப்பை தமிழ் கலைகளை தமிழ் கலாச்சாரத்தை எங்கள் விடுதலையின் முக்கியத்துவத்தை என்று அனைத்தையும் போதிக்கிறது. இதற்காக விளையாட்டு போட்டிகள் தமிழ்திறன் போட்டிகள் என்று போட்டிகளை வைத்து அவர்களை ஊக்கப்படுத்தும் செயற்பாடும் எம்மிடம் உண்டு. இதனூடாக மாணவர்கள் எங்கள் வாழ்க்கை முறையை எங்களின் தமிழின் சிறப்பை கட்டாயம் கற்று கொள்வார்கள்.







# தமிழாலயம்



**கவி: இந்த இடத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள் தமிழ்திறன் போட்டி வைக்கப்படுவதாக. ஆனால் என் அவதானிப்பில் தமிழ்திறன் போட்டிக்கான தயார்படுத்தல் செயற்பாடானது முற்றிலும் ஆரோக்கியமற்றதாக இருப்பதாக தோன்றுகிறது அதாவது குறித்த ஒரு கட்டுரை போட்டியை எடுத்து கொண்டால் அதற்கான தலைப்புக்கள் முதலே குடுக்கப்படுகின்றன அந்த கட்டுரையை வேறு ஒருவர் எழுதி குடுக்கிறார் அதை பிள்ளை கொண்டுவந்து போட்டியில் எழுதி வெற்றி பெறுகிறார். இந்த செயற்பாடு எதிர் வரும் காலத்தில் அந்த பிள்ளைக்கு எழுத்தாற்றலை தூண்டுமா? அல்லது இது சரியானதா?**

சுபா: இல்லை இது தவறானதே. ஆனால் இங்கே போட்டி நடுவர்கள் பங்குபற்றும் பிள்ளையின் எழுத்துக்களில் கருத்தாற்றலை எழுத்தாற்றலை கவனமாக ஆராய்வார்கள் அதன்போது பெரும்பாலும் பிள்ளைகளின் படைப்புக்கள் வெறுமையானதாகவே இருக்கும் அதனால் தான் இப்படி செய்யப்படுகிறது.

**கவி: அப்பிடி என்றால் இது யாருக்காக வைக்கப்படும் போட்டி? பிள்ளைகளின் ஆற்றலுக்காகவா அல்லது எழுத்துக்களின் கருத்துக்களுக்காகவா? இது தவறானதல்லவா?**

சுபா: ஓம், இதற்கான செயற்றிட்டங்கள் பரீட்சை வினாத்தாளில், பரீட்சைகளில் சில போட்டிகளில் இருக்கிறது. அதாவது உரையாற்றல் கட்டுரை போட்டி போன்றவற்றுக்கு உடனடியாக தலைப்பை கொடுத்து பங்குபற்றும் செயற்திட்டம் இருக்கிறது ஆனால் இன்னும் இப்படியான செயற்பாடுகளை விரிவாக்கம் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். போட்டியில் வெற்றி பெறும் பிள்ளை அந்த தகுதியோடு கட்டாயம் இருப்பது உறுதிப்படுத்தப்படும்.

**கவி: இந்த நிலையில் நீங்கள் எடுக்கப்போகும் இந்த முன்னெடுப்புக்கள் சிறப்பாக அமைய வேண்டும். அடுத்து இப்போது இளையவர்களாக இருப்பவர்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்.?**

சுபா: இங்கு இளையோர் என்ற வரையறைக்குள் தமிழாலயம் சார்ந்தவர்கள் சாராதவர்கள் என்ற இரு வரையறை உண்டு ஆனாலும் பொதுவான வரையறைக்குள் வைத்து கூறுகிறேன் அனைத்து இளைய சமுதாயமும் தமிழை கற்று கொள்ள வேண்டும் எங்கள் கலை கலாச்சாரத்தை அறிந்து கொள்ள வேண்டும் அது மட்டுமல்லாது. திருவள்ளுவர் குறிப்பிட்டது போல "கற்க கசறட கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக" கற்றல் மட்டுமல்ல கற்றபடி வாழுங்கள். அவற்றை உங்களின் அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்லுங்கள் எங்கள் தலைமுறைக்கு பின்பான காலத்தில் உங்கள இளையவர்களுக்கு தமிழை ஊட்டுங்கள்.

**கவி: நிச்சயமாக நல்ல ஆரோக்கியமான கருத்தை அவர்களுக்காக கூறி இருக்கிறீர்கள். என் அனுபவ குறிப்பு ஒன்றை வினவுகிறேன். இப்போது இங்கே கற்கும் மாணவர்கள் தூய தமிழ் கதைப்பதை கண்டுள்ளேன். ஆனால் அந்த தூய தமிழை புரியாத பெற்றவர்கள் அவர்களை திட்டுவதும் அதை அவர்கள் புரிய வைப்பதும் சாதாரணமாக நடக்கும் ஒன்று. இந்த நிலையில் தூய தமிழ் சொற்களின் அறிமுகத்தின் போது நீங்கள் பெறும் அனுபவம் என்ன?**

சுபா: இங்கே தமிழை ஆரம்பத்தில் இருந்து கற்று வரும் பிள்ளைக்கு எந்த இடரையும் சந்திக்க வாய்ப்பு இல்லை கற்பிக்கும் எங்களுக்கும் அப்பிடியான இடர் அனுபவம் இல்லை ஆனால் பெற்றவர்கள் கட்டாயமாக புரியாது சங்கடப்படுவார்கள். எங்களோடு சண்டை போட்ட அனுபவம் உண்டு

**கவி: அப்பிடியாயின் அது தொடர்பான விழிப்புணர்வை பெற்றவர்களுக்கு கொடுக்கவில்லையா?**

சுபா: குடுத்திருக்கிறோம். அவர்கள் நீண்ட விவாதங்களின் பின் ஏற்று கொண்டிருக்கிறார்கள். சிலர் ஏற்க மறுத்தாலும் தடுக்கவில்லை இருப்பினும் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களும் தூயதமிழ் கதைக்க தொடங்கி விடுவார்கள்.

**கவி: நல்ல விடயம் இது. இந்த வேளையில் தமிழ் மொழியை பாடமாக எடுத்து இளங்கலை மானி பட்டப்படிப்பையோ அல்லது முதுகலை பட்டப்படிப்பையோ ஜேர்மனியில் படிப்பதற்கான செயற்றிட்டங்களை உருவாக்குவதற்கு இங்கே உள்ள பல்கலைக்கழகங்களில் நீங்கள் எதாவது முன்னெடுப்புக்களை மேற்கொண்டுள்ளீர்களா?**

சுபா: இல்லை இதுவரை அப்பிடி எதுவும் இல்லை நாங்கள் டிப்ளோமா அதாவது உயர்கற்கைநெறி பாடத்தை மட்டுமே இப்போது குடுக்கிறோம் எதிர்காலத்தில் சாத்தியங்கள் இருக்கலாம். ஏனெனில் ஆரம்ப காலத்தில் தமிழ்மொழி தேர்ச்சி அறிக்கைகளை ஜேர்மனிய பள்ளிகள் ஏற்பதில்லை. இப்போது தாய்மொழி கல்வியை கட்டாயப்படுத்தி தேர்ச்சி அறிக்கை புள்ளிகளைதங்கள்பெறுபேற்று அறிக்கைகளோடு இணைக்கும் செயற்பாடுகள் கூட இருக்கிறது. அதனால் சாத்தியங்கள் இருக்கிறது.

**கவி: சகோதரி முக்கியமான ஒரு வினா. இன்றைய சூழலில் புலம்பெயர்ந்து வாழும் இளையவர்கள் தொடர்பாக பல மாற்று கருத்துகள் நிலவுகின்றன அதாவது மது புகைத்தல் அப்படியான அடிமையாதல் தொடர்பாக ஆராய்ந்தால் இப்பிடியான கருத்து ஒன்று நிலவுகிறது. இது தொடர்பாக என்ன நினைக்கிறீர்கள்?**

சுபா: தமிழாலயங்களுக்குள் உள்வாங்கப்பட்ட இளையவர்கள் இப்பிடியான தவறான செயற்பாடுகளில் ஈடுபட்டதற்கான பதிவுகள் எதுவும் இல்லை. என்னால் உறுதியாக கூற முடியும் தமிழாலய இளையவர்கள் அப்பிடியான செயற்பாடுகளில் ஈடுபட மாட்டார்கள்.

ஈடுபடவும் இல்லை எங்காவது 1% மாணவர்கள் இருக்கலாம் ஆனால் 99% மாணவர்கள் அப்படி இல்லை.

இன்று திருமணங்கள் பேசப்படும் போது கூட பிள்ளைகள் தமிழாலயத்தில் கற்றார்களா அல்லது இளையோர் அமைப்பில் இருந்தார்களா என்ற வினா எழுப்பப்படுவது நீங்கள் அறிந்திருப்பீர்கள். இது ஒன்றை வைத்தே கணிப்பிட முடியும்.

**கவி: நல்லது சகோதரி, ஜேர்மனி தமிழ் கல்விக்கழகத்தின் வட மாநில செயற்பாட்டாளராக இருக்கும் நீங்கள் பல நேர பிரச்சனைகளுக்கு மத்தியில் என்னோடு இதுவரை நேரமும் கருத்து பரிமாற்றம் செய்ததற்காக மிக்க மகிழ்வான நன்றிகள்.**



# இலங்கையின் திரைப்படத்துறை

இலங்கையின் நூலியல் வரலாற்றில் அதிகம் பேசப்படாத துறைகளுள் ஒன்றாக இலங்கையின் திரைப்படத்துறை அமைந்திருப்பதை அவதானிக்கலாம். இலங்கையில் சிங்களத் திரைப்படத்துறை முன்னேறியுள்ள அளவு தமிழ்த் திரைப்படத்துறை அங்கு முன்னேறவில்லை என்பதை அனைவரும் அறிவோம். அங்கு சிங்களத் திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு படிக்கல்லாக அமைந்திருந்தவர்களில் பலர் தமிழர்களாவர்.




தமிழில் ஈழத்துத் தமிழ் சிங்கள திரைப்படத்துறை பற்றிய வரலாற்றுத் தகவல்களை அரிய புகைப்பட ஆதாரங்களுடன் பேணிவருபவர் திரு தம்பிஐயா தேவதாஸ் அவர்களாவார். இவர் ஒரு நடமாடும் ஈழத்துத் திரைப்பட தகவல் பெட்டகம் என்றால் அது மிகையாகாது. அவர் பற்றிய சிறு அறிமுகத்துடன் அவரது நூல்கள் பற்றிய குறிப்புகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

திரு தம்பிஐயா தேவதாஸ் யாழ்ப்பாணம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்ப்பாணம் புங்குடுதீவு ஸ்ரீ கணேச மஹா வித்தியாலயம், கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி, கொழும்பு அலெக்சான்ட்ரா கல்லூரி ஆகியவற்றின் மாணவராக இருந்தவர். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல், தமிழ், இந்து கலாச்சாரம் ஆகிய பாடங்களைப் பயின்றவர். கொழும்பு, கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த தமிழ் வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் தற்போது கொழும்பு, கணபதி இந்து மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். தேவதாஸ் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பத்திரிகையியலில் டிப்ளொமா பட்டம் பெற்றவர். இவரது இந்த எழுத்துத்துறை தான், பல்வேறு பத்திரிகைகளிலும் சினிமாத்துறை சம்பந்தமான ஆக்கங்களை எழுதத் துணை நின்றிருக்கின்றது என்று நான் கருதுகின்றேன்.

இலங்கை வானொலி அறிவிப்பாளராகவும், ரூபவாஹினியில் கல்விச் சேவை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவதும், சுயாதீனத் தொலைக்காட்சியில் சினிமாத்துறை நிகழ்ச்சிகளை வழங்குவதும் இவரது பிற ஆக்க முயற்சிகளாகும்.



இன்று இலங்கைத் தமிழ்ச் சினிமா பற்றி ஆதாரபூர்வமாகப் பேசக்கூடிய நமது தமிழ் எழுத்தாளர்களுள் தம்பிஐயா தேவதாஸ் அவர்கள் மிக முக்கியமானவர். ரொசாரியொ பீரிஸ், சில்லையூர் செல்வராஜன், ஒகஸ்டின் மொராயஸ், தமிழ்நெஞ்சன் ஜெயசீலன் போன்ற தமிழ் கலைஞர்களுக்கும் இலங்கைச் சினிமா பற்றிய தகவல்கள் நிறையவே தெரிந்திருந்த போதிலும் எவரும் இத்துறையில் நூலாக அவற்றை வெளியிட முன்வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வெறும் சினிமாச்செய்திகளை, ஜனரஞ்சகமயப்படுத்தப்படும் நோக்குடன் பக்கங்களை வண்ணக்கலவையில் இட்டு நிரப்பிய பத்திரிகைகளும் ஈழத்துத் தமிழ் சினிமா பற்றிய ஆவணமாக்கல் நோக்கிலான முயற்சி எதையும் மேற்கொள்ளவில்லை.

தமிழகத்தில் பேசும்படம், பொம்மை என்று நிறையவே இருந்தது போல 1950களின் பின்னர், இலங்கையில் சினிமாஸ் லிமிட்டெட் தாபனத்தாரின் 'சினி பில்ம்ஸ்" என்ற ஆங்கிலச் சஞ்சிகை எம்.டி.யேசுரத்தினம், ஏ.ஆர்.ஆசீர்வாதம் ஆகியோரை, ஆசிரியராகக் கொண்டு இயங்கியது. 'சிலோன் சினிமா" என்ற பத்திரிகை கே.யோகராஜாவை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. இவற்றில் ஆங்காங்கே ஈழத்துத் தமிழ் சினிமா, அதன் பின்னணியில் இருந்தோர் என்று பரவலாகச் செய்திகள் வெளிவந்திருந்தாலும் தம்பிஐயா தேவதாஸ் 2000-2016 காலப்பகுதியில் வெளியிட்டுள்ள ஏழு நூல்களையும் போன்ற வரலாற்றாதார நூல்கள் எவையும் இலங்கையில் வெளிவரவில்லை என்றே கூறலாம்.

இவரது பொன்விழாக்கண்ட சிங்களச் சினிமா என்ற நூல் 1947முதல் 1997 வரை 50 ஆண்டு காலங்களில் சிங்கள சினிமாவுக்குத் தம் வாழ்வை அர்ப்பணித்த தமிழ் முஸ்லிம் கலைஞர்கள் பற்றிய செய்திகள், அவர்களது புகைப்படங்களுடன் பதிவுக்குள்ளாகியுள்ளது.

சிங்களத் திரையுலகம் பற்றிய தகவல்களை இந்நூலில் படிக்கும்போது தமிழ்க்கலைஞர்களின்பங்களிப்பு வியக்க வைக்கின்றது. கூடவே இவர்களால் ஏன் இதுவரை ஈழத்துத் தமிழ்ச் சினிமாவை வளர்த்தெடுக்க முடியவில்லை என்ற கேள்வியும் எழுகின்றது.

முதலாவது சிங்களப்படத்தைத் தயாரித்தவர் என்ற பெருமை எஸ.எம். நாயகம் என்ற தமிழரையே சாரும். சிங்கள சினிமாவின் சில முக்கியமான வரலாற்றுக்கட்டங்களையும், அக்காலகட்டத்தில் தமிழ் முஸ்லிம் கலைஞர்கள் பின்னணியில் நின்று ஆற்றிய சேவைகளும் இந்நூலில் விபரிக்கப்பட்டுள்ளன.

இவரது மற்றொரு நூல் இலங்கைத் தமிழ்ச் சினிமாவின் கதை என்பதாகும். 305 பக்கங்களைக் கொண்ட இந்நூல் சென்னை காந்தளகம் என்ற வெளியீட்டு நிறுவனத்தால் வெளியிடப்பட்டது இதன் முதலாவது பதிப்பு 1994இலும் இரண்டாம் பதிப்பு 2000ம் ஆண்டிலும் வெளியானது. ஈழத்தமிழ்த் திரைப்படத்துறையை ஆராயப் புகும் ஒருவருக்கு உதவும் வகையில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது.

நூலாசிரியர் தொகுத்து வைத்திருந்த இலங்கைத் தமிழ்ப்படங்கள் பற்றிய புகைப்படங்கள், குறிப்புக்கள், கலைஞர்களின் வாழ்க்கைக் குறிப்புகள் போன்றவற்றின் உதவியுடன் விமர்சனரீதியில் அல்லாது வர-லாற்றுப்பாங்காக இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் 1993 வரை வெளியான திரைப்படங்களை ஆவணப்படுத்தும் இம்முயற்சியில் இலங்கை இந்திய கூட்டுத் தயாரிப்புகள் பற்றிய தகவல்கள் தவிர்க்கப்பட்டுள்ளமை ஒரு குறையாகும்.

இவரது மூன்றாவது திரைப்பட நூல் இலங்கைத் திரையுலக முன்னோடிகள் என்பதாகும். முதலாம் பாகமாக வெளிவந்திருக்கும் இந்நூலையும் கார்த்திகை 2001 இல் சென்னை காந்தளகத்தினர் வெளியிட்டுள்ளனர். மொத்தம் 245 பக்கங்கள் கொண்ட இந்நூலில் இலங்கையில் தமிழ் சினிமாவிலும் சிங்களச் சினிமாவிலும் பங்காற்றிய 40 கலைஞர்களைப் பற்றிய பல தகவல்கள் காணப்படுகின்றன. இந்த 40 பேரில் ஒருவர் தவிர்ந்த மற்றைய அனைவரும் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இலங்கையில் முதல் சிங்களப்படத்தைத் தயாரித்த தமிழரான எஸ்.எம்.நாயகம் பற்றிய வரலாற்றுத்தகவல் முதலாவதாக அமைகின்றது.

40 கலையுலக முன்னோடிகளில் ஹென்றி சந்திரவன்ச என்ற ஒரே ஒரு சிங்களக்கலைஞர் பற்றிய வரலாற்றுத் தகவலை இந்நூலில் சேர்த்திருந்தார். அதன் முக்கியத்துவம் என்னவாக இருக்கும் என்ற நோக்கில் பக்கத்தைத் திருப்பிய எனக்கு அங்கே சுவாரஸ்யமான செய்தி காத்திருந்தது. இலங்கையின் முதலாவது தமிழ்ப்படத்தைத் தயாரித்தவர் இவராம். 1951இல் மலையகத்தில் இவர் சமுதாயம் என்ற திரைப்படத்தைத் தயாரித்து பிரத்தியேக தியேட்டரிலும், பாடசாலைகளிலும் காட்டியதாக இதில் செய்தியுள்ளது.

இலங்கை திரையுலக சாதனையாளர்கள் என்ற தலைப்பில் இவரது மற்றொரு நூல் 2007 செப்டெம்பரில் வெளிவந்துள்ளது. இந்நூல் திரைப்படத்துறை தொடர்பான இவரது நான்காவது நூலாகும். முன்னைய மூன்று நூல்கள் போலவே இதுவும் தமிழ் சிங்களத் திரைப்படத்துறையினர் பற்றிக் கூறுகின்றது. கொழும்பு புதுச்செட்டித்தெரு, வித்தியாதீபம்



பதிப்பகம் வெளியிட்டுள்ள இந்நூல் 168 பக்கங்களைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் அட்டைப்பட வடிவமைப்பில் தம்பிஐயா தேவதாஸ் அதிக கவனமெடுக்கவெண்டும் என்று படுகின்றது.

இலங்கைத் திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருந்து செயற்பட்ட தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆகிய மூவினங்களையும் சேர்ந்த கலைஞர்கள் 36 பேரின் பணிகள் பற்றி இந்நூல் பதிவுசெய்திருக்கிறது.




ஆங்காங்கே அக்கலைஞர்கள் தொடர்பான கிடைப்பதற்கு அரிதான கறுப்பு வெள்ளைப் புகைப்படங்களும் காணப்படுகின்றன. நூற்றுக்கு மேற்பட்ட இலங்கைத் திரைப்படத்துறை சாதனையாளர்களில் 36 பேரை மட்டுமே தான் இந்நூலில் பதிவுசெய்திருப்பதாகவும், இன்னும் பலர் பற்றிய தகவல்களுடன் வேறும் நூல்களைத் தான் எதிர்காலத்தில் வெளியிட உள்ளதாகவும் தம்பிஐயா தேவதாஸ் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். இலங்கையின் திரைப்படக் கலைஞர்களை, புதிய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்யும் இவரது முயற்சியின் ஒரு நீட்சியாக இந்நூலின் வருகையை நாம் ஏற்கமுடிகின்றது.

குத்துவிளக்கு: இலங்கைத் தமிழ்த் திரைப்படம்: மீள்வாசிப்பு என்ற நூல் 2010இல் வெளிவந்தது. 1956இல் ஆரம்பிக்கப்பட்ட ஈழத்து தமிழ்த் திரைப்பட முயற்சிகளின் தொடர்ச்சியாக, 1971ம் ஆண்டு இலங்கையின் பிரபல கட்டிடக்கலைஞர் வி.எஸ். துரைராஜா குத்துவிளக்கு திரைப்படத்தைத் தயாரித்தார்.

அது பலத்த தென்னிந்திய திரைப்படங்களுடன் போட்டியிட்டு, 1972இல் திரைக்கு வந்தது. வானம்பார்த்த பூமியை நம்பிவாழும் யாழ்ப்பாணத்து விவசாயியின் பொருளாதாரப் பிரச்சினை, சீதனம், சாதிப்பிரச்சினைகள், கிராமத்துப் பெண்களின் மனதில் உருவாகும் உண்மைக்காதல், பணக்கார இளைஞர்களின் பொழுதுபோக்குக் காதல் எனப் பல்வேறு விடயங்கள் இதில் பேசப்பட்டன. லீலா நாராயணன், ஜெயகாந்த் (நமசிவாயம்) ஆகியோர் பிரதான பாத்திரங்களில் நடித்தனர். தயாரிப்பாளர் வழங்கிய பல்வேறு ஆவணங்களை அடிப்படையாக வைத்து இந்நூல் வழியாக ஈழத்துத் தமிழ்த்திரைப்பட வரலாற்றின் ஒரு பகுதியை தம்பிஐயா தேவதாஸ் ஆவணப்படுத்தியுள்ளார்.




2012 இல் வெளிவந்திருந்த இலங்கை திரை இசையின் கதை என்ற நூல் இவரது ஆறாவது திரைப்பட வரலாற்று நூலாகும். இலங்கைத்தீவின் தமிழ்த் திரை இசையின் கதையைச் சொல்லும் இந்நூல் 30 அத்தியாயங்களில் விரிகின்றது.

திரை இசையின் கதை என்ற அறிமுக இயலைத் தொடர்ந்து 29 தலையங்கங்களும் சமுதாயம், தோட்டக்காரி, குசுமலதா, கடமையின் எல்லை, டக்சி டிரைவர், நிர்மலா, மஞ்சள் குங்குமம், வெண்சங்கு, குத்துவிளக்கு, மீனவப் பெண், புதிய காற்று, கோமாளிகள், பொன்மணி, காத்திருப்பேன் உனக்காக, நான் உங்கள் தோழன், வாடைக்காற்று, தென்றலும் புயலும், தெய்வம் தந்த வீடு, ஏமாளிகள், அனுராகம், எங்களில் ஒருவன், மாமியார் வீடு, நெஞ்சுக்கு நீதி, இரத்தத்தின் இரத்தமே, அவள் ஒரு ஜீவநதி, பாதை மாறிய பருவங்கள், நாடு போற்ற வாழ்க, இளைய நிலா, சர்மிளாவின் இதய ராகம் ஆகிய ஈழத்துத் திரைப்படங்களின் தலைப்புகளின்கீழ் அவ்வத்திரைப் படங்களின் திரை இசை பற்றிய விரிவான பார்வையை இவை பதிவுசெய்கின்றன. இத்திரைப்படங்களின் பாடல்கள் பல இன்று பாதுகாக்கப்படாமல் இல்லாதொழிந்து போன நிலையில் கடினமான தேடலின்பயனாக எழுத்துருவிலாவது அவற்றின் வரலாற்றைப் பதிவுசெய்யும் இந்நூல் வரலாற்று முக்கியத்துவம் பெறும் முதன்மை ஆவணமாகின்றது.

தம்பிஐயா தேவதாஸ் 2016இல் எழுதிய இலங்கை சினிமாவின் ஆரம்பம் இவரது அண்மைக்கால வெளியீடாகும். திரு.தம்பிஐயா தேவதாஸ் தனிமனித வரலாற்றுப் பதிவாளராக எம்மிடையே இன்றும் வலம்வருகின்றார். தனது வாழ்க்கைச் செலவுக்கான தொழிற்பணியுடன், ஆத்ம திருப்திக்கான ஆவணமாக்கற் பணியனையும் தனது தோளில் சுமந்து வருகின்றார். இவருக்கு நிதிரீதியான ஆதரவளிப்பதன் மூலம், இவரது சுமையைக் குறைக்க வேண்டியது எமது தார்மீகப் பொறுப்பாகும்.

**நூலியல்**

**என்.செல்வராஜா**








**"பிட்னெஸ்" நண்பன்**

**மயூ ராஜ்**



'பில்டிங் ஸ்ரோங்க்... பேஸ்மன்ட் வீக்...' இது அனைவராலும் நன்கு அறியப்பட்ட வடிவேலின் நகைச்சுவை வசனம்.

உற்று நோக்கிப் பார்க்கையில், இன்றைய பரபரப்பான நிலையில், காலத்தின் கட்டாய கட்டமைப்புக்குள், கட்டுப்பட்டுபோன நாம், எம்மையே அறியாமல் ஓடிக் கொண்டு இருக்கின்றோம்.

நின்று நிதானமாக பார்க்க ஆவல் இருந்தும், திரும்பிப் பார்க்க நேரமில்லை. ஓடித்திரிந்து உடல் களைத்து, வாடி நின்று திரும்பிப் பார்கையில் 'வயசாகிப் போயிட்டுது....' ' வாடிப் போனிங்கள்....' 'சுகரா?.....' டயப்பெறறிக்கா?.....' 'நரைச்சுப் போயிட்டுது.....'

பொருளாதார தேவைகளுக்கான உழைப்பானது, இன்று உடல் உழைப்பினை தின்றுவிடுகின்றது... எதிர்காலத்தினை நோக்கிய நிகழ்கால ஓட்டம், எதிர்காலத்தில் கடந்து போன இறந்த காலத்துக்கான மீட்டலுமாகிப் போன வாழ்க்கையை மாற்றும் ஒரு புதிய முயற்சி ' புஜம் - பலம் - திடம்'

' உன்னை நேசி....உன் உடலை நேசி, உன் உயிர் வாழும் கோவில் உன் தேகம்'. எங்கோ என்றோ யாரோ ஒருவர் சொல்லக் கேட்டது.... நமது உடலில் நாம் அக்கறை இல்லாமல் இருந்து விட்டு, யாரோ ஒரு மருத்துவரை நாடி, அவர் தரும் அறிவுரைகளைக் கேட்டு, பலனடையா பட்சத்தில், அவர் மேல் ஒரு குற்றச்சாட்டையும் சுமத்தும் இந்தப் பண்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்போமா?

' நன்றே செய்வோம்....அதனை இன்றே செய்வோம்... சூர்யா போன்று சிக்ஸ் பேக் வேண்டும் என்று காதலியின் ஆசையினால் ஜிம்மில் கஷ்டப்படும் ஆண்களையும், நயன்தாரா போல் ஆகவேண்டும் என்ற கனவுடன், மூச்சிரைக்க ஓடும் பெண்களையும் தான் இன்று உடற்பயிற்சிக் கூடத்தில் அதிகம் காணக் கூடியதாக உள்ளது.

' உடற்பயிற்சி ஏன் அவசியம் ?எமது உடல், பல தசை..... என்று நான் சொல்லப் போவதும் இல்லை. அவசியம்! அவ்வளவுதான் !

ஏன் எதற்கு என்பதனைத் தவிர்த்து, எப்படி என்ற ஒற்றை வார்த்தையை மட்டும், இன்று முதல் நாம் பின் தொடர்வோமா?

முதலாவதாக இது சார்ந்து எம்மவர்கள் இடையே காணப்பட்டு வரும் விமர்சனங்களை சற்றே சிலாகித்து விட்டு மேலே செல்வோம்

*01. வயதானால் எல்லாம் போய் விடும்*

*02. விட்டுட்டாங்கள் என்றால் குண்டாகி விடுவார்கள்*

*03. நாங்கள் செய்யுற வேலையே ஜிம் போலத்தான்*



*04. நரம்பு எல்லாம் அசிங்கமாக வெளியே தெரியும்*

*05. ஆண்மை குறைபாடு ஏற்படும்*

இப்படி இன்னும் பல

இவ்வாறான விமர்சனங்கள் யாவும் கற்பனையே. உதாரணமாக கூற்று 01, வயதானால் எல்லாம் போய் விடும். அப்படி என்ன போய் விடும்? மனதில் உறுதியும் உடலில் திடமும் இருக்கும் வரை எதுவும் போய் விட போவது இல்லை. இது முழுக்க முழுக்க பிழையான ஒரு கூற்று, இன்றைய நாட்களில் சமூக வலைத் தளங்களில் வெகு விமர்சையாக பேசப்பட்டுவரும் பிக் பாஸ் நிகழ்ச்சியின் நாயகன் கமல்ஹாசன் அவர்கள் 60 வயது தாண்டியும் திடகாத்திரத்துடனும் பராக்கிரமசாலியாகவும் இருப்பதாக எம்மவர் பலர் சொல்லக் கேட்டது உண்டு. நடிகர் திரு.கமல்ஹாசன் அவர்களே ஒத்துக்கொண்ட விடயம் யாதெனில், சரியான உணவுக் கட்டுப்பாட்டுடன் கூடிய சீரான உடல் பயிற்சி, இந்த இரண்டு விடயமும் தான் தன்னுடைய இளமைக்கு காரணம் என என்று குறிப்பிட்டு இருந்தார்.

கூற்று 02, விட்டுட்டாங்கள் என்றால் குண்டாகி விடுவார்கள். செய்து விட்டு நிறுத்தி விட்டால் குண்டாகி விடுவார்கள், அப்படியானால் இன்று குண்டாக காணப்படும் அனைவரும் ஒரு காலத்தில் பில்டர் - ஆஜானுபாகு வாக இருந்து இருக்க வேண்டும். இதுவும் முழுக்க முழுக்க பிழையான ஒரு தரவு.

கேள்விகளையும் விடைகளையும் தான்தோன்றி தனமாக கூறுவதை விடுத்து சற்றே அலசிப் பாருங்கள் மேலும் இது பற்றி எதிர் வரும் நாட்களில் அலசுவோம்.



## அழகு

அழகு என்பது அரோக்கியம் தொடர்புடையது. ரசாயனப் பொருட்கள் நிறைந்த "மேக் அப்" சாதனங்களை உபயோகித்துதான் அழகாக தெரியவேண்டும் என்பதில்லை. முகத்தில் புன்னகையோடும், தன்னம்பிக்கையோடும் திகழ்ந்தாலே இயற்கையாகவே அழகுதான்.

**நல்ல நித்திரை அவசியம்**

இரவில் நித்திரை சரிவர இல்லாவிடில் காலையில் முகம் வீக்கமடையும். எனவே 7 மணிநேரம் நன்றாக உறங்குங்கள். உடலும், முகமும் புத்துணர்ச்சியாகும். படுக்கைக்கு போகும் போது "மேக் அப்" இணை முழுதாக அகற்ற மறவாதீர்கள்.

**முகத்தினை அடிக்கடி கழுவுங்கள்**

தினசரி 3 மணி நேரத்திற்கு ஒருமுறை உங்கள் முகத்தை குளிர்ந்த நீரால் கழுவுங்கள். இதனால் சருமத்தில் அடைபட்ட அழுக்குகள் வெளியேறுவதோடு சருமத்திற்கு தேவையான "ஆக்ஸிஜன்" கிடைக்கும். முகமும் பளிச்சென்று ஆகும்.

**சருமத்திற்கு ஈரப்பசை**

உலர்ந்த வறண்டுபோன சருமம்தான் அழகுக்கு எதிரி. எனவே சருமத்தை வறண்டு போகாமல் காப்பது அவசியம். அதிகம் தண்ணீர் அருந்துங்கள். சருமத்திற்கு ஆரோக்கியம் தரும் பழங்கள், காய்கறிகளை சாப்பிடுங்கள்.

நவீன வகை கைத்தொலைபேசிகள் &
சிம் காட்கள் தொகையாகக் கொள்முதல் செய்திட






Aayiny Call City
கைத்தொலைபேசி பாவனையாளர்களின் கலங்கரைவிளக்கம்
75,rue Louis Blanc, 75910 Paris | Metro: La Chapelle | Tel : 01 42 09 16 85

# தொழில்நுட்பத்தின் உச்சியில் தமிழன்

உலகில் "கூகுள்" என்னும் சொல் தெரியாத இணையவாசிகள் எவரும் இருக்கமாட்டார்கள். அந்த கூகிள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக சுந்தர் பிச்சை 2015 ஆம் ஆண்டு பதவியேற்றிருந்தார். அவரின் அதீத செயல் முன்னெடுப்பில் கூகிள் நிறுவனம் அதிக வளர்ச்சியை கடந்த இரு ஆண்டுகள் கண்டுள்ளது. சுந்தர் பிச்சை தலைமையின் கீழ் கூகுள் நிறுவனத்தின் விற்பனை அதிகரித்ததோடு, யூடியூப் வியாபாரம் வளர்ச்சியை சந்தித்தது. இதன் பெறுபேறாகவே தற்பொழுது கூகுள் நிறுவனத்தின் தாய் நிறுவனமான ஆல்பபெட் நிறுவனத்தின் இயக்குனர் குழுமத்தில் ஒருவராக பதவி உயர்வு அளித்து கௌரவிக்கப்படுள்ளது.

'கூகுள் தலைமை செயல் அதிகாரியாக சுந்தர் பிச்சை சிறப்பாக செயல்படுகிறார், நிறுவனத்தின் வளர்ச்சி, ஒப்பந்தங்கள் மற்றும் வித்தியாச சாதனங்களை அறிமுகம் செய்வதில் அதிக முனைப்புடன் பணியாற்றி வருகிறார். அவருடன் பணியாற்றுவது மகிழ்ச்சியளிப்பதோடு அவரை ஆல்ஃபாபெட் நிர்வாக குழுவில் வரவேற்றிருப்பது பெரும் ஆவலை ஏற்படுத்தியுள்ளது.' என ஆல்ஃபாபெட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான லேர்ரி பேஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




தமிழகத்தைச் சேர்ந்தவரான சுந்தர் பிச்சை 2004-ம் ஆண்டு முதல் கூகுளில் பணியாற்றி வரும் சுந்தர் பிச்சை அந்நிறுவனத்தின் சார்பில் சுமார் 100 கோடிக்கும் அதிகமான வாடிக்கையாளர்களுக்கு பயன்தரும் சாதனங்களை உருவாக்குவதில் பணியாற்றியுள்ளார். பல்வேறு பிரிவுகளில்பணியாற்றியுள்ளசுந்தர்கூகுள் இணை நிறுவனர்களான லேர்ரி பேஜ் மற்றும் செர்ஜரி ப்ரின் ஆகியோருடன் நெருக்கமாக பணியாற்றியதைத் தொடர்ந்து 2015-ம் ஆண்டு கூகுளின் தலைமை செயல் அதிகாரியாக பணியை துவங்கினார்.


சுந்தர் பிச்சை

அவர் கூகுள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாகத் தொடர்ந்து செயல்படுவார் என்று ஆல்ஃபாபெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

# வந்துட்டேனு சொல்லு, திரும்பி வந்துட்டேனு சொல்லு

உலகம், ஸ்மார்ட் போன்களின் வசப்படும் காலத்தின் முன்; கைத்தொலைபேசிகளின் இராஜவம்சம் என்றால் நோக்கியா கைத்தொலைபேசிகள் தான். ஆப்பிள் ஐபோன், ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட் கைத்தொலைபேசிகளின் அதீத திடீர் வளர்ச்சியிலும் சந்தை ஆக்கிரமிப்பிலும் தனது அரியாசனத்தினை நோக்கியா இழந்தது.




இதன் பின்னர் பல பின்னடைவுகளைச் சந்திந்த நோக்கியா நிறுவனம்; தனது முன்னைய உயர்ச்சிக்கு காரணிகளாக இருந்த விடயங்களை மீளாய்வு செய்து மறுபடியும் உலகச்சந்தைக்குள் களம் புகுந்துள்ளது.

அதிகூடிய மின்பாவனை, உறுதியான தயாரிப்பு, இலகுவான உபயோகம் போன்ற விடயங்களுக்கு பெயர்போன நோக்கியாநிறுவனம், தனது முன்னைய தயாரிப்புக்களில் மக்களிடம் அதிகம் வரவேற்பினைப்பெற்ற கைத்தொலைபேசிகளை மேம்படுத்தி தயாரித்து வருகின்றது.

அந்த வகையில் மக்களால் அதிகம் விரும்பி பயன்படுத்தப்பட்டதும், நோக்கியாவின் மிகவும் பிரபலமான NOKIA 3310 கைத்தொலைபேசியினை சமீபத்தில் விற்பனைக்கு அறிமுகம் செய்திருந்த நிலையில், வாடிக்கையாளர்கள் மத்தியில் அது பெரிதும் வரவேற்பினைப் பெற்றுள்ளது.

2000 ஆண்டில் அறிமுகமான NOKIA 3310, உலகளாவிய ரீதியாக 126 மில்லியன் விற்பனை செய்யப்பட்டது. 2005 ஆம் ஆண்டளவில் அதன் தயாரிப்பு நிறுத்தப்பட்டபோதும் 2017 ஆம் ஆண்டுவரை சிலர் இக் கைத்தொலைபேசியை பயன்படுத்தி வருவது, அதன் நீடிய உழைப்புக்குச் சான்றாகும்.

நோக்கியா நிறுவனம், NOKIA 3310 கைத்தொலைபேசியினை மீண்டும் அறிமுகம் செய்து அனைவரையும் அசத்தியிருந்த நிலையில் தொடர்ச்சியாக ஆண்ட்ராய்ட் ஸ்மார்ட்போன்களையும் விற்பனைக்கு கொண்டுவருவதற்க முயற்சி செய்து வருகிறது. இத்துடன் புகழ்பெற்ற NOKIA 105 மற்றும் NOKIA 130 ஆகிய கைத்தொலைபேசிகளையும் விற்பனைக்கு மீள் அறிமுகப் படுத்தவுள்ளது.





## யூடியூப்புக்கு போட்டியாக முகப்புத்தகத்தின் "வாட்ச்"

யூடியூப்புக்கு போட்டியாக "வாட்ச்" என்ற பெயரில் காணொளி வெளியிடும் சேவையை முகப்புத்தகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து முகப்புத்தகம் வெளியிட்ட அறிக்கையில், "நாங்கள் இப்போது முன்பைவிட உங்களுக்கு விருப்பான நிகழ்ச்சிகளை நீங்கள் காணும் வாய்ப்பை எளிதாக்கியுள்ளோம். இதற்காக வாட்ச் என்ற காணொளித் தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம்" எனக் கூறப்பட்டுள்ளது.

தற்போது வாட்ச் அமெரிக்காவில் குறிப்பிட்ட மக்களிடம் சென்றடைந்துள்ளது. மக்களின் வரவேற்பைப் பொறுத்து இன்னும் நிறைய மக்களை வாட்ச் சென்றடைய வாய்ப்புண்டு என்று கூறப்பட்டுள்ளது.






கொழும்பில் உங்களுக்கான இனிய இல்லங்கள்

# VESTA HOMES

No.32, Vivekananda Road, Colombo 06.

READY FOR OCCUPATION - **END OF 2018**

For Reservation **+44 7 818 433 828 / +44 7 429 072 996**

**VESTA PROPERTY DEVELOPERS (PVT) LTD.**

( A SUBSIDIARY OF VESTA GROUP )

No. 33A - 1/1, W.A.Silva Mawatha, Colombo 06.

Tel: 011 236 7722 | Fax: 011 236 7733 | Email: info@vesta.lk | www.vesta.lk

# ஆசியாவின் 2 ஆவது செல்வந்தர் : முகேஷ் அம்பானி



"நீ என்ன பெரிய அம்பானியா?" என்று திரைப்படங்களிலும், யதார்த்த வாழ்வியலிலும் நகைச்சுவையாக பலர் கூறிக்கேட்டிருக்கின்றோம். அந்த முகேஷ் அம்பானி, ஆசிய அள்வில் இரண்டாவது பெரிய பணக்காரராக உருவாகியுள்ளார்.

*Bloomberg* நிறுவனத்தின் ஆசிய பணக்காரர் பட்டியல் அடிப்படையில் இதுவரை ஆசிய அளவில் இரண்டாவது பணக்காரரான லி-கா ஷிங்கை முகேஷ் அம்பானி முந்தி ஆசிய அளவில் இரண்டாவது பெரிய பணக்காரராக முடி சூடிக்கொண்டுள்ளார். இந்த ஆண்டில் மட்டும் முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 1,210 கோடி டாலர் (இந்திய ரூபாய். 77,000 கோடி) அதிகரித்துள்ளது என்றும் ப்ளூம்பெர்க் குறிப்பிட்டுள்ளது.

இந்தியாவில் குறைந்த வருமான பிரிவினருக்கு தொலைத் தொடர்பு வசதி கிடைக்கும் வகையில் குறைந்த விலைக்கு போன் அளிக்க முகேஷ் அம்பானி இலக்கு வைத்துள்ளார். அவரது முயற்சிக்கு. முதலீட்டாளர்களும் அணிதிரண்டுள்ளனர் என்றும் கூறியுள்ளது.

முகேஷ் அம்பானியின் மொத்த சொத்து மதிப்பு 3,480 கோடி டாலராக (இந்திய ரூபாய் 2.2லட்சம்கோடி) உள்ளது. 2016ம் ஆண்டில் இறுதியில் 29 பணக்காரர்கள் பட்டியலில் 19வது இடத்தில் இருந்தார். ஆனால் தற்போது இரண்டாவது இடத்தில் இருந்த லி-கா சிங்கை முந்தியுள்ளார்.

கடந்த 7 ஆண்டுகளில் தொலைத் தொடர்பு துறையில் இந்திய ரூபாய் 2 லட்சம் கோடி வரை முதலீடு செய்துள்ளார். ஆனால் தொலைத் தொடர்பு துறையிலிருந்து இன்னும் லாபம் ஈட்டவில்லை. ஜியோ நிறுவனத்தின் கடன் குழுமத்தின் மொத்த கடனில் மூன்று மடங்காக உள்ளது. ரிலையன்ஸ் குழுமத்தின் 90 சதவீத வருமானம் பெட்ரோலியம், சில்லரை வர்த்தகம், மீடியா மற்றும் மின்சார துறையிலிருந்து கிடைக்கிறது.

## யாழ் பல்கலைக்கழக கட்டட நிர்மாணிப்பு




யாழ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் உயிரியல் தொகுதி தொழில்நுட்ப பிரிவு என்பவற்றுக்காக புதிய கட்டிடம் மற்றும் மருத்துவ பீடத்திற்கான 08 மாடிகளைக் கொண்ட பயிற்சி கட்டிடம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தங்கள் ஸ்ரீலங்காவின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கொள்முதல் குழுவின் சிபாரிசின் பெயரில் முறையே 424.43 மில்லியன் ரூபா தொகைக்கு மற்றும் 564.67 மில்லியன் ரூபா தொகைக்கு ஒப்பந்தங்களை வழங்குவற்கு ஸ்ரீலங்காவின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



## தக்காளி விலையேற்றம் – போலீசார் பாதுகாப்பு



தாக்காளியே நம்பாது தனக்கு பொலிஸ் பாதுகாப்பா என்று. ஆனால் உண்மை அதுதான்.


இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலத்தில் தாக்காளிச் சந்தைக்;கு ஆயுதம் தரித்த காவல்துறையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

இம்மாநிலத்தில் தக்காளியின் விலை பல மடங்கு ஏறியுள்ள நிலையில், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு கிலோ 100 ருபாய்களுக்கு விற்பனையாகி வருகின்றது. இதேவேளைதக்காளிக்களை காவிவரும் பார ஊர்த்திகளுக்கு ஆறு ஆயுதம் தரித்த காவல்துறையினர் பாதுகாப்பு வழங்கி வருகின்றனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் 2600 கிலோ தாக்காளிகளை காவிவந்த பாரஊர்த்தி ஒன்று தாக்குதலுக்கு உள்ளாகி கடத்தப்பட்ட நிலையிலேயே பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டுள்ளது.

தங்கத்தினை விட தக்காளி மிஞ்சுமா?



19 ஆம் பக்கத் தொடர்ச்சி:

## குருதிக்குள்...

எல்லாரையும் கிளிநொச்சிக்கு கொண்டு போயாச்சு...

அவன் விரக்தியின் உச்சத்தில் இருப்பதை புரிந்து கொண்டேன். இவங்களுக்கு சரியான பாடம் புகட்டோணும். இருந்து பார் தம்பி அண்ண இதுக்கு பதில் சொல்லுவார் அவர் விடமாட்டார்....

தனது கண்முன்னே சாவடைந்த குழந்தைகளை எவ்வாறு அவனால் மறக்க முடியும்? எந்த தலைமுறைக்காக தனது உயிரையும் கொடுக்க தயாராக போராளி ஆகினானோ அந்த தலைமுறை கண்ணுக்கு முன்னால் சிதைந்து போவதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? அவன் விழிகள் கோவத்தில் சிவந்து கிடந்தன. அவனைத் தாண்டி நானும் நண்பனும் பள்ளிக்குள்ளே சென்றோம். அங்கே இறந்து கிடந்த சிறியவர்களை கட்டி அழுது கொண்டிருந்த பெற்றவர்கள் உறவுகளை பார்க்க முடியவில்லை. கடும் வேதனையாக இருந்தது.

ஆரம்ப பள்ளியில் கற்றுக் கொண்டிருந்த இந்த பாலகர்கள் என்ன செய்தார்கள்? ஏன் நாம் சாகடிக்கப்படுகிறோம் என்பதை கூட புரியாத வயது. எதையும் தெரியாமலே அவர்கள் சிதறிக் கிடந்த கோலம் தாங்க முடியாத வேதனையை தந்தது. அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களா? இந்த பிஞ்சு வயசில் எதற்கு இந்த தண்டனை...? மனம் சிந்தித்து கொண்டிருக்க

மச்சான் வா போவம் இங்க நின்று என்ன பண்ணுறது? இதுகளை பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியாது வா போவம் என்கிறான் என் நண்பன். சாவடைந்த குழந்தைகளை தூக்கி கொண்டு உறவுகள் செல்கிறார்கள். அந்த காட்சி மனசை சுக்குநூறாக உடைத்தெறிகிறது.

கொஞ்ச நேரத்துக்கு முன் தான் பள்ளிக்கு படிக்க என்று இவர்கள் தாய் மடியில் இருந்து உணவு அருந்தி இருப்பார்கள். தந்தைக்கு அன்பாக முத்தம் கொடுத்து கை அசைத்து விடை பெற்றிருப்பார்கள். அழகாக தலைவாரி பவுடர் பூசி தன் குழந்தையை அந்த தாய் வழியனுப்பி இருப்பாள். அக்காவும் அண்ணாவும் தங்கையும் தம்பியுமாக நண்பியோடு பயணித்து வந்திருப்பார்கள். ஆனால் இப்போது பிய்த்தெறியப்பட்டு இரத்த சகதியில் கிடக்கிறார்கள். பூத்த பூவை புடுங்கி எடுத்து சாகவைப்பதை போல சிறு நேரத்துக்கு முன் மகிழ்வாக பள்ளிக்கு வந்தவர்கள் உயிரை பறித்தெடுத்தது சிங்கள வல்லாதிக்கம். எம்மினம் எத்தனை வலிகளை சுமப்பது? எதையும் செய்ய முடியாதவர்களாக பரந்தன் ஆரம்ப பள்ளியில் இருந்து நாம் செல்கிறோம்.

பச்சிளம் பாலகர்களை கொன்று குவித்த இந்த சிங்களம் சிறு நேரத்தின் பின் " தமது வான்படையால் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் விடுதலைப்புலிகளின் தளம் ஒன்று முற்றாக அழிக்கப்பட்டதாகவும் ஆறு போராளிகள் கொல்லப்பட்டதாகவும் செய்தி வெளியிடுகிறது. வானொலியினை கேட்க முடியவில்லை நிறுத்திவிட்டு எழுகிறேன். நடாத்திக் கொண்டிருந்த இனவழிப்பு செய்திகளை இருட்டடிப்பு செய்து பயங்கரவாதம் என்ற முத்திரை குத்தி நின்றது, சிங்கள பேரினவாத அரசு. இதை மேற்குலகமும் நம்பிக்கொண்டிருந்தது.

ஐ/நா கூட நடந்து கொண்டிருப்பது இனவழிப்பு என்பதை ஏன் உணர்ந்து தடுக்க முற்படவில்லை என்ற கோவம் மனதில் எட்டிப்பார்த்தது. ஆனால் இந்த மேற்குலகத்தினதும் அண்டை நாடுகளினதும் நிகழ்ச்சி நிரலில் நடத்தப்பட்டு கொண்டிருப்பதே எம் மீதான இனவழிப்பு நடவடிக்கை என்ற உண்மையை உணர்ந்து கொண்டேன்.

இவ்வாறு தான் அன்றும் அறிவிச்சவங்கள். "வள்ளிபுனம் பகுதியில் பெண் போராளிகளின் பயிற்சிமுகாம் மீது வான்படை தாக்குதல் 100 க்கும் மேற்பட்ட பெண் புலிகள் பலி." இந்த எண்ணம் மனதில் ஓடிக்கொண்டிருக்க, இரண்டு வருடங்களுக்கு முன் நடந்த அந்த கொடுமையான சம்பவம் என் கண்முன்னே வந்தது.

"13.08.2006 மாலை அடுத்தநாள் கணனி தொடர்பான பயிற்சி வகுப்பு ஒன்றுக்கான தயார்படுத்தலுக்காக செஞ்சோலை வளாகத்துக்கு ஒருவரோடு சென்றிருந்தேன். "எங்களுக்கு குளிக்கிற தண்ணி தான் அண்ண பிரச்சனையாக இருக்கு மற்றும் படி எல்லாம் சிறப்பா இருக்கு அதை மட்டும் கொஞ்சம் சரிப்படுத்துங்க அண்ணா." முதலுதவி பயிற்சி ஏற்பாட்டாளருக்கு செஞ்சோலை வளாகத்தில் தங்கி இருந்த மாணவிகள் கூறினார்கள். அவர்கள் சந்தோசமாகத் தான் இருந்தார்கள். வீட்டை விட்டு பிரிந்து வந்து பதினைந்து நாட்கள் நிற்க போகிறோமே என்ற வருத்தம் இருக்கவில்லை.

குதூகலத்தோடு தான் சந்தோசமாக இருந்தார்கள். அவர்கள் தமது முதலுதவி பயிற்சியின் மூலம் எம் மக்களுக்கு உடனடி உதவிகளை செய்து சாவின் வீதத்தை குறைக்கலாம் என்று நம்பி இருந்தார்கள். படிப்பும் செய்முறை வகுப்புக்களும் என்று இருந்த அவர்கள் மீது அடுத்தநாள் அதிகாலை சிங்கள பேரினவாதம் கண்மூடித்தனமான தாக்குதல்களை நடாத்துவார்கள் என்று யாரும் நினைக்கவில்லை. இன்றைய நாளைப்போலவே அதிகாலை 7 மணி அன்றைய முதலுதவி பயிற்சிக்காக தயாராகி கொண்டிருந்தார்கள். நித்திரை விட்டு உற்சாகமாக எழுந்து தேநீர் குடிக்க ஓடினார்கள் சிலர் காலைக்கடன்கள் முடிக்க ஓடினார்கள் மற்றவர்கள். எல்லாருமே அன்றைய நாளுக்கான ஆரம்பத்தை உற்சாகமாக தொடங்கி இருந்தார்கள். இரவு உறக்கம் களைந்து எழுந்திருந்த எம் இனத்தின் தலைமுறை தாங்கிகள் மீது இதே வானூர்திகள் தானே தாக்குதல்களை செய்து நிரந்தரமாக உறங்க வைத்தன. என் விழிகள் அன்றைய காட்சியை நினைத்து கரையத் தொடங்கின. அந்த நினைவுகள் அழுகையை கட்டுப்படுத்த முடியாத ரணமானவை.

முதல் நாள் மாலை குதூகலமாக கதைத்து சென்றவர்கள் சிதறி கிடந்த கொடுமையை எவ்வாறு சொல்வது? அங்கே கிளை பரப்பி நின்ற மரங்கள் கூட எம் மாணவ செல்வங்களின் சிதறல்களை தாங்கி நின்ற கோலம் நினைக்கவே முடியாதது.

திரும்பும் இடமெங்கும் இரத்த சிதறல். கால் கை என்றும் உடலின் எந்த பகுதி என்று கூட இனங்கான முடியாத அளவுக்கு பிய்ந்துபோன உடல்கள். ஒரே வயது, ஒரே உணர்வு, ஒரே எண்ணங்கள் என்று கல்வியோடு தேசத்தை நேசித்த அவர்கள் சிதறிப்போன அந்த நாளை எவ்வாறு நாம் மறப்பது? சிதறிய உடல் துண்டுகள் மரங்களில் தொங்கி கொண்டிருந்தன. அங்கவீனமான மாணவிகளின் உடல் துண்டுகள் காணாமல் போயிருந்தன. வயிற்று காயத்தோடு தன் மைத்துனியை இழுத்து கொண்டு ஓட முனைந்த என் ஒன்றுவிட்ட தங்கையின் வகுப்புத் தோழி இரண்டு கால்களும் இழந்து மடிந்து கிடந்த கொடுமையை எப்படி நினைப்பது. எங்கு கண்டாலும் அண்ணா என்று அன்பாக அழைக்கும் அவள் இறந்து கிடந்த கொடுமை தாங்க முடியாது இருந்தது.

ஒரே வீட்டில் கூட பிறந்தவர்களும் உறவுகளும் நண்பிகளும் என்று கூடி சந்தோசமாக இருந்த அந்த காலை பொழுது அவர்களை அழிக்க எதிரி திட்டமிட்டு செய்து முடித்தான். செஞ்சோலை வளாகமே சிதைக்கப்பட்டு முற்றுமுழுதாக அழிக்கப்பட்டிருந்தது. செஞ்சோலை வளாகம் 54 மாணவிகளின் குருதியை தன் மண்ணில் தாங்கி கொண்டது. காயப்பட்ட மாணவிகளின் ஓலம் இன்றும் என் செவிகளில் இருந்து மறையாமல் ஒலித்து கொண்டிருக்கிறது. எங்கள் பிரதேச மருத்துவமனைகள் அனைத்தும் நிரம்பி வழிந்தன காயப்பட்ட மாணவிகளை காத்திட அனைத்து நிர்வாக கட்டமைப்புக்களும் ஈடுபடுத்தப்பட்டன. ஆனாலும் பல மாணவிகள் மடிந்தே போனார்கள்.

டேய் என்னடா ஆச்சு வண்டிய.இப்பிடி ஓடுறாய் முன்னால வாகனம் வாறது கூடத் தெரியாமல்? நண்பன் கேட்கிறான். திடுக்கிட்டு நிமிர்கிறேன். என்னை சுதாகரித்து கொள்கிறேன். இல்ல மச்சான் இப்பிடித்தானே செஞ்சோலையிலும் பிள்ளையள கொன்றவன்... அவன் மௌனித்து போகிறான். அவன் கரங்கள் மட்டும் இருக்கையில் ஓங்கி குத்தும் ஓசை என் செவிகளில் கேட்கிறது.

பயணம் தொடரும்....

11 ஆம் பக்கத் தொடர்ச்சி:

## முள்ளிவாய்க்கால்...

எனப்பெருமெடுப்பில் பரப்புரை செய்யப்பட்டதால் அங்கு ஏராளமான சிங்களப் பொதுமக்கள் கூடினர். இவர்களுடன் திட்டமிட்டுக் கொண்டுவரப்பட்ட சிங்கள காடையர்களும் காணப்பட்டனர். அன்று மாலையே பொறளையில் இருந்த நாகலிங்கம் ஸ்ரோர்ஸ் மற்றும் சைவ உணவகம் என்பன மீது தாக்குதல்கள் ஆரம்பித்தன.

தெமட்டகொட, நாரஹென்பிட்டி, கொம்பனித்தெரு, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, தெஹிவளை, வத்தளை, கொட்டாஞ்சேனை, மருதானை, மொறட்டுவ, நீர்கொழும்பு என இந்த வன்முறைகள் தமிழர்களை இலக்குவைத்து கொழும்பிலும், அதன் புறநகர்ப்பகுதிகளுக்கும் தீவிரமாகப் பரவின..

இதற்கு முன்னதாக திருநெல்வேலித் தாக்குதலையடுத்து வீதியில் இறக்கப்பட்ட சிங்களப் படையினர் மேற்கொண்ட அட்டூழியத்தில் மானிப்பாயில் சிறுவர் உட்பட பழம் வீதியில் ஐம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். கொழும்பில் ஏழு நாட்களாக இடம்பெற்ற தாக்குதல்களில் பல இலட்சம் தமிழ் மக்கள் பாடசாலைகளிலும், வேறு பொது இடங்களிலும் ஏதிலிகளாகத் தஞ்சம் புகுந்தனர். மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் ஸ்ரீலங்கா படையினராலும், சிங்கள காடையர்களாலும் வெட்டியும், கொத்தியும், குத்தியும், அலவாங்குகளால் அடித்தும், பொல்லுகளால் தாக்கியும் கொல்லப்பட்டனர்.

தமிழ் பெண்கள் பாலியல் வன்தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டதுடன், பலர் எரியும் நெருப்புகளில் உயிருடன் தூக்கி வீசப்பட்டனர். தமிழர்களின் வர்த்தக நிலையங்கள், வீடுகள் மற்றும் உடமைகளைத் தீக்கிரையாக்கிய காடையர்கள் மேலும் பல வீடுகளையும், உடமைகளையும் தமதாக்கிக் கொண்டனர்.

தமிழர்களின் பல நூறு மில்லியன் பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன. இவை போதாது என்று வெலிக்கடைச் சிறையில் இருந்த ரெலோ இயக்கத் தலைவர்களான குட்டிமணி, தங்கத்துரை, ஜெகன் மற்றும் தேவன் உள்ளிட்ட பலரைப் படுகொலை செய்யும் இரகசிய திட்டம் ஒன்றுடன் பிரதான இனவாத அமைச்சர்கள் சிலர் வெலிக்கடைச் சிறைக்கு ஜே.ஆர் அரசால் அனுப்பி வைக்கப்பட்டனர்.


05 ஆம் பக்கத் தொடர்ச்சி:

## எதிர்க்கட்சித்தலைவர்...

மக்கள் எனக்கு வாக்களித்தனர். அந்த விஞ்ஞாபனத்தில் தாயகம், சுயநிர்ணயம், இறைமை பற்றியெல்லாம் எழுத்தில் வடித்தவர்கள் அவர்கள்தான். ஆனால், தேர்தல் அறிக்கை என்ற பெயரில் தான் வெளியானது. நானும் அதற்குப் பொறுப்பு.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியவற்றை அவர்கள் (சுமந்திரனும் சம்பந்தனும்) கைவிட்டாலும் நான் விடமுடியாது. தாங்கள் கைவிடும்போது நானும் அவற்றைக் கைவிட வேண்டும் என அவர்கள் எதிர்பார்த்தால் அது தவறு. நான் அதற்கு இணங்கவே மாட்டேன். எங்கள் கொள்கைகளில் எங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாம் மக்களுக்குக் கூறிய விடயங்களில் உறுதியாக நிற்கவேண்டும்" என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுவரை காலம் நடைபெற்றுவந்த அரசியல், ஆயுத போராட்டங்களின் இலக்கிற்கும், தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் எதிராகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்கட்சி தலைவருமான இரா. சம்பந்தன் அவர்களின் உரைக்கு எதிராக தாயகம், புலம்பெயர்சார் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.


புதிய மெருகோடு
புதிய நிகழ்ச்சிகளோடு
உங்கள் இல்லம் நாடி வருகிறது
IBC தமிழ்
செய்மதியில் IBC தமிழைக்
கண்டு களிக்க
புதிய அலைவரிசை
Satellite :
Euro Bird (Eutelsat 9B)
Frequency 11919 Vertical
S/R 27500 | FEC 3/4









# திறனாளிகள்!

நீண்ட பயணத்தில் இரண்டாவது வருடம்; தமிழ் மாற்றுத்திறனாளிகள் விளையாட்டு விழா 2017!

சிறுவர்களுக்கான அஞ்சல் ஓட்டப்போட்டியில் ஓடிய ஒரு சிறுவனிடம் போய் " உங்கள் அணிதான் வென்றது. வாழ்த்துக்கள் என கை கொடுத்தேன். அதற்குள் அந்த சிறுவனின் ஆசிரியர் ஒருவர் ஓடி வந்து நான் கூறியதை சைகை மொழியில் மொழி பெயர்த்தார். சந்தோசத்தில் துள்ளிய அவன் உடனே நன்றி என சைகை மூலம் கூற அதுவும் எனக்கு மொழி பெயர்க்கப்பட்டது. அவன் தனது சந்தோசத்தை தாயிடன் கூறினான். அது ஒரு கொண்டாட்டமாக இருந்தது. காட்சியில் களிப்பு இருந்தாலும் அந்த சிறுவன் ஒரு வாய் பேச முடியாத ஒரு மாற்றுத் திறனாளி என்பது ஒரு யதார்த்தமான உண்மை. சோகங்களை மறந்து தாயும் மகனும் வெற்றியை கொண்டாடினார்கள்.

இது நடந்தது மட்டக்களப்பில், மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழாவில்...

யாழ்ப்பாணத்தில் நடந்த விழிப்புலன் பாதிக்கப்பட்டோருக்கான சத்தப்பந்து கிரிக்கட் போட்டியில் உதயம் அணி வென்றது. அதனை அவர்கள் ஒரு கானா பாடல் பாடி ஆடி கொண்டாடினார்கள். மற்ற அணியினரில் ஒருவர் " இது ரொம்ப ஓவர் " என்று அப்பாடல்களை நிறுத்துமாறு நட்புடன் கோபப்பட , பாடல்களின் சத்தம் கூடியதே தவிர அது குறையவில்லை.

இந்த பாடல்களையும் ஆடல்களையும் பலர் தமது கைத் தொலைபேசியில் பதிவாக்கினார்கள். அது முகப்புத்தகத்தில் உடனடியாகவே பதிவானது.

இவை எல்லாம் தமிழ் மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழாவில் நடந்த சில பதிவுகள்.

ஆயிரக்கணக்கான மாற்றுத்திறனாளிகள், நூற்றுக் கணக்கான போட்டிகள் என பிரமாண்டமாக நடைபெற்றது தமிழ் மாற்றுத் திறனாளிகள் விளையாட்டு விழா. ஐ.பி.சி தமிழ் , *DATA* , நம்பிக்கை ஒளி ஆகியவை இணைந்து இந்த விளையாட்டு விழாவை நடாத்தின.

இந்த போட்டிகளில் தலைமை உரை ஆற்றிய *DATA* அமைப்பின் பணிப்பளர்களில் ஒருவரும், மட்டக்களப்பு மாற்றுத் திறனாளிகளின் ஒன்றியத்தின் தலைவருமான திரு சி.பரமானந்தனின் உரையில் ஒரு சில பகுதி:

ஒரு மாற்றுத் திறனாளியின் மன ஓலமும், மன வைராக்கியமும் இதில் ஒலிக்கின்றது.

இந்த போட்டிகளை மாற்றுத்திறனாளிகளே ஒருங் கிணைக்கின்றனர் என்பது இப்போட்டிகளின் சிறப்பியல்பாகும். அங்கங்கள் அறுபட்டு அல்லலுற்று வாழும் ஒரு சமூகக்கூட்டம் இந்த பிரம்மாண்டமான விழாவை ஒருங்கிணைக்கின்றது. இதனை சாதாரன விளையாட்டுப் போட்டிகளைப் போல கருதிவிட முடியாது.

பல்வேறு சவால்களுடன் வாழும் மாற்றுத்திறனாளிகள் இந்த மைதானத்தில் நிற்கின்றார்கள். இவர்கள் போட்டிகளில் பயிற்சி பெற்று போட்டிகளில் பங்கேறி பரிசில்களை பெற்றது மட்டுமல்லாமல் இலங்கை தேசிய அணியிலும் விளையாட்டு வீரர்களாக இடம்பிடித்தமை இந்த தமிழ் பரா விளையாட்டுக்களின் வெற்றியை பறைசாற்றுகின்றது.

மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மாற்றத்தை நோக்கி முன்னோக்கி செல்கின்றோம் என்பதை நாம் இந்த தமிழ் சமூகத்திற்கு சொல்லிக்கொள்வதில் பெருமையடைகின்றோம். இன்னும் வடக்கு கிழக்கு பகுதிகளில் சமூகத்தில் மறைந்து வாழும் மாற்றுத்திறனாளிகளை இந்த மைதானத்திற்கு கொண்டு வந்து









அவர்களது வாழ்விலும் மாற்றத்தை ஏற்படுத்துவது தமிழ் பரா விளையாட்டின் நோக்கமாகும்.

*2016*ம் ஆண்டு நங்கள் ஒரு மாபெரும் விளையாட்டுப்போட்டியைய நடத்தினோம். வடக்கிலும் கிழக்கிலும் வாழும் அனைத்து மாற்றுத்திறனாளிகள் பங்குகொள்ளும் ஒரு விளையாட்டுப் போட்டியினை நடத்தினோம். அது ஒரு சாதாரண விளையாட்டாக கருதிவிட முடியாது. அது எங்களை, எங்களை போன்றவர்களை ஒரு மைதானத்துக்குள் கொண்டுவந்தது. எமது வாழ்வில் அடுத்த கட்டத்தை நோக்கி செல்வதற்கு ஒரு உந்துகோலாக இருந்தது.

எமது நிலை குறித்து எமது சமூகத்திடம் முதலில் சொல்வதற்கு அந்த விளையாட்டுப்போட்டி உதவின.

இந்த போட்டிகளை நாமே தலைமை ஏற்று நடாத்தினோம், நாமே அவற்றை ஒருங்கிணைத்தோம். இயலாதவர்கள் , ஏலாதவர்கள், அங்கம் இழந்தவர்கள் என்ற நிலை மாறி வருவதை நாம் உணர்கின்றோம்.

ஒருபுறம் மாற்றுத் திறனாளிகள் பலர் நல்ல பலன்களை பெற்று , இன்று தாம் சுயமாக தொழில் செய்ய முயல்கின்றார்கள். அவர்களின் சாதனைகளை கண்டு பூரிப்பு அடைகின்றோம். அதேவேளை எந்தவித வாழ்வாதாரமும் இன்றி உழைக்கும் சக்தியும் இன்றி தெருவோரம் யாசித்து வாழும் மாற்றுத் திறனாளி சகோதரர்களுக்காகவும் நாம் இன்று உங்கள் முன்பிருந்து பேசுகின்றோம்.





மாற்றுத் திறனாளிகளுக்கான திணைக்களங்கள் இருக்கின்றன. பல தொண்டு நிறுவனங்கள் இருக்கின்றன. பூமிப்பந்து முழுவதும் எமது உறவுகள் இருக்கின்றார்கள். ஆனாலும் இன்னமும் பல மாற்றுத் திறனாளிகள் வாழ்வு இருண்ட சூனியமாக இருக்கின்றமை கவலை தருகின்றது. நம்மில் எத்தனை மாற்றுத் திறனாளிகள் இருக்கின்றார்கள்? அவர்கள் எப்படி இருக்கின்றார்கள்? அவர்களுக்கு வாழ்வு இனி எப்படி செல்லப்போகின்றது... இவை விடை தெரியாத கேள்விகளா ? இல்லை விடை வேண்டாம் என்று விடப்பட்ட கேள்விகளா...

இவ்வாறு நொந்து வெந்து வாழும் ஒரு சமூகக் கூட்டம் அதன் அடுத்த படிநிலை நோக்கி செல்கின்றது. நாம் ஒரு பேசு பெருளாக வரவேண்டும். மாற்றுத் திறனாளி ஒரு பேசு பொருளாக வரவேண்டும். கேள்விகளும் பயணங்களும் தொடரும்...

*– சம்பந்தன் சிவபாதவிருதயர்*












## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 09.10.1936

உதிர்வு 31.07.2017

உலகத்தமிழர் விருது வென்ற, தமிழறிஞர், வெற்றிவேல் செல்லையா குணரட்ணம் அவர்களின் மறைவு தமிழுக்கும், யேர்மனி வாழ் தமிழர்களுக்கும் பேரிழப்பாகும்.

தமிழுக்கும், தமிழர் வாழ்வுக்கும், கலைகலாச்சார விழுமியங்களுக்கும், தன்னாலான நற்பணிகளை ஆற்றியவரும், பன்னாட்டுதமிழுறவு மன்ற மாநாட்டை பேர்லினில் திறம்பட நடாத்தியவரும், சிறந்த எழுத்தாளருமான, அமரர் செல்லையா குணரட்ணம் அவர்கள் எம்மைவிட்டு மறைந்து சென்றது எம்மனைவரையும் மீளாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னார் ஈழத்தமிழர் நலன்புரிக்கழகத்தின் முன்னைநாள் தலைவரும், தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும், உ.த.பண்பாட்டியக்கத்தின் பேர்லின் கிளைத்தலைவராகவும் திகழ்ந்தவர்.

இவரின் இழப்பால துயருறும் குடும்பத்தினருக்கும் ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உ.த.பண்பாட்டியக்கம்

## துயர்பகிர்வு

### திருமதி உலகநாயகி சிவப்பிரகாசம்



மலர்வு 12 .02.1929

உதிர்வு 07.08.2017

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட உலகநாயகி சிவப்பிரகாசம் அவர்கள் 07-08-2017 திங்கட்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற கார்த்திகேசு, இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வீரசிங்கம், தெய்வானை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவப்பிரகாசம்(இளைப்பாறிய கலால் அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும், ஷியாமளா, சிவரஞ்சித், சிவகுமார், சிவராஜ், சிவரவீன் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற தங்கரட்ணம், சோமசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரவிச்சந்திரா, மோகனா, துஷித்தா, சாந்தி, கவிதா ஆகியோரின் அன்பு மாமியும், சாந்தினி, ஷாமினி, காமினி ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும், சஞ்சீவ், ரஜீவ், சமரன், ஐஸ்வினி, மதுரன், நிலா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், றுவிங்கா, மேவான் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும், காலஞ்சென்ற மகாதேவா, ராஜேந்திரம், காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

<u>வீட்டு முகவரி:</u>
*79 Roughfield Crescent, Scarborough, ON M1S 4K3, Canada.*

தகவல்
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு
ஷியாமளா +17812550050
குமார் +14163218320
ரவீன் +19052393774
ரஞ்சித் +447850648395
ராஜ் +16478546521

# வேலை வாய்ப்பு



ஜெர்மனியில், தமிழ் நன்கு தெரிந்த, ஜேர்மனிலும் உரையாடக்கூடிய, விற்பனைத் துறையில் பலவருட முன்னனுபவங்களைக் கொண்ட ஆளுமையுள்ள இருவருக்கு பன்னாட்டு நிறுவனத்தில் வேலைவாய்ப்பு காத்திருக்கின்றது.

**பணி:** நிறுவனத்தின் வியாபாரத்தினை ஜேர்மன் நாட்டில் வளர்க்கும் அதிகாரியாகவும், எமது மொத்த சில்லறை வியாபாரிகளின் தொடர்பாளராகவும், எமது பொருட்களின் சந்தைப்படுத்தல், விநியோகம், விற்பனை போன்ற விடயங்களை ஆளுமையுடன் செயல்படுத்துவது.

**தேவையான தகுதி:**
தமிழ் / ஜேர்மன் மொழி அறிவு | தமிழர் மொத்த, சில்லரை வியாபாரிகளின் தொடர்பு | விற்பனைத் துறை முன்னனுபவம் | வாகன சாரதிப் பத்திரம் | ஜேர்மன் நாட்டிற்குள் பயணம் புரிய தயார் | தமிழர் அமைப்புக்கள் சார் முன்னறிமுகம் இருத்தல் நலம்

**கொடுப்பனவு :**
மாதாந்த சம்பளத்துடன், விற்பனையின் பெறுபேறுகளின் அடிப்படையில் மேலதிககொடுப்பனவு.

paththirikai@ibctamil.com என்னும் மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரத்தினை *10/09/2017* முதல் JD/LP-DE1983 என்னும் குறிப்புடன் அனுப்பிவையுங்கள்.

## ஜேர்மனி – தமிழ் வர்த்தகர் சங்கப் பொதுக்கூட்டம்

ஜேர்மனி - தமிழ் வர்த்தகர் சங்க நிர்வாகத்தினை சீரமைப்பது குறித்து 16.07.2017 அன்று திரு .ஞானேஸ்வரன் தலைமையில் எடுக்கப்பட்ட முடிவுக்கு இணங்க, ஜேர்மனி - தமிழ் வர்த்தகர் சங்கத்தின் மாபெரும் பொதுக்கூட்டம் எதிர்வரும் 10.09.2017 அன்று *Rheinische Str - 76, 44137 Dortmund* இல் கூட்டப்படவுள்ளது. ஜேர்மனி -தமிழ் வர்த்தகர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளார்.

இக்கூட்டத்தில் ஜேர்மன் வாழ் அனைத்து வர்த்தகர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஜேர்மனி - தமிழ் வர்த்தகர் சங்கம்

**வரி விளம்பரங்கள்**

ஐரோப்பா முழுவதும் பிரசுரிக்கப்படும் ஐபிசி தமிழ் பத்திரிகையில் உங்கள் வரி விளம்பரங்களை இட்டுப் பயன் பெறுங்கள்.

**வீடு விற்பனை** Ref - 1508-1

தாயகம் கரவெட்டி பகுதியில் புதிதாக ஐரோப்பிய வசதிக்கு ஏற்ப கட்டப்பட்ட 5 அறைகள் கொண்ட வீடு- பெரும் காணியுடன் விற்பனைக்கு உண்டு.

**மணமகள் தேவை** Ref - 1508-2

பிரான்ஸ் வதிவிட உரிமையுள்ள 36 வயது நிரம்பிய நிரந்தர வேலை உள்ள ஆண்மகனுக்கு 27 - 33 வயதுள்ள வாழ்க்கைத்துணை தேடல்.

**மணமகள் தேவை** Ref - 1508-3

பிருத்தானியாவில் நிரந்தர வதிவிட உரிமை பெற்ற 35 வயது நிறைந்த பெண்ணுக்கு வாழ்க்கைத்துணை தேடல். உத்திரட்டாதி 2 ஆம் பாதம் 7 இல் செவ்வாய் குற்றம் உண்டு.

வரி விளம்பரதாரருடன் தொடர்பு கொள்ள விளம்பரக் குறியீடுகளை எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வையுங்கள்.


# ஐபிசி தமிழ் பத்திரிகை

## உங்களைத் தேடி உங்கள் வீடுவரை!




நீங்கள் தேடித் செல்லும் முன் தீர்ந்து விடுகின்றதா? அல்லது வெளியீட்டின் சூடு ஆறுவதற்குள் உங்கள் வீட்டில் இருந்தபடியே பக்கங்களைப் புரட்டி, ஐபிசி தமிழ் பத்திரிகையில் மூழ்கவேண்டுமா? கவலை வேண்டாம்!

இனி ஐபிசி தமிழ் பத்திரிகை உங்களைத் தேடி உங்கள் வீடு வரத் தயார் !

தபால் சேவைக்கான பணத்தினை மாத்திரம் செலுத்துவதன் மூலம் ஐபிசி தமிழ் பத்திரிகை பிரத்தியோகமாக உங்களுக்காகத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு எம்மைத் தொடர்புகொள்ளவும்.



Lebara play
SUPPORT ANTI-PIRACY
100% LEGAL
HD/SD QUALITY
Watch live cricket on Lebara Play
IND VS SL
LIVE AND EXCLUSIVE ON
SONY MAX
BOARD OF CONTROL FOR CRICKET IN INDIA
Sri Lanka Cricket
26TH JULY - 6TH SEPTEMBER
7 DAYS CATCH UP AVAILABLE
Your favourite TV channels
Radio channels now available on Lebara Play
For sales enquiries call us on +44 203 608 0298 or visit play.lebara.com
HD
Dual Band Wi-Fi
HDMI
Cricket live matches exclusively available on Sony Max HD on Lebara Play platform from 26th of July until 6th of September. It will be also airing on MAX HD in UK and MAX in Europe.
For full terms and conditions visit lebara.com/global/en/additional/terms-conditions/play. ™STAR Television Productions Limited and is used under license. All rights reserved.
App Store
Google play




# ஒசாமா பின்லேடனை கொலைசெய்த நபர்


உலகப் பயங்கரவாதியாக மேற்குலகினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்த ஒசாமா பின்லேடனை துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற அமெரிக்க இராணுவ அதிகாரி தனது மௌனத்தினை கலைத்துள்ளார்.



அமெரிக்கக் கடற்படையில் அதிகாரியாக இருக்கும் இவரின் பெயர் ராபர்ட் ஓ நீல். தன்னால் சுடப்பட்ட மூன்று குண்டுகளாலேயே ஒசாமா இறந்துள்ளதாக கூறியுள்ள இவர் தனது கள அனுபவத்தினை புத்தகம் ஒன்றின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது : பின்லேடனை கொல்லும் திட்டத்துக்காக நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டோம். இந்த யுத்தத்தில், நாடு திரும்புவோமா இல்லை சிக்குவோமா என்ற சந்தேகமும் இருந்தது. ஆனால், வீரர்களாகிய நாங்கள் எதற்கும் தயாராகவே இருந்தோம்.

இந்த தாக்குதலுக்கு இரண்டு உலங்கு வானூர்த்திகளில் கிளம்பினோம். முக்கிய நடவடிக்கையில் இருந்தவர்களுக்கு ஒரு உலங்கு வானூர்தியும் பயணத்தின் போது தேவைப்படும் எரிபொருளைக் கொண்டு வருவதற்கென மற்றொரு உலங்குவானூர்த்தியும் நியமிக்கப்பட்டிருந்த்து.




பின்லேடன் இருக்கும் இடத்துக்கு சென்றவுடன் அங்கிருந்த கதவுகளை வெடிகுண்டால் தகர்க்க முயன்றோம். அது போலியான கதவாக இருந்த நிலையில், மற்றொரு கதவை தகர்க்க நினைத்தபோது, அதை திறக்கும்படி உத்தரவு வந்தது. உத்தரவை செயல்படுத்தி உள்ளே சென்றோம், ஒசாமாவை பார்த்துவிட்டோம். எங்கள் குழுவினர் உள்ளே வருவதை ஒசாமா பின்லேடன் பார்த்தார். அந்த சமயத்தில் நாங்கள் கொல்லப்படும் வாய்ப்பும் இருந்தது.

என்னுடன் இருந்த பல கமாண்டோக்கள் இடப்புறமும், வலப்புறமும் பாதையை ஏற்படுத்திக் கொண்டே சென்றார்கள். எனக்கு முன் ஒரு காமாண்டோ சென்றார். அங்கு சிலர் இருந்தனர். முன்புறம் இருந்த திரையை அகற்றியதும், இடுப்பில் கைவைத்த படி பின்லேடன் நின்றுகொண்டிருந்தார்.

பின்லேடனை முதலில் நான் மூன்று முறை துப்பாக்கியால் சுட்டேன். முன்புறத்தில் அவரது மனைவியும், எனக்கு இடப்புறத்தில் பின்லேடனின் மகனும் நின்றார்கள். இருவரையும் படுக்கையில் தள்ளிவிட்டேன்.

அங்கிருந்த ஹார்ட் டிரைவ் மற்றும் இதர எலக்ட்ரானிக் பொருட்களை சேகரித்தோம். என்னுடன் வேறு மூன்று பேரும் அவர்களை அழைத்துக் கொண்டு வெளியே வந்தோம்.

ஒசாமா பின்லேடனை சுட்டது யார் என்று என்னிடம் கேட்டார்கள். என்னுடைய குண்டுகளுக்கு தான் பின்லேடன் பலியானார் என்று சொன்னேன். பிறகு உலங்குவானூர்த்தியில் பின்லேடனின் உடலத்தை வைத்தோம். 90 நிமிடங்களில் பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தான் வந்தடைந்தோம் என அப்புத்தகத்தில் அவர் விபரித்துள்ளார்.

கடந்த 2011ம் ஆண்டு மே மாதம் 2ம் திகதி பாகிஸ்தானில் வைத்து அமெரிக்கா கடற்படையினரின் சுற்றிவளைப்பில் ஒசாமா சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

பின்லேடனை சுட்டது யார் மற்றும் அவர் மீது எத்தனை குண்டுகள் பாய்ந்தது என்ற தகவல்கள் இதுவரை வெளியாக நிலையில் இவரின் புத்தகம் அத்தாக்குதலின் வாக்குமூலமாக அமைந்துள்ளது.

03 ஆம் பக்கத் தொடர்ச்சி

## றுவண்டாவிடம்...

மனிதர்கள் என்ற ரீதியில் தமது கடமையும் பொறுப்பும் என்றும் கேர்ணல் ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

றுவண்டாவின் தற்போதைய இராணுவம் 1994 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனப்படுகொலையின் பின்னரே கட்டியெழுப்பப்பட்டதாகத் தெரிவித்துள்ள கெர்ணல் ஏக்கநாயக்க கடந்த 23 வருடங்களாக றுவண்டா இராணுவம் பல வெற்றிகளைக் கண்டுள்ளதால் அந்த இராணுவத்திடம் தமக்கு ஏராளமான பாடங்களை கற்றுக்கொள்ள முடியும் என்றும் கூறியுள்ளார்.


எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் சபையினால் ஸ்ரீலங்காவில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முடிவுக்கு கொண்டுவரப்பட்ட யுத்தம் தொடர்பில் 2012 ஆம் ஆண்டு நடத்திய விசாரணையின்முடிவில்தமிழ்மக்களை இனப்படுகொலைகளிலிருந்து மீட்பதற்கு சர்வதேச சமூகம் றுவண்டாவில் இடம்பெற்ற இனப்படுகொலைகளில் இருந்தும் பாடங்களை கற்றுக்கொள்ள தவறி விட்டதாக கோடிட்டுக்காட்டியிருந்தது.

குறைந்தபட்சம் ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் மாத்திரம் எழுபதாயிரம் அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் தாருஸ்மன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதேவேளை போரினால் பாதிக்கப்பட்ட தமிழர் தரப்பினால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு அமைய ஸ்ரீலங்காவின் பெரும்பான்மையின சமூகமான சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா அரசு இனப்படுகொலையில் ஈடுபட்டதாக 2014 ஆம் ஆண்டு ஜேர்மனியின் பிரேமன் நகரில் சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற நீதியரசர்கள் தலைமையிலான நிரந்தர மக்கள் தீர்ப்பாயம் முடிவுக்கு வந்திருந்தது.

ஆனால் ஸ்ரீலங்காவின் தற்போதைய ஆட்சியாளர்கள் மாத்திரமன்றி கடந்த ஆட்சியாளர்களும் தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை மாத்திரமன்றி இனச் சுத்திகரிப்பையும் மேற்கொள்ளவில்லை என்று கூறி தம்மீதான குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரித்து வருகின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

TAMIL, GERMAN, ENGLISH
தமிழ், ஜேர்மன், ஆங்கில
மொழி பெயர்ப்புச் சேவை
உங்களது பத்திரங்களை ஜேர்மன், தமிழ், ஆங்கில மொழிகளில் மிகத் துரிதமாகவும் குறைந்த விலையிலும் சத்தியப் பிரமாணம் மற்றும் நீதி மன்றத்தால் அங்கிகரிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளரால் மொழி பெயர்ப்பதற்கு எங்களை இன்றே நாடுங்கள்...!
Velumylum Ramakrishnan
(allg. vereidigter und ermächtigter Übersetzer)
Frohnhauser Straße 211 | 45144 ESSEN
Tel: 0201 / 977 49 57
0201 / 64 50 71
Fax: 0201 / 248 28 88
Handy: 0176/ 28 44 85 89
0176/ 360 62 40
0152/ 119 69 03



SEP 9
2017
THE SSE ARENA
DOORS OPEN @5PM
Vijay Yesudas
Santosh Hariharan
Jithin Raj
Anthony Daasan
Sunitha Sarathy
Vaikom Vijayalakshmi
Vandana srinivasan
Pooja Vaidyanath
Maalavika
Vectone mobile
MUSIC BOSS D IMMAN
LIVE IN LONDON
Lebara play
subara
FOR TICKETS : 07387160338 / 07474046257 / 07438362263 / 07957122065
07496410996 / 07989225518 / 07867911591
PARTNERS
IBC தமிழ்
MIKA EVENTS
DD
MIA Mortgage
TICKETING PARTNER
bluefeather STUDIOS
axs.com


4வது ஆண்டில் காலடி பதிக்கும்
எமது ஸ்தாபனம்
5ஆயிரம் யூரோ பெறுமதியான
பரிசு பொருட்கள்
பரிசு மழை
TKS BEST FOODS
5,000€
வாருங்கள் பரிசில்களை
தட்டிச்செல்லுங்கள்
Nestle
Tilda
TKS
PATAK'S
LEELA
VAANI Foods
Maliban
Niru
+49 231 950 468 83
+49 151 253 004 00
+49 231 950 468 82
info@tks-bestfoods.de
www.tks-bestfoods.de
Rheinische Str.79,44137 Dortmund